THE
SPECIFIC RELIEF ACT

OR

ACT No. I OF 1877.

WITH

TABLE OF CONTENTS

J
365

Madras:

PRINTED AT THE VIYAVAHARA THARUNGINEE PRESS.

1878.

...லுள்ள இந்தியா கவர்னர்ஜனரலவர்களால் செய்யப்பட்ட
...னது கஅ௱எ௵ பிபர்வரிமீ௴ எஉ சிறப்புற்ரோங்கிய கவர்
...களால் அங்கீகரிக்கப்பட்டு, யாவர்க்குந்தெரியும்படி இதனால்
...சய்யப்படுகிறது:—

ACT No. 1 of 1877

கஅ௱எ௵த்திய-க-வது ஆக்ட்டு.

THE SPECIFIC RELIEF ACT, 1877.

கஅ௱எ௵த்து - ஸ்பெஸிபிக் ரிலீப் ஆக்ட்டு என்னும்

குறித்த பரிகார ஆக்ட்டு.

அட்டவணை.

பீடிகை.

க—ம்பாகம்.—பீடிகாவிதிகள்.

பிரிவுகள்.

க. சுருக்கமானபெயர்.
வியாபிக்குமிடம்.
வழங்கத்தொடங்குவது.

உ. சட்டதிட்டங்கள்ரத்து.

ந. அர்த்தம்.

ச. பாதகமில்லையென்பது.

ரு. குறித்தபரிகாரம் கொடுக்கப்படுகிறவிதம்.

சா. செய்யக்கூடாதென்று தடுக்கும்பரிகாரம்.

எ. சிட்சைசம்பந்தமான சட்டதிட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருவதற்காகப்பரிகாரம் கொடுக்கப்படாது.

உ—ம் பாகம்.—குறித்த பரிகாரத்தைப்பற்றி.

க - ம் அத்தியாயம்—சொத்தைஸ்வாதீனப்படுத்திக் கொள்வதைக் குறித்து.

(a.) அசையாப்பொருளின் ஸ்வாதீனம்.

அ. குறித்த அசையாப்பொருளை வரப்பற்றுவது.

கூ. அசையாப்பொருளின் ஸ்வாதீனமிழந்துபோனவருடைய வியாச்சியம்.

(b.) அசையும்பொருளின் ஸ்வாதீனம்.

க0. குறித்த அசையும்பொருளை வரப்பற்றுவது.

பிரிவுகள்.

கக. சொந்தக்காரனுயல்லாமல் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொ... உடனே ஸ்வாதீனப்படுத்திக்கொள்ள பாத்தியதை ஒப்பிக்கும்படியான பொறுப்பு.

உ-ம் அத்தியாயம்.—கந்திராக்ட்டுகளை குறித்தப்படி நிறைவேற்றுவதைப்பற்றி.

(a) குறித்தபடி நிறைவேற்றுவிக்கும்படியான கன்திராக்ட்டுகள்.

கஉ. இன்ன விஷயங்கள் குறித்தபடி நிறைவேற்றுவிக்கத்தக்கவையாகும்.

கங. கொஞ்சமட்டில் விஷயம் அற்றுப்போயிருக்கிற கந்திராக்கட்டுகள்.

கச. கந்திராக்ட்டில் நிறைவேற்றப்படாத பாகம் சொற்பமாயிருக்குமாகில் மற்றபாகத்தைக் குறித்தபடி நிறைவேற்றுவது.

கரு. கந்திராக்ட்டில் நிறைவேற்றப்படாத பாகம் பெரிதாயிருக்குமாகில் மற்ற பாகத்தைக் குறித்தபடி நிறைவேற்றுவது.

கசு. யாதொரு கந்திராக்ட்டிலே வேறொன்றோடு சம்பந்தப்படாமல் பிரிந்திருக்கிறபாகத்தை குறித்தபடி நிறைவேற்றுவது.

கஎ. மற்றவிஷயங்களில் கந்திராக்ட்டின் பாகத்தை குறித்தபடி நிறைவேற்றத்தடை.

கஅ. பூர்த்தியான பாத்தியதையில்லாத விக்கிரயக்காரன்பேரில் கிரயத்துக்குக் கொண்டவனுக்குள்ள சுதந்தரம்.

ககூ. சிலவிஷயங்களிலே பிரிதிபலன்கொடுக்கும்படி தீர்ப்புசெய்ய அதிகாரம்.

உ0. நஷ்டங் கட்டிக்கொடுக்கிறேனென்பதினுலே குறித்தபடி நிறைவேற்றுவதற்கு தடையுண்டாகமாட்டாது.

(b) குறித்தபடி நிவைவேற்றுவிக்கக் கூடாமையான கந்திராக்ட்டுகள்,

உக. குறித்தபடி நிறைவேற்றுவிக்கத்தகாத கந்திராக்ட்டுகள்.

(c) கோர்ட்டார் யுக்தாயுக்தத்தை யோசித்துச்செய்வதைக்குறித்து.

உஉ. குறித்தபிரகாரம் நிறைவேற்றும்படி டிக்கிரியை யுக்தாயுக்தம் யோசித்துச்செய்வது.

(d) இன்னுருக்காக கந்திராக்ட்டுகளை குறித்தபடி நிறைவேற்றுவித்தல்.

உங. குறித்தபடி நிறைவேறலே இன்னுர் அடையலாமென்பது.

(e) இன்னுருக்காக கந்திராக்ட்டுகளை குறித்தபடிநிறைவேற்றுவிக்கக்கூடாமை.

உச. இன்னுர் பரிகாரம்பெறுவதற்குத் தடை.

உரு. பாத்தியதையில்லாதவனுவது வலியப் பொருத்தஞ்செய்கிறவனுவது சொத்தை விற்பதாகச்செய்கிற கந்திராக்ட்டு.

(f.) வித்தியாசப்படுவதை ஏற்றுக்கொண்டே யல்லாமல் இன்னுருக்காக கந்திராக்ட்டுகளை குறித்தபடி நிறைவேற்றுவிக்கக் கூடாமை.

உசு. வித்தியாசப்படுவதை ஏற்றுக்கொண்டேயல்லாமல் நிறைவேற்றுவிக்கக்கூடாது.

(g) குறித்தபிரகாரம் கந்திராக்டடுகளை நிறைவேற்றும்படி இன்னுர்பேரில் அமுல் நடத்தலாமென்பது.

உஎ. கந்திராக்ட்டுசெய்துகொண்ட நபர்கள்பேரிலும் பின்னிட்ட பாத்தியதையினுலே அவர்களை முன்னிட்டுக்கொண்டு தாவாசெய்கிறவர்கள் பேரிலும் பரிகா ந்தேடிக்கொள்வது.

பிரிவுகள்.

(h) குறித்தபிரகாரம் கந்திராக்ட்டுகளை நிறைவேற்றும்படி இன்னார்பேரில் அமுல் நடத்தக்கூடாமை.

உஅ. கந்திராக்ட்டில் சம்மந்தப்பட்ட இன்னாரை நிறைவேற்றச்சொல்லி நிர்ப்பந்திக்கக்கூடாது.

(i) குறித்தபடி நிறைவேற்றுவதைப்பற்றிய வியாச்சியத்தைத் தள்ளிப்போடுவதின் பலன்.

உகூ. தள்ளிப்போடப்பட்டபின்பு தவறிப்போனதற்காக வியாச்சியந் தொடரத்தடை.

(j) பொருத்த ஆதரவுகளை எழுதி முடித்துக்கொடுக்கும்படி தீர்மானமும் உத்தரவுகளும்.

௩0. பொருத்த ஆதரவுகளை எழுதிக்கொடுக்கும்படி தீர்மானங்களுக்கும் உயில் மூலமான உத்தரவுகளுக்கும் முந்தியபிரிவுகளைச் சம்பந்தப்படுத்துவது.

௩-ம் அத்தியாயம்—ஆதரவுகளைத் திருத்துவதைக்குறித்து.

௩க. இன்னபடிக்கானால் ஆதரவைத்திருத்தலாம்.

௩உ. கந்திராக்ட்டில் சம்பந்தப்பட்டவர்களுடைய எண்ணத்தைக்குறித்து நிச்சயம்.

௩௩. திருத்துவதற்குண்டான முகாந்தரங்கள்.

௩ச. திருத்தப்பட்ட கந்திராக்ட்டைக் குறித்தபடி நிறைவேற்றுவிப்பது.

ச-ம் அத்தியாயம்—கந்திராக்ட்டுகளைத் தள்ளிப்போடுவதைக் குறித்து.

௩ரு. இன்னபடிக்கானால் தள்ளிப்போடும்படி உத்தரவுசெய்யலாம்.

௩சூ. பிசகைப்பற்றித் தள்ளிப்போடுவது.

௩எ. குறித்தபடி நிறைவேற்றச்சொல்லி தொடருகிற வியாச்சியத்திலேதள்ளிப்போடும்படிக்கும் கேட்டுக்கொள்வது.

௩அ. தள்ளிப்போடும்படியான பரிகாரம்பெறுகிற கட்சிக்காரனை கோட்டார் நியாயம் நடப்பிக்கச்சொல்லலாம்.

ரு-ம் அத்தியாயம்—ஆதரவுகளை ரத்துசெய்வதைக்குறித்து.

௩கூ. இன்னபடிக்கானால் ரத்துபண்ண உத்தரவு செய்யலாமென்பது.

ச0. இன்ன ஆதரவுகளை கொஞ்சமன்டில் ரத்துபண்ணலாமென்பது.

சக. யார்பட்சத்தில் ஆதரவு ரத்துசெய்யப்படுகிறதோ அந்த கட்சிக்காரனை பிரதிபலன் கொடுக்கச்சொல்லி உத்தரவுபண்ண அதிகாரம்.

சூ-ம் அத்தியாயம்—தன்மை அல்லதுசுதந்தரம் உண்டென்று மாத்திரம் ஸ்தாபிக்கிற டிக்ளேரெட்டொரி டிக்ரிகளைக் குறித்து.

சஉ. தன்மைஅல்லது சுதந்தரம் உண்டென்று மாத்திரம்ஸ்தாபிப்பதை கோர்ட்டார்யுக்தாயுக்தம் யோசித்துச்செய்வது.

பிரிவுகள்:

அப்படி ஸ்தாபிப்பதற்குத்தடை.

௪௩. ஸ்தாபனைத் தீர்மானத்தின்பலன்.

௭-ம் அத்தியாயம்.—ரஸீவர்களை நேமிப்பதைக்குறித்து.

௪௪. ரஸீவர்களை நேமிப்பதை யுக்தாயுக்தம் யோசித்துச்செய்தல்.
சீவில் புரோசீடர் கோட்டுக்குச் சம்பந்தப்படுவது.

௮-ம் அத்தியாயம். சர்க்கார் அலுவல்களை நிறைவேற்று விப்பதைக்குறித்து.

௪௫. சில குறித்தசெய்கைகளைச் செய்யும்படி சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் முதலானவர்களுக்கு உத்தரவுபண்ண அதிகாரம்.

அப்படிப்பட்ட அதிகாரத்தில் நின்றும் நிவாரணை.

௪௬. மனுவுசெய்துகொள்ளுகிறவிதம்.

அதின்பேரில் நடவடிக்கை.

இரண்டிலொருவகை உத்தரவு.

௪௭. கண்டிப்பான உத்தரவு.

௪௮. உத்தரவுகளை நிறைவேற்றுவதும அதுகளின்பெரில் அப்பீலும்.

௪௯. செலவுகள்,

௫௦. மாண்டமஸ் என்னும்கட்டளை பிறப்பிக்கக்கூடாதென்பது.

௫௧. விதிகள் செய்ய அதிகாரம்.

௩-ம் பாகம்.—செய்பக்கூடாதென்று தடுக்கும் பரிகாரம்.

௯-ம் அத்தியாயம்—சாதாரணமாய் இன்ஜங்கிஷன் என்னுங்கட்டளையைக்குறித்து.

௫௨. செய்யக்கூடாதென்று தடுக்கும் பரிகாரம் கொடுக்கப்படுகிறவிதம்.

௫௩. கொஞ்சகாலத்திற்கான இன்ஜங்ஷன் என்னும்கட்டளை.
நிரந்தரமான இன்ஜங்கிஷன் என்னும் கட்டளை.

௧௦-ம் அத்தியாயம்—நிரந்தரமான இன்ஜங்கிஷன் என்னும் கட்டளையைக்குறித்து.

௫௪. இன்னபடிக்கானல் நிரந்தரமான இன்ஜங்கிஷன் என்னுங்கட்டளை கொடுப்பது.

௫௫. உடன்படுத்துகிற கட்டளை.

௫௬. இன்னபடிக்கானல் இன்ஜங்கிஷன் என்னும் கட்டளை கொடுக்கமறுபது.

௫௭. ஒருகாரியம் செய்யாதிருப்பதாக ஏற்பட்டிருக்கிற உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு இன்ஜங்கிஷன் என்னுங்கட்டளை.

ஷிடியூல்—ரத்துசெய்யப்பட்ட சட்டதிட்டங்கள்.

குறித்தபரிகாரத்தின் சில்வகைகளைப்பற்றிய சட்டதிட்டங்களைத்திருத்தி விளங்கச்செய்வதற்கான ஆகட்டு.

சிவில் வியாச்சியங்களிலே அடையத்தக்க குறித்தபரிகாரத்தின் சிலவகைகளைப்பற்றிய சட்டதிட்டிங்களைத் திருத்தி விளங்கச்செய்வது ஆவசிகமாயிருக்கிறபடியால், இதனுல் விதிக்கப்படுகிறதென்னவென்றுல்:—

பீடிகை.

கம் பாகம்—பீடிகாவிதிகள்.

க. இந்த ஆக்ட்டை கஅளஎ௵த்து ஸ்பெஸிபிக்ரிலீப் ஆக்ட்டு என்னும் குறித்தபரிகார ஆக்ட்டென்று சொல்லலாம்.

சுருக்கமானபெயர்.

கஅளச௵த்து கச - வது ஆக்ட்டில் விளக்கச்சொல்லியிருக்கிறபடி ஷிடியூல் தாக்கலானடிஸ்திரிக்ட்டுகள் தவிர இது பிரிட்டிஷ் இந்தியாமுழுமைக்கும் வியாபிக்கின்றது.

வியாபிக்குமிடம்.

இது கஅளஎ௵ மேமீ கடை வழங்கத் தொடங்கவேண்டியது.

வழங்கத்தொடங்குவது.

உ. இதின்பின்னுல் சேர்க்கப்பட்ட ஷிடியூலில் கண்டிருக்கிற ஆக்ட்டுகள் அதின்மூன்றுவது கலத்தில் கண்டிருக்கிற அளவுக்கு அந்ததேதிமுதல் ரத்தாய் விடும்.

சட்டதிட்டங்கள் ரத்து.

ங. இந்த ஆக்ட்டிலே சங்கதியினுலாவது முன் பின் தொடர்ச்சியினுலாவது விரோதமொன்று மில்லாவிட்டால்.

அர்த்தம்.

உடன்பாடு என்பதுசட்டத்தைக்கொண்டு நிறைவேற்றுவிக்கத்தக்கபிரதிகடமையுமென்றும் அர்த்தமாகும்;—

உடன்பாடு என்பதற்கு.

திரஸ்ட்டுஎன்பது - வெளிப்படையாகவாவது குறிப்பாகவாவது அர்த்தம் பண்ணக்கூடியதாகவாவ திருக்கிற நம்பப்படத்தக்க சகலவகை ஆதீனமுமென்றும் அர்த்தமாகும்.

திரஸ்ட்டு என்பதற்கு.

திரஸ்ட்டி என்பது வெளிப்படையாகவாவது குறிப்பாகவாவது அர்த்தம் பண்ணக்கூடியதாகவாவதிருக்கிற நம்பப்படத்தக்க லட்சணமுள்ள பிரதிநபருமென்றும் அர்த்தமாகும்.

திரஸ்ட்டி என்பதற்கு.

திருஷ்டாந்தம்,

(a.) இஜெட்-என்பவன் தான்விடுகிற பூஸ்திதியிலிருந்து-பி-என்பவனுக்கு அவனுடைய ஆயுசவரையில் வருஷவாரி சுகஜீவனம் ரூ - க000-எ-என்பவன்

கொடுத்துவருவானென்பதற்குச் சந்தேகங்கொள்ளாமல் அந்த ஸ்திரியை-எ-என்பவனுக்கு உயில்மூலமாய்க் கொடுக்கிறான். எ-என்பவன் அதை ஏற்றுக்கொள்ளுகிறான். இந்த ஆக்ட்டின்தாற்பரியப்படி அந்த வருஷவாரிசுகஜீவனமட்டுக்கும் எ-என்பவன்- பி - என்பவனுக்கு திரஸ்டியாயிருக்கிறான்.

(b.) எ -என்பவன் நியாயத்திலாவது வைத்தியத்திலாவது ஞானத்திலாவது பி- என்பவனுக்கு யோசனைசொல்லுகிறவனுயிருக்கிறான். எ-என்பவன் அப்படிப்பட்டயோசனைசொல்லுகிற ஹோதாவை அவலம்பித்திருப்பதினாலே அவன், அப்படிக்கில்லாவிட்டால்-பி-என்பவனுக்கு கிடைத்திருக்கக்கூடிய ஏதோ ஒருதிரவியப்பிரயோசனத்தை அடைகிறான். இந்தஆக்ட்டின் தாற்பரியப்படி அப்படிப்பட்ட பிரயோசனத்தைக்குறித்து எ - என்பவன் - பி - என்பவனுக்கு திரஸ்டியாயிருக்கிறான்.

(c.) பி-என்பவனுடைய சாவுகாரராகிய - எ - என்பவன் தன்சொந்தக்காரியநிமித்தம் - பி - என்பவனுடைய கணக்கின்ஸ்திதியை வெளிப்படுத்துகிறான். அப்படி வெளிப்படுத்துவதினாலே அவன் அடைந்தபிரயோசனத்தை குறித்து இந்த ஆக்ட்டின் தாற்பரியப்படி - எ - என்பவன் பி - என்பவனுக்கு திரஸ்டியாயிருக்கிறான்.

(d.) சில வாடகை ஆட்சிகளை கொதுவைவைத்துக்கொண்டவனாகிய-எ-என்பவன் அந்த வாடகையை தன்பெயரால் புதுப்பித்துக்கொள்ளுகிறான். புதுப்பித்துக்கொண்ட அந்த வாடகையைக்குறித்து இந்த ஆக்ட்டின் தாற்பறியப்படி - எ என்பவன் முன்னைய வாடகையில் சுதந்தரமடைந்திருந்தவர்களுக்கு திரஸ்டியாயிருக்கிறான்.

(e.) பல பங்குக்காரர்களில் ஒருவனாகிய - எ - என்பவன்அந்தவர்த்தகக் கூட்டத்திற்காக சரக்குகொள்ளும்படி அமர்த்தப்படுகிறான். எ - என்பவன விலை குறைவாயிருந்தபோது முன்னதாய் தான்வாங்கியிருந்த சரக்குகளை தன் கூட்டுப்பங்குக்காரர்களுக்குத் தெரியாமல் அவர்களுக்கு கடைவிலைப்படி சர்பராசெய்து இவ்விதமாய் அதிகலாபம் சம்பாதிக்கிறான். அப்படி சம்பாதிக்கப்பட்ட லாபத்தைக்குறித்து இந்த ஆக்ட்டின் தாற்பரியப்படி- எ - என்பவன் தன் கூட்டுப்பங்குக்காரர்களுக்கு திரஸ்டியாயிருக்கிறான்.

(f.) பி - என்பவனுடைய நீலதொட்டியின் காரியக்காரனாகிய- எ - என்பவன் அவிரி விரை விற்கிறவனாகிய-சி- என்பவனுக்கு ஏஜெண்டாகி அந்த நீலதொட்டிக்காக - சி - என்பவனிடத்திலிருந்து வாங்கின விரைக்கு - பி - என்பவனுடைய அனுமதியில்லாமல் கமீஷன்பெற்றுக்கொள்ளுகிறான். அப்படிவாங்கிக்கொண்ட கமீஷனைக்குறித்து இந்த ஆக்டின் தாற்பரியப்படி - எ - என்பவன் - பி - என்பவனுக்கு திரஸ்டியாயிருக்கிறான்.

(g.) ஏதோ ஒருநிலத்தை வாங்கிக்கொள்ள - பி- என்பவன் முன்னதாகவே உடன்படிக்கை செய்திருக்கிறானென்று தெரிந்திருந்து -எ-என்பவன் அந்த நிலத்தைக்கொள்ளுகிறான். அப்படிகொண்டநிலத்தைக்குறித்து இந்தஆக்ட்டின்தாற்பரியப்படி - எ - என்பவன் - பி-என்பவனுக்கு திரஸ்டியாயிருக்கிறான்.

(h.) ஒரு நிலத்தை - சி -என்பவன் அனுபவித்துக்கொண்டிருக்கிறானென்று தெரிந்திருந்து - எ - என்பவன் அந்தநிலத்தை - பி - என்பவனிடத்தில் கொள்ளுகிறான். அதில் -சி -என்பவனுக்குள்ள சுதந்தரம் இப்படிப்பட்டதென்பதைக்குறித்து - எ- என்பவன் யாதொரு விசாரணையும் செய்யாமற்போகிறான். அந்தசுதந்தரமட்டுக்கும் இந்த ஆக்ட்டின் தாற்பரியப்படி- எ - என்பவன்-சி- என்பவனுக்கு திரஸ்ட்டியாயிருக்கிறான்.

பொருத்த ஆதரவுஎன்பதற்கு.

பொருத்த ஆதரவுஎன்பது (இந்தியன்சக்செஷன்ஆக்ட்டில்விளங்கச்சொல்லியிருக்கிறபடி உயில் அல்லது உயிலைச்சேர்ந்த உபசாசனமல்லாமல்) அசையும்பொருளிலாவது அசையாப் பொருளிலாவது தொடர்ந்துவருகிற பாத்தியதையை வேறுமனிதருக்கு நிலையாய்நிற்கும்படியாகிலும்மாறிவரும்படி

யாகிலும் எதனால் செய்து ஒழிக்கப்படுகிறதோ அல்லது செய்து ஒழிக்கச் சம்மதிக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட வேறேயாதொருஆதரவென்று அர்த்தமாகும்.

கஅளஉ௵த்திய இந்துதேசத்து கந்திராக்ட்டு ஆக்ட்டில்விளங்கச்சொல்லியிருக்கிற வார்த்தைகளில் எது எது இந்த ஆக்ட்டில் வருகிறதோ அதுகளெல்லாம் அந்தஆக்ட்டில் அதற்குச்சொல்லி யிருக்கிற அர்த்தங்களைக் கொண்டிருப்பதாக எண்ணப்படும்.

கந்திராக்ட்டு ஆக்ட்டிலே விளங்கசொல்லியிருக்கிற வார்த்தைகள்.

பாதகமில்லை என்பது.

ச. மற்றப்படி வெளிப்படையாய் இதில் விதிக்கப்பட்டிருப்பது தவிர இந்த ஆக்ட்டிலுள்ள எந்த நிபந்தனையும்.

(a) கந்திராக்ட்டு அல்லாத யாதொரு உடன்படிக்கை சம்பந்தமாய் பரிகாரத்துக்குயாதொரு சுதந்தரங் கொடுப்பதாகவாவது;

(b) குறித்தபடி நிறைவேற்றுவதுதவிர, யாதொரு கந்திராக்ட்டின்படி ஒருவனுக்குண்டாகும்படியானவேறேபரிகாரத்துக்குயாதொருசுதந்தரத்தை அவனுக்கில்லாமற் செய்வதாகவாவது;

(c) இந்தியன் ரிஜிஸ்திரேஷன் ஆக்ட்டு தஸ்தாவேஜுகளுக்கு வியாபிப்பதை பாதிப்பதாகவாவது, எண்ணப்படாது.

குறித்தபரிகாரம் கொடுக்கப்படுகிறவிதம்.

டு. குறித்தபரிகாரமானது—

(a) ஏதாவது ஒருசொத்தை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு அதை தாவாதாரனுக்கு ஒப்பிப்பதினாலாவது;

(b) உடன்பாட்டின்படி ஒருகட்சிக்காரன் செய்யவேண்டியதாயிருக்கிற அந்த காரியத்தை அவனை செய்யச்சொல்லி உத்திரவு பண்ணுவதினாலாவது;

(c) உடன்பாட்டின்படி ஒருகட்சிக்காரன் செய்யலாகாததாயிருக்கிறதை செய்யாதிருக்கும்படி அவனைத் தடுப்பதினாலாவது;

(d) பிரதிபலன் கொடுக்கும்படியான தீர்மானத்தினாலல்லாமல் மற்றபடி கட்சிக்காரர்களுடைய சுதந்தரங்களை உண்டென்று தீர்மானிப்பதினாலாவது,

(e) ரசிவரை நேமிப்பதினாலாவது, கொடுக்கப்படுகிறது.

சு. ஐந்தாவது பிரிவு (c) உட்பிரிவின்படி கொடுக்கப்பட்ட குறித்தபரிகாரமானது செய்யக்கூடாதென்று தடுக்கும்பரிகாரமென்று சொல்லப்படுகிறது.

செய்யகூடாதென்று தடுக்கும்பரிகாரம்.

சிட்சைசம்பந்தமான சட்டதிட்டங்களை அமுலுக்குக் காண்டுவருவதற்காகப்பரிகாரம் கொடுக்கப்படாது.

எ. சிட்சை சம்பந்தமான யாதொரு சட்டதிட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும் பொருட்டு மாத்திரம் குறித்த பரிகாரம் கொடுக்கப்படமாட்டாது.

உ-ம் பாகம்—குறித்த பரிகாரத்தைப்பற்றி.

க-ம் அத்தியாயம்—சொத்தை ஸ்வாதீனப்படுத்திக் கொள்வதைக் குறித்து.

(a) அசையாப்பொருளின் ஸ்வாதீனம்.

குறித்த அசையாப்பொருளை வரப்பற்றுவது.

அ. குறித்த அசையாப்பொருளின் ஸ்வாதீனத்திற்கு பாத்தியதையுள்ளவன் சிவில்புரோசிடர்கோடில் சொல்லி யிருக்கிறவிதமாய் அதைவரப்பற்றலாம்.

அசையாப்பொருளின் ஸ்வாதீனமிழந்துபோனவனுல்வியாச்சியம்.

க. சட்டத்தின் கிரமமான மார்க்கமாயல்லாமல் மற்றப்படி ஒருவன் யாதொரு அசையாப்பொருளின்ஸ்வாதீனத்திலிருந்து அவனுடைய சம்மதமில்லாமல் நீக்கப்படுவானுகில், அவனுவது அவன்மூலமாய் தாவாசெய்கிற யாவனொருவனுவது ஸ்வாதீனம் தப்பினதேதிமுதல் ஆறுமாசத்திற்குள் வியாச்சியந்தொடர்ந்து, அந்தவியாச்சியத்தில் வேறேயாதொரு ஹக்குஎடுத்துக்காட்டப் பட்டபோதிலும், அதைமறுபடி ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளலாம்.

எவனுவது அப்படிப்பட்ட சொத்துக்கு தனக்குள்ள ஹக்கை ஸ்தாபித். அதை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளுவதற்காக வியாச்சியந்தொடர அவனுக்(இந்தபிரிவினுலே தடங்கலொன்று முண்டாகமாட்டாது.

இந்தப் பிரிவின்படி கவரன்மெண்டார்பேரில் வியாச்சியங் கொண்டுவர கூடாது.

இந்தபிரிவின்படி தொடரப்பட்டயாதொரு வியாச்சியத்தில் செய்யப்பட யாதொருஉத்தரவு அல்லது டிக்கிரியின்பேரில் அப்பீல்பிடிக்கவும்படாது, அ டிப்பட்டயாதொரு உத்தரவு அல்லது டிக்கிரி புனராலோசனை செய்யவொட் ம்படாது.

(b) அசையும்பொருளின் ஸ்வாதீனம்.

குறித்தஅசையும்பொருளை வரப்பற்றுவது.

கo. குறித்த அசையும்பொருளின் ஸ்வாதீனத்திற்கு பாத்தியதையு ன் சிவில்புரொசிடர் கோடில் சொல்லியிருக் விதமாய் அதை வரப்பற்றலாம்.

விவரணம் க.—திரஸ்ட்டியானவர் தான்யாருக்கு திரஸ்ட்டியாயிருக்கிற அந்த நபருக்கு ஹக்கு உண்டாகிய பிரயோசனகரமான சம்பந்தத்துக்காக ெ த்தை சுவாதீனபடுத்திக்கொள்ளுவதற்கு இந்தப்பிரிவின்படி வியாச்சியம் தெ ரலாம்.

விவரணம் உ.—சொத்தை தற்காலம் சுவாதீனபடுத்திக் கொள்ளுவ ண்குடாகிய பிரத்தியேகமானஅல்லதுகொஞ்சகாலத்திற்குரிய பாத்தியதையா து இந்தபிரிவின்படி வியாச்சியந்தொடருவதற்கு போதுமான ஆதாரமாகும்.

திருஷ்டாந்தம்.

(a) எ-என்பவன் பூஸ்திதியை-பி-என்பவனுடைய ஆயுசுவரையில் அவ கும் மிகுதியை-சி-என்பவனுக்கும் உயிலெழுதிவைக்கிருன்.எ-என்பவன் இறந் போகிருன். பி- என்பவன் அந்தபூஸ்திதியில்பிரவேசிக்கிருன், ஆனல்- சி- என் வன்-பி-என்பவனுடைய சம்மதமில்லாமல் அந்த ஹக்குசாசனங்களை சுவாதீ ப்படுத்திக்கொள்ளுகிருன். அதுகளை-பி - என்பவன்-சி - என்பவனிடத்திலிருந் வரப்பற்றலாம்.

(b.) எ - என்பவன் கடனுக்குஈடாக - பி - என்பவனிடத்தில் சிலநகைகளை கொதுவைவைக்கிருன் - பி - என்பவன் அதுகளை விற்கத் தனக்குஅதிகாரமுண்டாவதற்குமுன்னமே அதுகளை விற்றுப்போடுகிருன். - எ - என்பவன் கடன்தொகையைச்செலுத்தாமலாவது வாங்கிக்கொள்ளச்சொல்லிக் காட்டாமலாவது, நகைகளை ஸ்வாதீனப்படுத்தும்படி - பி - என்பவன்பேரில் வியாச்சியந்தொடருகிருன். அதுகளைபத்திரமாய் வைத்திருக்கும்படிசெய்ய- எ-என்பவனுக்கு என்ன பாத்தியதை யிருந்தபோதிலும், அதுகளைஸ்வாதீனம்படுத்திக்கொள்ள அவனுக்கு சுதந்தரமில்லாதபடியால் வியாச்சியம் தள்ளுண்டுபோகவேண்டியது.

(c.) எ -என்பவன் -பி-என்பவனால் தனக்கு மேல்விலாசம் போட்டு அனுப்பப்பட்ட கடிதத்தை வரபற்றிக் கொள்ளுகிருன். அந்தக்கடிதத்தை - எ -என்பவனுடைய சம்மதமில்லாமல் - பி-என்பவன் மறுபடி அடைகிருன். அதை - பி - என்பவனிடத்திலிருந்து -எ -என்பவன் மறுபடி வறப்பற்றிக்கொள்ளும்படியான உரிமை அதில் - எ - என்பவனுக்குண்டாயிருக்கிறது.

(d.) எ - என்பவன் புஸ்தகங்களையும் கடுதாசிகளையும் பத்திரத்துக்காக -பி- என்பவனிடத்தில் வைத்துவைக்கிருன். - பி - என்பவன் அதுகளைப் போக்கடிக்கிருன், சி-என்பவன் அதுகளை கண்டெடுக்கிருன். ஆனல் கேட்டபோது -பி- என்பவனுக்கு அதுகளை ஒப்பிக்கமாட்டேனென்று மறுக்கிருன். ௧௮௭௨ ௵த்திய இந்துதேசத்து கந்திராக்ட்டு ஆக்ட்டு - ௧௬௮ - வது பிரிவின்படி -சி- என்வனுக்கு ஏதாவது பாத்தியதை யுண்டாயிருந்தால் அதற்குட்பட்டு, பி- என்பவன அதுகளை - என்பவனிடத்திலிருந்து வரப்பற்றலாம்.

e) கிடங்குக்காரனுகிய - எ - என்பவனுக்கு சிலசரக்குகளை-இஜெட்- என் வக்கு ஒப்பிக்கும்படி உத்தரவுசெய்யப்படுகிறது, அதுகளை - பி - என்பவன் ன்பவனுடைய ஸ்வாதீனத்திலிருந்து எடுத்துக்கொள்ளுகிருன். அந்தசரக் கு ருக்காக-எ-என்பவன்-பி-என்பவன்பேரில் வியாச்சியந்தொடரலாம்.

சொந்தக் காரனுயல்லாமல் ஸ்வாதீனத்தில் வைத்துக் கொண்டிருப்பவன் உடனேஸ்வாதீனப்படுத்திக்கொள்ள பாத்தியதையுள்ளவனுக்கு ஒப்பிக்கும்படியான பொறுப்பு.

௧௧. எவனுவது அசையாப்பொருளாகிய இன்னதென்கிற சொத்துக்கு சொந்தக்காரனுயிராமல் அதை தன்ஸ்வாதீனத்திலாகிலும் அதிகாரத்துக்குள்ளாகிலும் வைத்துக் கொண்டிருப்பானுகில் அப்படிப்பட்டவனை, அடியில்கண்டிருக்கிறவிஷயங்களிலெதிலாவது,அதை தட்சணம் ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளபாத்தியஸ்தனு யிருப்பவனுக்கு அதைஒப்பிக்கும்படி அதற்குறியவகையாய் நிர்ப்பந்திக்கலாம்; அவை யாவன:—

(a) தாவாசெய்யப்பட்ட பொருள்தாவாதாரனுடைய ஏஜெண்டாகவாவது திஸ்டியாகவாவதுபிரதிவாதியினல்கைக்கொள்ளப்பட்டிருக்கும்போது;

(b.) ரொக்கபிரதிபலனனது தாவாசெய்யப்பட்ட பொருள்நஷ்டத்துக்காக தாவாதாரனுக்கு தகுந்தபரிகாரமாகாதபோது;

(c) அதை இழந்துபோனதினலே நேரிட்டநஷ்டம் இவ்வளவென்றுசரியாய் நிச்சயிப்பதற்கு மிகவும்கஷ்டமாயிருக்கும்போது;

(d) தாவாசெய்யப்பட்டபொருளின் ஸ்வாதீனம் தாவாதாரனிடத்திலிருந்து அக்கிறமமாய் திரான்ஸ்பர் செய்யப்பட்டிருக்கும்போது.

திருஷ்டாந்தம்.

உட்பிரிவு (a) யைக்குறித்து.—யூரோப்புக்குப்போகிற - எ - என்பவன் தான் திரும்பிவருகிறவரையில் தன்னுடைய ஏஜண்டாக-பி-என்பவனுடைய வசத்தில் தன்னுடைய சாமானை வைத்துவிட்டுப்போகிருன், பி - என்பவன் - எ - என்பவனுடைய உத்தரவில்லாமல் அந்த சாமானை - சி - என்பனிடத்தில் கொதுவை

வைக்கிருன், சி-என்பவன் அந்தசாமானைக் கொதுவைவைக்க-பி-என்பவனுக்கு பாத்தியதை யில்லையென்று அறிந்திருந்து அதை விற்பனைக்குப் பிரசித்தஞ்செய் கிருன். அந்தசாமானை - எ - என்பவனுக்கு ஒப்பிக்கும்படி - சி - என்பவனை நிர் ப்பந்திக்கலாம். ஏனெனில் அவன் அதை - எ - என்பவனுடைய திரஸ்ட்டியாக வைத்துக்கொண்டிருக்கிருன்.

உட்பிரிவு (b) யைக்குறித்து.—எ - என்பவனுடைய குடும்பத்தாருதாகவும் அதை வைத்துக்கொண்டிருக்கத்தக்கவன் - எ-என்பவனுகவுமிருக்கிற ஒருவிக்கி ரகத்தை - இஜெட் - என்பவன் ஸ்வாதீனப்படுத்திக் கொண்டிருக்கிருன். அந்த விக்கிரகத்தை-எ - என்பவனுக்கு ஒப்பிக்கும்படி - இஜெட் - என்பவனை நிர்ப்பந் திக்கலாம்.

உட்பிரிவு (c) யைக்குறித்து.—இறந்துபோன ஒருசித்திரக்காரன் எழுதிய ஒரு படத்துக்கும், அருமையான ஒரு ஜதை சீனதட்டுக்கும் எ-என்பவன் பாத்தி யஸ்தனுயிருக்கிருன். அதுகள் - பி - என்பவனுடைய ஸ்வாதீனத்திலிருக்கிறது. அந்தப் பொருள்கள் மிகவிசேஷமான தன்மையுள்ளதைப்பற்றி கடையிலே நிச் சயிக்கக்கூடாதவை. அதுகளை - எ- என்பவனுக்கு ஒப்பிக்கும்படி -பி-என்பவனை நிர்ப்பந்திக்கலாம்.

உ - ம் அத்தியாயம்.—கந்திராக்ட்டுகளைக் குறித்தபடி நிறைவேற்றுவதைப்பற்றி.

(a.) குறித்தபடி நிறைவேற்றுவிக்கும்படியான கந்திராக்ட்டுகள்.

கஉ. இந்த அத்தியாயத்தில் வேறேவிதமாய்சொல்லியிருக்கிறபடிக்குத்த[illegible] யாதொரு கந்திராக்ட்டை குறித்தபிரக[illegible]ம் நிறைவேற்றும்படி கோர்ட்டாருக்கு யுக்த[illegible]மாக த்தோற்றினுல் நிர்ப்பந்திக்கலாம், எப்படிய[illegible]கிரு ந்தாலென்ருல்:—

இன்னவிஷயங்கள் குறி த்தபடி நிறைவேற்று விக்க த்தக்கவையாகும்.

(a) செய்யும்படி ஒப்புக்கொள்ளப்பட்ட காரியமானது முழுதுமாகிலும் கொஞ்சமாகிலும் திரஸ்ட்டு சம்பந்தமாய் நிறைவேற்றும்படியானதா யிருக்கும்போது ;

(b) செய்யும்படி ஒப்புக்கொள்ளப்பட்ட காரியத்தை நிறைவேற்ருமையின லே உண்டான நஷ்டம் இவ்வளவென்றுநிச்சயிப்பதற்குநிறுக்கான திட்ட மில்லாதபோது.

(c) செய்யும்படி ஒப்புக்கொள்ளப்பட்ட காரியமானது அதை நிறைவேற்ரு மைக்காக பிரதிபலனுய் திரவியங்கொடுத்தபோதிலும் தகுந்தபரிகார மாகாததாயிருக்கும்போது.

(d) செய்யும்படி ஒப்புக்கொள்ளப்பட்ட காரியத்தைநிறைவேற்ருமைக்காக பிரதிபலனுய் திரவியங்கிடைக்கமாட்டாதென்று நம்பத்தக்கதா யிருக் கும்போது.

விவரணம்.—விரோதமாக ருஜசுவு செய்யப்படா விட்டாலும் ருஜசுவு செய் யப்படுகிற வரையிலும், அசையாப்பொருளை திரான்சுபர் செய்யும்படியான கந்திராக்ட்டு தவறிப்போவதற்கு ரொக்கப் பிரதிபலனுய் தகுதியாய்ப் பரிகாரஞ் செய்யக்கூடா தென்றும், அசையும்பொருளை திரான்ஸ்பர் செய்யும்படியான கந்திராக்ட்டு தவறிப்போவதற்கு இப்படி பரிகாரஞ்செய்யக் கூடுமென்றும் கோ ர்ட்டார் துணிவுகொள்ளவேண்டும்.

திருஷ்டாந்தம்,

உட்பிரிவு (a) யைக்குறித்து.—எ - என்பவன் ஒரு ஆஸ்தியை - பி - என்பவனுக்காக திரஸ்ட்டில் வைத்துக் கொண்டிருக்கிறான். எ - என்பவன் அந்த ஆஸ்தியை அக்கிரமமாய் விற்றுப்போடுகிறான். அந்த ஆஸ்தி எவ்வளவோ அவ்வளவை பி - என்பவனுக்கு மறுபடியுங் கொடுக்கும்படி சட்டத்தினாலே - எ - என்பவனுக்குக் கடமையுண்டாகிறது, இந்தகடமையைக் குறித்தபிரகாரம் நிறைவேற்றும்படி - பி - என்பவன் நிர்ப்பந்திக்கலாம்.

உட்பிரிவு (b) யைக்குறித்து.—இறந்துபோன ஒரு சித்திரக்காரனால் எழுதப்பட்ட ஒருபடத்தையும் இரண்டு அருமையான சீனத்தட்டுகளையும் கொள்வதற்கு-எ-என்பவனும், விற்பதற்கு - பி - என்பவனும் சம்மதிக்கிறார்கள். அதை நிறைவேற்றாமையினால் உண்டாகும் நஷ்டம் இவ்வளவென்று நிச்சயிப்பதற்கு நிறுக்கான திட்டமில்லாமையைப்பற்றி, அந்த கந்திராக்ட்டை குறித்தபிரகாரம் நிறைவேற்றும்படி-பி-என்பவனை-எ-என்பவன் நிர்ப்பத்திக்கலாம்.

உட்பிரிவு (c) யைக்குறித்து.—ஆயிரம்ரூபாய்க்கு ஒரு வீட்டை - பி - என்பவனுக்கு விற்கிறதாக அவனிடத்தில் - எ - என்பவன் கந்திராக்ட்டுசெய்கிறான். பி - என்பவன் கிரயப்பணத்தைச் செலுத்திவிட்டு, தனக்கு அந்தவீட்டை-எ-என்பவன் விக்கிரயிக்கும்படி டிக்கிரிபெற்றுக்கொள்ள அர்ஹனாகிறான்.

ரெயில்வே கம்பெனியைப்பற்றிய ஆக்ட்டின்படி அவர்கள்செய்யவேண்டிய ல கடமைகளினின்றும் நிவாரணையாகும்பொருட்டு, அந்தக்கம்பேனியார் ரயில்வேயினாலே பிரிக்கப்பட்ட இஜெட் - என்பவனுடைய நிலங்களுக்குச் சேர்கை யுண்டாகும்படி தங்கள் ரெயில்வே மார்க்கத்தில் வளைவு ஊணி வழிஉண்டாக்குகிறதாகவும், ஏதோ குறித்தமுனைகளுக்கு இடையில் பாட்டை ஏற்படுத்துகிறதாகவும் இந்தபாட்டையை செவ்வையாய் வைத்திருப்பதற்காக வருஷவாரியில் ஏதோ ஒருதொகை செலுத்துவதாகவும், இதுவுமல்லாமல் ஒரு சைடிங்கும் ஒரு அணையும் போட்டுக்கொடுப்பதாகவும் கண்டு - இஜெட் - என்பவனிடத்தில் கந்திராக்ட்டு செய்கிறார்கள். அதை நிறைவேற்றுவதில் - இஜெட் - என்பவனுக்குள்ள சம்பந்தத்திற்கு திரவியமூலமாய்த் தகுதியாகப் பிரதிபலன் கொடுக்கக்கூடாமையைப்பற்றி, அவன் அந்த கந்திராக்ட்டைக் குறித்தபடி நிறைவேற்றுவித்துக்கொள்ள அர்ஹனாகிறான்; ஆகையால் வளைவு ஊணின வழியையும் பாட்டையையும் சைடிங்கையும் அணையையும் ஏற்படுத்துவதை மேல்விசாரணைசெய்ய தகுந்தவனொருவனை கோர்ட்டார் நேமிக்கலாம்.

ஏதோ ஓர்வகையான சில ரெயில்வேபங்குகளை விற்பதாக -எ-என்பவனும், கொள்வதாக - பி - என்பவனும் கந்திராக்ட்டு செய்கிறார்கள் - எ - என்பவன் விற்பனையைப் பூர்த்திசெய்யமாட்டேனென்கிறான். பங்குகள் சங்கியை நிறுக்குக்குட்பட்டதாயும் எப்போதும் கிரயத்துக்கு அகப்படாததாயுமிருப்பதினாலும் பங்குகளை உடைத்தாயிருந்தால் உடையவனுக்கு ஒரு பங்குக்காரனுக்குண்டான லட்சணங்கள் சித்திக்கிறபடியினாலும், பங்கில்லாமல் அது சித்திப்பது கூடாமையாலும், இந்தஉடன்படிக்கையை குறித்தபிரகாரம் நிறைவேற்றும்படி - எ - என்பவனை - பி என்பவன் நிர்ப்பந்திக்கலாம்.

பி - என்பவனுக்கு ஒருபடமெழுதிக்கொடுக்க அவனிடத்திலே - எ - என்பவன் கந்திராக்ட்டுசெய்கிறான், அதற்காக ஆயிரம்ரூபாய் கொடுக்கிறதாய் - பி - என்பவன் உடன்படுகிறான். படம் எழுதியாகிறது. ஆயிரம் ரூபாயைச் செலுத்தியாவது வாங்கிக்கொள்ளச்சொல்லி காட்டியாவது அந்தப்படத்தை தனக்கு ஒப்பிக்கும்படி செய்துகொள்ள - பி - என்பவன் அர்ஹனாகிறான்.

உட்பிரிவு (d) யைக்குறித்து.—ஒரு பிராமிசொரிநோட்டை - எ - என்பவன் எண்டாரிசுபண்ணாமல் ஐவேஜுபெற்றுக் கொண்டுமாத்திரம்-பி- என்பவனுக்கு திரான்சுபர்செய்கிறான் - எ - என்பவன் இன்சால் வெண்டாகிறான், அவனுக்கு அசைனியாக - சி - என்பவன் நேமிக்கப்படுகிறான் - எ-என்பவனுடைய பொறுப்புகளுக்கு-சி-என்பவன், ஏற்பட்டிருக்கிறபடியாலும் அந்த பிராமிசொரிநோட்

டை எண்டாரிசுபண்ணுமைக்காக திரவிய பிரதிபலனுக்கு டிக்கிரியானது பிர யோசனமற்றதாகையாலும், அந்தநோட்டை எண்டாரிசுபண்ணும்படி - சி-என் பவனை - பி - என்பவன் நிர்ப்பந்திக்கலாம்.

கரு. இந்தியன் கந்திராக்ட்டு ஆக்ட்டு ருசு-வது பிரிவில் என்ன சொலில் யிருந்த போதிலும், யாதொரு கந்திராக்ட்டு பிற ந்ததேதியில் உண்டாயிருந்த விஷயத்தின் ஓர்பா கமானது நிறைவேற்றப்படுங்காலத்தி விராமல் அற்றுபோயிருப்பதனுலே அந்த கந்திராக்ட்டு நிறைவேற்றப்படுவதற்கு முழுதும் அசாத்திய மாய் விடமாட்டாது;

கொஞ்சமட்டில் விஷயம அற்றுப்போயிருக்கிற கந்தி ராக்ட்டுகள்.

திருஷ்டாந்தம்.

(a.) எ - என்பவன் லட்சம்ரூபாய்க்கு ஒருவீட்டை - பி - என்பவனுக்கு வி ற்பதாக கந்திராக்ட்டுசெய்கிறுன்- கந்திராக்ட்டுசெய்த மறுநாள் காற்றுமழைவி னுல் அந்தவீடு அழிந்துபோகிறது - பி - என்பவனே அந்தகந்திராக்ட்டில் அவனு டையபாகத்தை நிறைவேற்றுவதற்காக கிரயப்பணம் செலுத்தும்படி நிர்ப்பந் திக்கலாம்.

(b.) பி - என்பவனுல் செலுத்தப்படத்தக்க ஒரு தொகையினிமித்தம் அ னுடைய ஆயுசுவரையிலே அவனுக்கு வருஷவாரி சுகசீவனங்கொடுப்பதாக- என்பவன் கந்திராக்ட்டுசெய்கிறுன். கந்திராக்ட்டுசெய்த மறுநாள், பி - என வன் குதிரைமேலிருந்து தள்ளுண்டு மரணமடைகிறுன். அந்தக்கிறயப்பணத்தை ச்செலுத்தும்படி - பி - என்பவனுடைய பிரதிநிதியை நிர்ப்பந்திக்கலாம்,

கச. ஒரு கந்திராக்ட்டில் சம்பந்தப்பட்டிருக்கிறவ னெருவன் அதில் அவனுடைய பாகமுழுமையையும் நிறைவேற்ற க்கூடாத வனுயிருந்து, முழுமையையும் நோக்கு மிடத்து நிறைவேற்ருமல் விட்டுவிடவேண்டிய தாயிருக்கிற பாகமானது பெறுமானத்தில் மிக சொற்பமானதாயும்அதற்குரொக்கப்பிரதிபலன் சரிப்பட்டுப் போவதாயு மிருக்குமாகில், உபயத் திராளில் எவனுவதொருவன் தொடருகிற வியாச்சியத்திலே, கோர்ட்டரர் அந்த கந்திராக்ட்டில் நிறைவேற்றக்கூடுமான தெவ்வளவோ அதை குறித்தபடி நிறை வேற்ற உத்தரவுசெய்து, குறைவுக்கு ரொக்கப் பிரதிபலன் கொடுக்கும்படி தீர் மானிக்கலாம்.

கந்திராக்ட்டில்நிறைவே ற்றப்படாத பாகம்சொற்ப மாயிருக்குமாகில் மற்றபா கத்தைக் குறித்தபடி நிறை வேற்றுவது.

திருஷ்டாந்தம்.

(a.) நூறு பீகாக்களுள்ள ஒருதுண்டு நிலத்தை - எ - என்பவன் - பி - என் பவனுக்கு விற்பதாக கந்திராக்டடுசெய்கிறுன். அந்த நிலத்தில்- கூஅ பீகாக்கள் எ - என்பவனுதும் மற்ற இரண்டு பீகாக்கள் வேறொரு அந்நியனுதுமாயிருக் கிறது, அந்த அந்நியன் அதுகளை விடமாட்டேனென்கிறுன். கூஅ - பீகாக்களை உபயோகிப்பதற்காவது அனுபவிப்பதற்காவது அந்த இரண்டு பீகாக்கள்வேணு மென்கிற அவசியமுமில்லை, அப்படி உபயோகிப்பதற்காவது அனுபவிப்பதற்கா வது அதுகளின் நஷ்டத்தை ரொக்கத்தினுல் சரிப்பத்தக்கூடாமையான அவ்வள வு முக்கியமுமல்ல. பி - என்பவன் வியாச்சியந் தொடர்ந்தால் அவனுக்கு கூஅ- பீகாக்களை விக்கிரயஞ் செய்துவிடும்படிக்கும் மற்ற இரண்டு பீகாக்களை விக்கிர யஞ் செய்யாமைக்காக அவனுக்குப் பிரதிபலன்.கொடுக்கும்படிக்கும் - எ - என் பவனுக்கு உத்தரவுசெய்யலாம்; எ - என்பவன் வியாச்சியங் கொண்டுவந்தால், நிலவிக்கிரயத்தையும்ஸ்வாதீனத்தையும்அடைவதின்பேரில் உடன்படிக்கையான கிரயப்பணத்திலே குறைவுக்காக பிரதிபலனுய் தீர்மானிக்கப்பட்ட தொகையை

கழித்து மிகுதியை - எ - என்பவனுக்குச் செலுத்தும்படி - பி - என்பவனுக்கு உத்தரவுசெய்யலாம்.

(b) ஒருவீட்டையும் நிலங்களையும் இரண்டுலட்சம்ரூபாய்க்குவிற்பதாகவும் கொள்வதாகவும் ஏற்பட்டகந்திராக்ட்டிலே கையாளும் வீட்டுசாமான்களில் சிலவற்றை விலைமதித்து எடுத்துக்கொள்ளும்படி உடன்படிக்கையாயிருக்கிறது அந்த சாமான்களின் விலைமதிப்பைக்குறித்து கட்சிக்காரர்கள் ஏகோபிக்க கூடாமையாயிருந்தபோதிலும் கந்திராகட்டை குறித்தபிரகாரம் நிறைவேற்றும்படி கோர்ட்டார் உத்தரவுபண்ணலாம், மேலும் அந்த சாமானை வியாச்சியத்திலே விலைமதிப்பித்து குறித்தபடி நிறைவேற்றுவதற்கான டிக்கிரியிலே அதைச்சேர்க்கலாம், அல்லது அந்த வீட்டைக்குறித்துமாத்திரம் டிக்கிரிசெய்யலாம்.

கந்திரக்ட்டில் நிறைவேற்றப்படாத பாகம் பெரிதாயிருக்குமாகில் மற்றபாகத்தை குறித்தபடி நிறைவேற்றுவது.

௧௫- யாதொருகந்திராக்ட்டில் சம்பந்தப்பட்ட உபயத்திராளில் ஒருவன் அதில் தன்பாகமுழுமையும் நிறைவேற்றக்கூடாதவனாயிருந்து, நிறைவேற்றாமல் விட்டுவிடவேண்டிய பாகமானது முழுமையிலும் பெரும்பாகமாயிருந்தாலும், ரொக்கப் பிரதிபலன் ஏற்றுக் கொள்ளாததாயிருந்தாலும், குறித்தபடி நிறைவேற்றுவதற்காக டிக்கிரிபெற்றுக் கொள்ள அவன் அர்ஹனாகமாட்டான். மற்றவன் வியாச்சியங்கொண்டுவந்தால், தவறிப்பானவனை அந்த கந்திராக்ட்டில் அவனுடைய பாகத்திலே அவன் நிறைவேற்றக்கூடுமானமட்டில் குறித்தபடி நிறைவேற்றச்சொல்லி கோர்ட்டார் உத்தரவு செய்யலாம், ஆனால் மற்றது நிறைவேறுதலுக்குண்டான சகலதாவாவையும், குறைவுக்காகவாவது பிரதிவாதி தவறிப்போவதினாலே தான் அடைந்த சேதம் அல்லது நஷ்டத்திற்காகவாவது பிரதிபலனுக்குண்டான சகலசுதந்தரத்தையும் வாதி விட்டுவிட்டால்தான் அப்படி உத்தரவுசெய்யக்கூடும்.

திருஷ்டாந்தம்.

(a.) ௧௦௦ - பீகாக்களுள்ள ஒருதுண்டுநிலத்தை - எ - என்பவன் - பி - என்பவனுக்கு விற்பதாக கந்திராக்ட்டுசெய்கிறான். அந்தநிலத்தில் - ௫௦ - பீகாக்கள் - எ - என்பவனுதும், மற்ற - ௫௦ - பீகாக்கள் வேறொரு அந்நியனுதுமாயிருக்கிறது, அந்த அந்நியன் அதுகளை விடமாட்டேனென்கிறான். அந்த கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவதற்காக - பி - என்பவன்பேரில் - எ - என்பவன் டிக்கிறிபெறக்கூடாது; ஆனால் - பி - என்பவன் குறைவுக்காகவாவது - எ - என்பவனுடைய அஜாக்கிரதைஅல்லதுதவறுதலினாலே தானடைந்தநஷ்டத்திற்காகவாவது பிரதிபலனுக்குண்டான சகல சுதந்தரத்தையும் விட்டுவிட்டு,ஒப்புக்கொள்ளப்பட்ட கிரயத்தைச் செலுத்துவதற்கும் - எ - என்பவனுதாயிருக்கிற ௫௦ - பீகாக்களை எடுத்துக்கொள்ளுவதற்கும் இஷ்டங்கொள்ளுவனாகில், பி - என்பவன் கிரயப்பணத்தைச் செலுத்துவதின்பேரில் தனக்கு அந்த - ௫௦ - பீகாக்களை - எ - என்பவன் விற்கும்படி டிக்கிரி பெற்றுக்கொள்ள அர்ஹனாகிறான்.

(b.) வீடும் தோட்டமும் சகிதமாய் ஒரு ஸ்திதியை லட்சம்ரூபாய்க்கு - எ - என்பவன் - பி - என்பவனுக்கு விற்பதாக கந்திராக்ட்டுசெய்கிறான். வீட்டை அனுபவிப்பதற்கு தோட்டம் முக்கியமானது. தோட்டத்தவிற்க - எ - என்பவனுக்குக் கூடாமையாய்விடுகிறது. அந்த கந்திராக்ட்டை குறிந்தபடி நிறைவேற்றுவதற்காக - பி - என்பவன்பேரில் - எ - என்பவன் டிக்கிரிபெறக்கூடாது; ஆனால் பி - என்பவன் குறைவுக்காகவாவது-எ-என்பவனுடைய அஜாக்கிரதை அல்லது தவறுதலினாலே தானடைந்த நஷ்டத்திற்காகவாவது பிரதிபலனுக்குண்டான சகலசுதந்தரத்தையும் விட்டுவிட்டு, ஒப்புக்கொள்ளப்பட்ட கிரியத்தைச் செலுத்துவதற்கும், அந்தஸ்திதியையும் தோட்டமில்லாமல் வீட்டையும் எடுத்துக்கொள்ளுவதற்கும் இஷ்டங் கொள்ளுவானாகில், பி - என்பவன் கிரயப்பணத்தைச் செலுத்துவதின்பேரில் தனக்கு அந்தவீட்டை - எ - என்பவன் விற்கும்படி டிக்கிரிபெற்றுக்கொள்ள அர்ஹனாகிறான்.

யாதொரு கந்திராக்ட்டிலேவேறொன்றோடு சம்பந்தப்படாமல் பிரிந்திருக்கிற பாகத்தைகுறித்தபடிநிறைவேற்றுவது.

கசு. யாதொரு கந்திராக்ட்டின் ஓர்பாகத்தை தனியே எடுத்துக்கொண்டால் குறித்தபடி நிறைவேற்றக்கூடுமானதும்நிறைவேற்ற வேண்டியதுமாயிருக்கிற அந்த பாகமானது அதே கந்திராக்ட்டில் குறித்தபடிநிறைவேற்ற மாளாததாகவாகிலும் நிறைவேற்றக்கூடாததாகவாகிலுமிருக்கிற வேறொரு பாகத்திற்குச்சம்பந்த மில்லாமல்பிரத்தியேகப்பட்டிருக்குமாகில் முந்திய பாகத்தை குறித்தபிரகாரம் நிறைவேற்றும்படி கோர்ட்டார் உத்தரவு செய்யலாம்.

மற்றவிஷயங்களில்கந்திராக்ட்டின்பாகத்தை குறித்தபடி நிறைவேற்றத்தடை.

கஎ. இதற்குமுந்திய கடைசிமூன்று பிரிவுகளில் எதிலாவதொன்றி லடங்குகிற விஷயங்களில்தவிர யாதொருகந்திராக்ட்டின்ஓர்பாகத்தை குறித்தபிரகாரம் நிறைவேற்றும்படி கோர்ட்டார் உத்தரவு செய்யக்கூடாது.

பூர்த்தியானபாத்தியதையில்லாத விக்கிரயக்காரன்பேரில் கிரயத்துக்குக் கொண்டவனுக்குள்ளசுதந்தரம்.

கஅ. குறைவானபாத்தியதை மாத்திரமிருக்கிற ஏதோ ஒருசொத்தை விற்கிறதாகவாவது வாடகைக்கு விடுகிறதாகவாவது ஒருவன் கந்திராக்ட்டுசெய்தால், (இந்த அத்தியாயத்தில் வேறேவிதமாய்ச் சொல்லியிருக்கிற குத்தவிர) கிறயத்துக்குக்கொண்டாவனுக்க வாடகைக்கு வாங்கிக்கொண்டவனுக்காவ யில் கண்டிருக்கிற பாத்தியதைகளுண்டாயிருக்கிறது:—

(a) விற்கிறவனாவது வாடகைக்கு விடுகிறவனாவது அந்த விற்பனைக்கு அல்லது வாடகைவிடுதலுக்குப் பின்னிட்டு அந்த சொத்தில் யாதொரு பாத்தியதை அடைந்தால், அப்படிப்பட்ட பாத்தியதையினாலே அந்த கந்திராக்ட்டைச் சரிப்படுத்தச்சொல்லி அவனை, கிறயத்துக்குக் கொண்டவனாவது வாடகைக்கு வாங்கிக்கொண்டவனாவது நிர்ப்பந்திக்கலாம்;

(b) ஹக்கை ஊர்ஜிதப்படுத்துவதற்கு மற்றவர்களுடைய அனுமதிவேண்டியிருந்து, விற்கிறவன் அல்லது வாடகைக்கு விடுகிறவன் கேட்டுக்கொள்வதின்பேரில் அவர்கள் அப்படிச்செய்ய கடமைப்பட்டவர்களா யிருப்பார்களாகில், அப்படிப்பட்ட அனுமதி வாங்கிக்கொடுக்கச்சொல்லி அவனைகிரயத்துக்குக்கொண்டவனாவது வாடகைக்கு வாங்கிக்கொண்டவனாவது நிர்ப்பந்திக்கலாம் ;

(c) விற்கிறவன் சிக்குசிலுவில்லாத சொத்தை விற்கிறேனென்று சொல்லுவானாகில், கிரயப்பணத்திற்கு அதிகப்படாத தொகைக்கு அந்தசொத்து கொதுவை யிலிருந்து, அதை மீட்டுக்கொள்ளும்படியான பாத்தியதைமாத்திரம் விற்கிறவனுக்கு இருக்கிற பட்சத்தில், அவனைகொதுவை வைத்துக்கொண்டவனிடத்திலிருந்து கொதுவையைமீட்டு ஆதீனம் பெற்றுக்கொடுக்கும்படி கிரயத்துக்குக்கொண்டவன் நிர்பந்திக்கலாம்,

(d) விக்கிறவனாவது வாடகைக்கு விடுகிறவனாவதுகுறித்தபடி கந்திராக்ட்டு நிறைவேறவேண்டியதற்காக வியாச்சியங்கொண்டுவெந்

திருந்து, அவனுடைய குறைவான பாத்தியதையைப்பற்றி வியாச்சியந்தள்ளுண்டு போமாகில், பிரதிவாதி ட்டேவணி ஏதாவது கட்டியிருந்தால், அதைவட்டிசகிதமாய் வாபஸ் பெறுவதற்கும் அவனுடைய வியாச்சியச் செலவுகளுக்கும், அப்படிப்பட்டட்டேவணியையும் வட்டியையும் செலவையுங்குறித்து, விற்கிறதாக அல்லது வாடகைக்கு விடுகிறதாக ஒப்புக்கொள்ளப்பட்ட சொத்திலே விற்கிறவனுக்காவது வாடகைக்கு விடுகிறவனுக்காவ துண்டாயிருக்கிற பாத்தியதையின்பேரில் ஈடுபெறுவதற்கும் பிரதிவாதிக்குச்சுதந்தரமுண்டு.

...ல விஷயங்களிலே பிர...ன் கொடுக்கும்படிதிர்...சய்ய அதிகாரம்.

கக. யாதொரு கந்திராக்ட்டு குறித்தபடிநிறைவேறவேண்டியதற்காகவியாச்சியந் தொடருகிறவனெவனுவது அப்படிநிறைவேற வேண்டியதோடு கூடவாகிலும் அதற்கு வதிலாக வாகிலும் அது தவறிப் போனதற்காக பிரதிபலனுங் கேட்கலாம.

...ப்படிப்பட்ட யாதொரு வியாச்சியத்திலே குறித்தபடி நிறைவேறும்படி ...த்தரவுசெய்யக்கூடாதென்றும், ஆனல் கட்சிக்காரர்களுக்குள் ஒரு கந்தி...ட்டு ஏற்பட்டிருந்து அது பிரதிவாதியினுல் தடைபட்டுத் தவறிப்போயிற்றெ...றும், அந்த தவறுதலுக்காக பிறதிபலன்பெற வாதிக்கு பாத்தியதையுண்டெ...றும் கோர்ட்டார் நிச்சயிப்பார்களாகில், அப்பிரகாரமே அவனுக்கு அவர்கள் ...ரதிபலனுக்குத் தீர்மானஞ் செய்யவேண்டியது.

அப்படிப்பட்ட யாதொரு வியாச்சியத்திலே குறித்தபடி நிறைவேற்றும்படியான உத்தரவுகொடுக்கவேணுமென்றும், ஆனல் அந்த விஷயத்தில் நியாயம் நடப்பிப்பதற்கு அது போதுமானதல்லவென்றும் உடன்படிக்கை தவறிப்போனதற்காக வாதிக்கு ஏதாவது பிரதிபலனும் கொடுக்கவேணுமென்றும கோர்ட்டார் நிச்சயிப்பார்களாகில் அப்பிரகாரமே அவனுக்கு அவர்கள் அப்படிப்பட்ட பிரதிபலனுக்குத் தீர்மானஞ்செய்யவேண்டியது.

இந்தப் பிரிவின்படி தீர்மானஞ்செய்யப்பட்ட பிரதிபலனுக்கு கோர்ட்டார் உத்தரவுசெய்கிறவிதமாய் மதிப்பேற்படுத்தலாம்.

விவரணம்.—கந்திராக்ட்டானது குறித்தபடி நிறைவேற்றப்படுவதற்கு சாத்தியப்படாததாய் விட்டதென்கிற சங்கதியானது கோர்ட்டாருக்கு இந்தப்பிரிவினுலே, உண்டாகிய அதிகாரத்தைசெலுத்த அவர்களுக்குத் தடையாகமாட்டாது.

திருஷ்டாந்தம்.

இரண்டாவதுபாராவைக்குறித்து.—பி-என்பவனுக்கு - ௬00-மணங்கு அரி சிவிர்ப்பதாக-எ-எனபவன் கந்திராக்ட்டுசெய்கிறுன். கந்திராக்ட்டை நிறைவேற்றும்படிக்காவது பிரதிபலன் கொடுக்கும்படிக்காவது -எ-என்பவனை நிர்ப்பந்திக்க -பி-என்பவன் வியாச்சியங்கொண்டுவருகிறுன். எ-என்பவன் ஊர்ஜிதமான கந்திராக்ட்டுசெய்து காரணமில்லாமல் - பி- என்பவனுக்குக் கெடுதியுண்டாகும்படி அதை நிறைவேற்றுமல் தவறிப்போனுனென்றும், அதனுலே குறித்தபடி நிறைவேற்றுவதே போதுமான பரிகாரமல்லவென்றும் கோர்ட்டார் அபிப்பிராயப்படுகிறுர்கள். அவர்கள் தங்களுக்கு நியாயமாகத்தோற்றுகிற பிரதிபலனை பி-என்பவனுக்குத் தீர்மானிக்கலாம்.

மூன்ருவதுபாராவைக்குறித்து.—ஒருவீட்டை - ௧௦௦௦- ரூபாய்க்கு-பி-என்பவனுக்கு விற்பதாக அவனோடு - எ-என்பவன் கந்திராக்ட்டுசெய்கிருன், ௧௮௭௭௵ ஜனவரி௴ ௧௨ கிரயப்பணம் செலுத்துவதாகவும் வீடு ஸ்வாதீனம் பண்ணுவதாகவும் ஏற்பாடாயிருக்கிறது, எ-என்பவன் அந்த கந்திராக்ட்டில் தன்னுடைய பாகத்தை நிறைவேற்றத் தவறிப்போகிருன், பி - என்பவன் குறித்தபடி நிறைவேறவேண்டியதற்காகவும் பிரதிபலனுக்காகவும் வியாச்சியங்கொண்டுவருகிருன், ௧௮௭௮௵ ஜனவரி௴ ௧௨ அவன்பட்சத்தில் தீர்ப்பாகிறது. அந்த டிக்கிரியிலே குறித்தபடி நிறைவேற்ற உத்தரவுசெய்வதுமல்லாமல், எ - என்பவன் நிக்கிரகித்ததிஞலே-பி-என்பவன் ஏதாவது நஷ்டமடைந்திருந்தால் அதற்காக அவனுக்கு பிரதிபலனுக்கும் தீர்மானஞ்செய்யலாம்.

விவரணத்தைக்குறித்து.—உரிமை அதிகாரபத்திர விற்பனையைப்பற் கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவதற்காக, விற்றவனுகிய-பி-என்ப பேரில் கொண்டவனுகிய - எ - என்பவன் வியாச்சியந்தொடருகிருன். வி சியவிசாரணைக்குமுன்னமே அந்த அதிகாரபத்திரத்தின் கெடுவு கழிந்துே றது. அந்த கந்திராக்ட்டு நிறைவேற்றப்படாமைக்காகக் கோர்ட்டார் -எ-எ வனுக்கு பிரதிபலன தீர்மானிக்கலாம், அவசியமானுல் அதற்காக பிணையின் த்திருத்தலாம்.

எ -என்பவன் - ஒரு பயிரங்கமான கம்பேனியின் டைரெக்ட்டர் செய்யப்பட்ட தீர்மானப்படி தனக்கு ஏற்படுத்தப்பட்ட சில பங்குகளைப வதற்கு தனக்கு ஹக்கு உண்டாயிருக்கிற அந்தத் தீர்மானத்தை குறித்தப நிறைவேற்றுவதற்காகவும், அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படாமையைபற் பிரதிபலனுக்காகவும் வியாச்சியந்தொடருகிருன். வியாச்சியந் தொடருவதற் முன்னமே பங்குகளெல்லாம் கொடுத்துவிடப்பட்டது. இந்தப்பிரிவின்படி கோ ட்டார் நிறைவேற்றப்படாமைக்காக - எ -என்பவனுக்கு பிரதிபலன் தீர்மானிக்கலாம்.

நஷ்டங் கட்டிக்கொடுக்கிறேனென்பதிஞலே குறித்தபடி நிறைவேற்றுவதற்குத் தடையுண்டாக மாட்டாது.

௨௦. மற்றபபடி குறித்தபிரகாரம் நிறைவேற்றுவிக்கத்தக்கதாயிருக்கிற யாதொரு கந்திராக்ட்டை, அது தவறிப்போகிறபட்சத்தில் இவ்வளவு தொகை செலுத்துவதாக அதில்கண்டிருந்து தவறிப்போகிறவன் அதைச்செலுத்த இஷ்டமுள்ளவனுயிருந்தபோதிலும், அவ்விதமாய் நிறைவேற்றுவிக்கலாம்.

திருஷ்டாந்தம்.

எ-என்பவன்-சி-என்பவன்கீழ் தான்கைப்பற்றியிருக்கிறசொத்தை-பி- என்பவனுக்கு கீழ்குத்தகைக்கு விடுகிறதாயும், அந்தக்கீழ்குத்தகையை ஊர்ஜிதப்படுத்துவதற்கு அவசியமான லைசென்சுக்காக தான்-சி- என்பவனுக்கு மனுவுசெய்துகொள்வதாயும், லைசென்சுகிடைக்காவிட்டால் தான் - பி - என்பவனுக்கு ௧௦,௦௦௦ - ரூபாய் செலுத்துவதாயும் கந்திராக்ட்டு பண்ணுகிருன். எ-என்பவன் லைசென்சுக்காக மனுவுசெய்வதில்லையென்று நிராகரித்து - பி - என்பவனுக்கு ௧௦,௦௦௦ - ரூபாய்கொடுக்கிறேனென்கிருன். ஆயினும் லைசென்சுகொடுக்க - சி - என்பவன் சம்மதிப்பானுகில் அந்தகந்திராகட்டைகுறித்தபடி நிறைவேற்றுவித்துக்கொள்ள-பி-என்பவனுக்கு பாத்தியதையுண்டு.

(b) குறித்தபடி நிறைவேற்றுவிக்கக் கூடாமையான கந்திராகட்டுகள்.

குறித்தபடி நிறைவேற்றுவிக்கத்தகாத கந்திராக்ட்டுகள்.

௨௧. அடியில்கண்டிருக்கிற கந்திராக்ட்டுகளை குறித்தபடி நிறைவேற்றுவிககககூடாது,—

(a) எதை நிறைவேற்றாமைக்காக ரொக்கப்பிரதிபலன் தகுந்தபரிகாரமாயிருக்கிறதோ அந்த கந்திராக்ட்டு;

(b) எதுவானால், மிகவும் நுட்பமான அல்லது பலவிதமான விவரங்கள் அடங்கினதாயிருப்பதினாலே அதினுடைய முக்கியமான ஷரத்துகளை குறித்தபடி கோர்ட்டார் நிறைவேற்றுவிக்கக்கூடாமையாயிருக்கிறதோ, அல்லது கட்சிக்காரர்களுடைய உரித்தான யோக்கியதைகளையாவது இஷ்டத்தையாவது மிகவும் சார்ந்திருப்பதினாலே அப்படிப்பட்டதாயிருக்கிறதோ, அல்லது மற்றபடி அதினுடைய தன்மையினாலே அப்படிப்பட்டதாயிருக்கிறதோ அந்த கந்திராக்ட்டு;

(c) எதினுடைய ஷரத்துகளை நியாயமான நிச்சயத்தோடு கோர்ட்டார் கண்டுபிடிக்கக் கூடாமலிருக்கிறதோ அந்த கந்திராக்ட்டு;

(d) எதுவானால் அதினுடைய தன்மையிலேயே ரத்தாகத்தக்கதாயிருக்கிறதோ அந்த கந்திராக்ட்டு;

(e) திரஸ்டிகளால் தங்களுடைய அதிகாரத்துக்கு மிஞ்சியாவது தங்களுடைய திரஸ்ட்டைக்கடந்தாவது செய்யப்பட்ட கந்திராக்ட்டு;

(f) இன்ன காரியங்களுக்காகவென்று உண்டுபண்ணப்பட்ட யாதொரு கூட்டம் அல்லது பகிரங்கமான கம்பேனியாலாவது அதின்பட்சத்திலாவது, அப்படிப்பட்ட கம்பேனியின் விருத்திக்காரர்களாலாவது செய்யப்பட்டு, அதினுடைய அதிகாரத்திற்கு மிஞ்சியிருக்கிற கந்திராக்ட்டு;

(g) எதுவானால் அதினுடையதேதிமுதல் மூன்றுவருஷத்திற்கு மிஞ்சின தீர்ககாலத்திற்கு தொடர்ச்சியாய் நிறைவேற்றவேண்டியதாயிருக்கிறதோ அப்படிப்பட்ட கந்திராக்ட்டு.

(h) எந்த கந்திராக்ட்டிலுள்ள விஷயத்தின் முக்கியமான பாகமானது அப்போது இருக்கிறதாக உபயத்திராளும் எண்ணியிருந்து, அந்தகந்திராக்ட்டுசெய்யப்பட்டதற்குமுன்னமே அது இராமல் அற்றுப்போயிருக்கிறதோ அப்படிப்பட்ட கந்திராக்ட்டு.

மேலும் சிவில்புரொசீடர்கோடில் சொல்லியிருக்கிறபடிக்குத்தவிர, யாதொருவிவாதத்தை பஞ்சாயத்திற்குத் தெரிவித்துக்கொள்வதாக ஏற்படுத்திக்கொள்ளுகிற கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவிக்கக்கூடாது; ஆனால் அப்படிப்பட்ட கந்திராக்ட்டு செய்திருந்து அதை நிறைவேற்ற நிராகரித்தவன் எதைப்பஞ்சாயத்திற்குத் தெரிவித்துக்கொள்வதாக அவன் கந்திராக்ட்டுசெய்திருக்கிறானோ அந்தவிஷயத்தைக்குறித்து வியாச்சியந்தொடருவானாகில், அப்படிப்பட்ட கந்திராக்ட்டு அற்றுப்போகாமலிருப்பது அந்த வியாச்சியத்திற்கு தடையாகும்.

திருஷ்டாந்தம்.

(a) குறிப்புக்கு.—லட்சம்ரூபாய்க்கு இந்தியா கவரன்மெண்டு நாலுவட்டி பத்திரத்தை விற்பதாக-எ-என்பவனும், வாங்கிக்கொள்ளுவதாக - பி - என்பவனும் கந்திராக்ட்டுசெய்துகொள்ளுகிறார்கள்.

பொட்டி ௧-இ ௧000-ரூபாய்விழுக்காடு நாற்பது நீலமருந்து பெட்டிகளை விற்பதாக-எ-என்பவனும் வாங்கிக்கொள்ளுவதாக - பி- என்பவனும் கந்திராக்ட்டுசெய்துகொள்ளுகிறார்கள்.

எ - என்பவன் பி-என்பவனுக்கு ஏதோ ஒருசொத்தை திரான்ஸ்பர்செய்திருப்பதினிமித்தம், பி-என்பவன் ௧0000-ரூபாய்க்கு - எ - என்பவன் பட்சத்தில் வரவுவைத்துக்கொண்டு, அந்தத்தொகைக்கு - எ - என்பவன் உண்டி அனுப்பினால் அதற்குப் பணஞ்செலுத்துவதாக கந்திராக்ட்டுசெய்கிறான்.

மேற்படி கந்திராக்ட்டுகளை குறித்தபடி நிறைவேற்றுவிக்கக்கூடாது, ஏனெனில், முதலாவது இரண்டாவதுகளில் எ-என்பவனுக்கும் பி-என்பவனுக்கும், மூன்றாவதிலே எ-என்பவனுக்கும் ரொக்கப்பிரதிபலனாலே சரிப்படுத்தலாகும்.

(b) குறிப்புக்கு. -எ- என்பவன் - பி - என்பவனுக்கு சரீரஊழியஞ்செய்வதாக கந்திராக்ட்டு பண்ணுகிறான்.

எ - என்பவன்-பி- என்பவனை சரீர ஊழியத்தில் அமர்த்திக்கொள்ளுவதாக கந்திராக்ட்டுசெய்கிறான் ;

ஒரு கிரந்த கர்த்தாவாகிய - எ- என்பவன் ஒரு கிரந்தத்தைப் பூர்த்திசெய்வதாக பிரசுரக்காரனாகிய-பி-என்பவனோடு கந்திராக்ட்டுபெண்ணுகிறான்.

இந்த கந்திராக்ட்டுகளை குறித்தபடி - பி - என்பவன் நிறைவேற்றுவிக்கக்கூடாது.

எ - என்பவன் ஒருவனையும்-பி-என்பவன் வேறொருவனையுமாக இரண்டுமதிப்புக்காரர்களை நேமித்துக்கொண்டு அவர்களால் மதிக்கப்படுகிறதொகைக்கு பி-என்பவனுடைய வியாபாரத்தை வாங்கிக்கொள்ளுவதாக-எ-என்பவன் கந்திராக்ட்டுசெய்கிறான். எ-என்பவனும்-பி-என்பவனும் ஒவ்வொரு மதிப்புக்காரர்களை நேமித்துக்கொள்ளுகிறார்கள், ஆனால் மதிப்புசெய்யப்படுவதற்குமுன்னமே-எ-என்பவன் தன்னுடைய மதிப்புக்காரனை பிரவேசிக்கவேண்டாமென்று சொல்லுகிறான்.

ஒரு கப்பலின் சொந்தக்காரனாகிய - எ-என்பவனுக்கும் கேழ்வுபேசிக்கொள்ளுகிறவனாகிய-பி-என்பவனுக்கும் கல்கத்தாவில் ஏற்பட்ட ஒரு கப்பற்கேழ்வு உடன்படிக்கையினாலே, அந்த கப்பல் ரங்கூனுக்குப்போய் அவ்விடத்திலே அரிசிமூட்டைகளை யேற்றிக்கொண்டு அவ்விடத்திலிருந்து லண்டனுக்குப்போகவேண்டியதென்றும், ரங்கோன்போய்ச்சேர்ந்தவுடனே கப்பற்கேழ்வில் மூன்றிலொருபங்கும் லண்டனில் சரக்கு ஒப்பித்தவுடனே மற்ற இரண்டுபங்கும் செலுத்தப்படுமென்றும் உடன்பாடுசெய்துகொள்ளப்படுகிறது.

எ-என்பவன் நிலத்தை பி - என்பவனுக்கு குத்தகைக்கு விடுகிறான், அந்த குத்தகை தேதிக்குப்பின்பு அடுத்த மூன்று வருஷத்திற்கு ஏற்பாடான ஏதோ ஒருவிதமாய் அதைச் சாகுபடிசெய்வதாக பி - என்பவன் கந்திராக்ட்டுபண்ணுகிறான்.

எ - என்பவனால் வருஷவாரியில் முன்பணம் கொடுக்கப்படுவதினிமித்தம், கந்திராக்ட்டு தேதிக்குப்பின்பு அடுத்த மூன்று வருஷத்திற்கு பி - என்பவன் தன் ஸ்வாதீனத்திலிருக்கிற நிலத்தில் இன்னபயிர்செய்து அறுத்து ஒப்பிப்பதற்கு சித்தமாயிருக்கும்போது அதை எ - என்பவனுக்கு ஒப்பிப்பதாக எ - என்பவனும் பி - என்பவனும் கந்திராக்ட்டு செய்துகொள்ளுகிறார்கள்.

எ - என்பவன் பி-என்பவனால் தனக்கு ௧000 . ரூபாய்க் கொடுக்கப்படுவதினிமித்தம் அவனுக்கு தான் ஒரு படமெழுதிக்கொடுப்பதாக பி .என்பவனோடு கந்திராக்ட்டு செய்கிறான்.

கோர்ட்டார் மேல்விசாரணை செய்யக்கூடாத சிலவேலைகளை முடித்துக்கொடுப்பதாய் எ - என்பவன் பி - என்பவனோடு கந்திராக்ட்டுசெய்கிறான்.

பி - என்பவனுக்கு வேண்டியிருக்கிற ஏதோ ஓரினமான சரக்கு முழுமையும் அவனுக்கு சர்ப்பராசெய்வதாய் எ - என்பவன் கந்திராக்ட்டு பண்ணுகிறான்.

குறித்த குடிக்கூலிக்கு ஏதோ ஒருவீட்டை, கூடமானது அழகாய் அலங்காரஞ் செய்யப்பட்டிருந்தால், ஓர் குறித்தகாலத்திற்கு பி - என்பவனிடத்திலிருந்து வாடகைக்கு வாங்கிக்கொள்ளுவதாய் அவனோடு எ - என்பவன் கந்திராக்ட்டுசெய்கிறான். அது தவறிப்போனால் பிரதிபலன் வசூல்செய்யப்படுமென்று நிச்சயமாய்க் கண்டிருந்தாலும் சரிதான்.

எ - என்பவன் பி - என்னும் நபரை விவாகஞ் செய்துகொள்ளுவதாக கந்திராக்ட்டு பண்ணுகிறான்.

மேற்கண்ட கந்திராக்டுகள் குறித்தபடி நிறைவேற்றுவிக்கப்படமாட்டாது.

(c.) குறிப்புக்கு.—ஒரு சத்திரத்தின் சொந்தக்காரனாகிய எ - என்பவன் பி - என்பவனுக்கு அவனுடைய சரக்குகளை விற்பதற்காக அவ்விடத்தில் விடுதியும் அவசியமான உபகரணங்களும் கொடுப்பதாய் அவனோடு கந்திராக்ட்டு செய்கிறான். எ - என்பவன் தன்னுடைய கந்திராக்ட்டை நிறைவேற்ற நிராகரிக்கிறான். விடுதியும் உபகரணங்களும் இப்படிப்பட்டதென்றும் இவ்வளவென்றும் குறிக்கப்படாமையினாலே, இந்தசங்கதி பிரதிபலனுக்குத் தகுந்ததேயல்லாமல் குறித்தபடி நிறைவேற்றுவதற்குத் தகுந்ததல்ல.

(d.) குறிப்புக்கு.—இவ்வளவு காலத்திற்கென்று குறிக்காமல் ஏதோ ஒரு வியாபாரத்தில் பங்குக்காரர்களாவதாக எ - என்பவனும் பி - என்பவனும் கந்திராக்ட்டு செய்துகொள்ளுகிறார்கள். அந்த கந்திராக்ட்டானது குறித்தபடி நிறைவேற்றப்படமாட்டாது, ஏனெனில், அப்படி நிறைவேற்றப்படுமேயாகில், எ - என்பவனாவது பி - என்பவனாவது அந்தக் கூட்டுப்பங்கை உடனே கலைத்துப் போடலாகும்.

(e.) குறிப்புக்கு.—எ - என்பவன் ஒரு பூஸ்திதியை ஏழுவருஷத்திற்கு குத்தகைக்கு விடும்படியான அதிகாரமடைந்து அதற்குத் திரஸ்ட்டியாயிருக்கிறான் அவன் அந்த பூஸ்திதியை ஏழுவருஷத்திற்கு குத்தகைக்கு விடுவதாக பி - என்பவனோடு கந்திராக்ட்டுசெய்து, அந்த கெடுவு கழிந்தவுடனே அந்த குத்தகையைப் புதுப்பிக்கிறதாக உடன்படிக்கை பண்ணுகிறான். இந்த கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவிக்கக்கூடாது.

ஒரு கம்பேனியின் டைரெக்ட்டர்கள் பங்குக்காரர்களுடைய மகாசபையின் அனுமதியின்பேரில் அந்த வியாபாரத்தை விற்றுப்போடுவதற்கு அதிகாரமுடையவர்களா யிருக்கிறார்கள். அப்படிப்பட்ட யாதொரு அனுமதியில்லாமல் அதை விற்பதற்கு அவர்கள் கந்திராக்ட்டு செய்கிறார்கள், இந்த கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவிக்கக் கூடாது.

லட்சம் ரூபாய் பெறுமான திரஸ்டுசொத்தை விற்பதற்கு அதிகாரமுடைய எ - பி - என்கிற இரண்டு திரஸ்டிகள் அதை ௩0,000 - ரூபாய்க்கு சி-என்பவனுக்கு விற்பதாக கந்திராக்ட்டு செய்கிறார்கள். இந்த கந்திராக்ட்டானது நம்பிக்கை துரோகமுள்ளதாகும்படியான அவ்வளவு நிஷ்பிரயோசனமானதாயிருக்கிறது. சி - என்பவன் குறித்தபடி அதை நிறைவேற்றுவிக்கக்கூடாது.

கனிகளை வெட்டியெடுப்பதற்கான ஒரு கம்பேனியின் அபிவிர்த்திக்காரர்கள் அந்த கம்பேனி ஏற்பட்டால் ஓரளவு நிரசவஸ்துக்களை வாங்கிக்கொள்ளலாகுமென்று கந்திராக்ட்டு செய்கிறார்கள். அந்த வஸ்துவின் கிரயத்தை நிச்சயிப்பதற்கு அவர்கள் தகுந்த முன்ஜாக்கிரதைபடாமல் அதற்கு மிகவும் அதிக விலைகொடுக்க உடன்படுகிறார்கள். மேலும் விற்கிறவர்கள் கிரயப்பணத்திலிருந்து தங்களுக்கு ஊதியம் கட்டிக்கொடுக்கவேணுமென்றும் உடன்படிக்கை செய்துகொள்ளுகிறார்கள். இந்த கந்திராக்ட்டு குறித்தபடி நிறைவேற்றுவிக்கப்படமாட்டாது.

(f) குறிப்புக்கு.—ஒரு ரெயில்வேயை உண்டுபண்ணி அந்த வேலையை நடத்துவதற்கு மாத்திரமென்றே ஏற்பட்டிருக்கிற ஒரு கம்பேனியார் பருத்தி எந்திர

சாலை கட்டும்பொருட்டு ஒரு துண்டுநிலத்தை வாங்குவதற்காக கந்திராக்ட்டு செய்கிறார்கள். இந்த கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவிக்கக்கூடாது.

(g) குறிப்புக்கு.—எ-என்பவன் ஏற்படுத்தியிருக்கிற ஒருரெயில்வேயின் எவ்வளவுபாகம் பி-என்பவனுடைய நிலத்திலிருக்கிறதோ அதை உபயோகித்துக்கொள்ளும்படியான பாத்தியதையை இருபத்தொரு வருஷகாலம் பி-என்பவனுக்கு வாடகைக்கு விடுகிறதாகவும், சில ஷரத்துகளின்பேரில் அந்த ரெயில்வேமார்க்க முழுதும் வண்டிகளை ஓட்டும்படியான பாத்தியதையை பி-என்பவன் அடைந்தவனாகி, அவசியமான என்ஜின் உபகரணத்தை எ-என்பவனே சர்பரா பண்ணச்சொல்லவேணுமென்றும், அந்த கெடுவுவரையில் அந்த ரெயில்வே முழுமையையும் எ-என்பவன் சீராய் மரமத்துசெய்துவைக்கவேணுமென்றும் எ-என்பவன் கந்திராக்ட்டுபெண்ணுகிறான். இந்த கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவது பி-என்பவனுக்கு நிராகரிக்கப் படவேண்டியது.

(h) குறிப்புக்கு.—சி-என்பவன் டி-என்பவன் இவர்களுடைய ஆயுசுவரையில் பி-என்பவனுக்கு வருஷவாரி சுகஜீவனங்கொடுப்பதாக எ-என்பவன் கந்திராக்ட்டுசெய்கிறான். கந்திராக்ட்டுதேதியில் சி-என்பவன் ஜீவித்திருப்பதாக எ-என்பவனும் பி-என்பவனும் எண்ணியிருந்தபோதிலும் அப்போது சி-என்பவன் இறந்துபோயிருப்பதாகத் தெரியவருகிறது. இந்த கந்திராக்ட்டு குறித்தபடி நிறைவேற்றப்படமாட்டாது.

(c) கோர்ட்டார் யுக்தாயுக்தத்தை யோசித்துச்செய்வதைக்குறித்து.

குறித்தபிரகாரம் நிறைவேற்றும்படி டிக்கிரியை யுக்தாயுக்தம் யோசித்துச்செய்வது.

உஉ. குறித்தபிரகாரம் நிறைவேற்றும்படி டிக்கிரியை யுக்தாயுக்தம் யோசித்துச் செய்யவேண்டியதேயல்லாமல், அப்படிப்பட்ட பரிகாரங் கொடுப்பது சட்டசம்மதமாயிருப்பதினாலேமாத்திரம் அப்படி பரிகாரங் கொடுப்பதற்கு கோர்ட்டார் கடமைப்பட்டவர்களல்ல; ஆனால் கோர்ட்டாருடைய யோசனைக்கு விட்டிருப்பதினாலே அது அவர்கள் இஷ்டம்போலிராமல் நியாயக் கோட்பாடுகளை அநுசரித்து திறமாயும் தகுதியாயும் இருப்பதோடுங்கூட அப்பீல்கோர்ட்டாருடைய திருத்துபாட்டுக்கும் உட்பட்டு இருக்கத்தக்கது.

அடியில் கண்டிருக்கிற விஷயங்களிலே கோர்ட்டார் குறித்தபடி நிறைவேற்ற டிக்கிரிசெய்யாமல் கிரமமாக யுக்தாயுக்தத்தை அநுசரித்துச் செய்யலாம், அவையாவன:—

க-வது.—எதைப்பற்றி கந்திராக்ட்டு செய்யப்படுகிறதோ அந்த சங்கதிகள், வாதிபட்சத்தில் மோசமாவது மாறுபாடாவது நடந்திராவிட்டாலும், பிரதிவாதிக்கு விருத்தமாய் வாதிக்கு அடாத பிரயோசனம் கொடுக்கும்படியானவை.

திருஷ்டாந்தம்.

(a) ஏதோ ஒரு சொத்தை ஆயுசுவரையில் வாடகைக்கு அநுபவிப்பவனாகிய எ-என்பவன் அதில் தனக்குள்ள பாத்தியதையை பி-என்பவனுக்குச் சாட்டிவிடுகிறான். அந்த பாத்தியதையை கொள்ளுவதற்கு சி-என்பவன் கந்திராக்ட்டு செய்கிறான், விற்பதற்கு பி-என்பவன் கந்திராக்ட்டு செய்கிறான். அந்த கந்திராக்ட்டு முடிவதற்கு முன்னமே, எ-என்பவனுக்கு பிராணஹானியான தீங்குநேரிட்டு, அதினாலே அவன் கந்திராக்ட்டு செய்யப்பட்ட தினத்திற்கு மறுநாள் இறந்துபோகிறான், அந்தசங்கதி பி-சி-என்கிற இருவருக்கும் தெரியாமலிருந்தாலும், தெரிந்திருந்தாலும் அந்த கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்

றிக்கொள்ள பி-என்பவனுக்கு சுதந்தரமுண்டு. அந்தசங்கதி பி-என்பவனுக்குத் தெரிந்திருந்து, சி-என்பவனுக்குத் தெரியாமலிருந்தால், அந்த கந்திராக்ட்டு குறித்தபடி நிறைவேறுவதை பி-என்பவனுக்கு நிக்கிரகிக்கலாம்.

(b) ஏதோ ஒரு வியாபார ஆஸ்தியில் சி-என்பவனுக் குண்டாயிருக்கிற பாத்தியதையை பி- என்பவனுக்கு விற்பதாக எ-என்பவன் கந்திராக்ட்டுசெய்கிறன். சி-என்பவனுடைய பாத்தியதை ஒன்றும் பெறாததாய் விட்டபோதிலும், அந்த விற்பனை ஸ்திரமாயிருக்கவேணுமென்று உடன்படிக்கை செய்யப்படுகின்றது. வாஸ்தவத்தில் சி-என்பவனுடைய பாத்தியதையின் பெறுமானமானது எதின்பேரில் அவன் தன் பங்குக்காரர்களுக்கு பெருங்கடன் பட்டிருக்கிறனோ அந்தக் கூட்டுப்பங்கு கணக்குகள் முடிவாகையில்தான் தெரியவரும். அந்தக்கடன் எ-என்பவனுக்குத் தெரியும், பி-என்பவனுக்குத் தெரியாது அந்த கந்திராக்ட்டு குறித்தபடி நிறைவேறுவதை எ-என்பவனுக்கு நிக்கிரகிக்கலாகும்,

(c) ஏதோ ஒரு நிலத்தை கொள்ளுவதாக எ-என்பவனும், விற்பதாக பி-என்பவனும் கந்திராக்ட்டு செய்துகொள்ளுகிறார்கள். அந்த நிலத்தை வெள்ளத்தில் நின்றும் காப்பாற்றுவதற்காக அதின் சொந்தக்காரன் அதிக செலவு செய்து அணைபோடவேண்டியது அவசியமாயிருக்கிறது. இந்தசங்கதி பி-என்பவனுக்குத் தெரியாது, அதை அவனுக்குச் சொல்லாமல் எ-என்பவன் மறைத்துவைக்கிறான். அந்த கந்திராக்ட்டு குறித்தபடி நிறைவேறுவதை எ-என்பவனுக்கு நிக்கிரகிக்கலாகும்.

(d.) எ-என்பவனுடையசொத்து ஏலம்போடப்படுகிறது. பி-என்பவன் தனக்காக விலைகேட்கும்படி எ-என்பவனுக்கு டைய அட்டரணியாகிய சி-என்பவனைக் கேட்டுக்கொள்ளுகிறான். சி-என்பவன் கள்ளங்கபடு நினையாமலும் நல்ல எண்ணத்தோடும் அப்படியே விலைகேட்கிறான். கூட இருக்கிறவர்கள் விற்பவனுடைய அட்டரணி விலைகேட்பதைப்பார்த்து அவன் வீண் ஆர்பாட்டம் பண்ணுகிறனென்றெண்ணி அதிர்விலை சேளாமல் நின்றுவிடுகிறார்கள், அந்த ஏல சொத்து குறைந்தவிலைக்கு பி-என்பவனுக்கு விடவிடப்படுகிறது. அந்த கந்திராக்ட்டு குறித்தபடி நிறைவேறுவதை பி-என்பவனுக்கு நிக்கிரகிக்கலாகும்.

௨-வது.—கந்திராக்ட்டை நிறைவேற்றுவதினாலே பிரதிவாதி முந்தி அறியாத ஏதோ ஒரு சங்கடம் அவனுக்கு விளைவதாயும், அதை நிறைவேற்றாமையினாலே அப்படிப்பட்ட சங்கடம் வாதிக்கு உண்டாகாததாயு மிருப்பது.

திருஷ்டாந்தம்,

(e) எ-என்பவன் தன் தகப்பனுருடைய உயிலின்படி ஒருநிலத்துக்கு பாத்தியஸ்தனாகிறன், அவன அதை இருபத்தைந்து வருஷத்திற்குள் விற்றால் கிரயப்பணத்தில் பாதி பி-என்பவனுக்குச் சேரவேணுமென்று அதில் ஏற்பாடு செய்திருக்கிறது - எ-என்பவன் அந்த ஏற்பாட்டைமறந்து, இருபத்தைந்துவருஷங் கழிவதற்குமுன்னமே, அந்த நிலத்தை சி-என்பவனுக்கு விற்க கந்திராக்ட்டு செய்கிறன். இதில் அந்த கந்திராகட்டை நிறைவேற்றுவித்தால் எ-என்பவனுக்கு சங்கடமாய் முடியுமாகையினாலே சி-என்பவன் பட்சத்தில் அதைகுறித்த பிரகாரம் நிறைவேற்றும்படி கோர்ட்டார் நிர்ப்பந்திக்கலாகாது.

(f.) திரஸ்டு ஆஸ்தியை டி-என்பவனுக்கு விற்கும்படியான கந்திராக்ட்டிலே திரஸ்டிகளாகிய எ-என்பவனும் பி-என்பவனும் தாங்கள் யாருக்குத் திரஸ்ட்டியோ அந்த சி-என்பவனோடுசேர்ந்து, அந்த ஆஸ்தி உட்பட்டிருக்கிற பலமான கடன்களில் நின்றும் அதை நிவர்த்திசெய்வதாக நேராய் உடன்படிக்கை செய்கிறார்கள். விற்பவர்கள் அந்தகந்திராக்ட்டுதேதியில் கிரயப்பணம் அந்தக்கடன்களைத் தீர்ப்பதற்குப் போதுமென்று நம்பியிருந்தபோதிலும், அது கிட்டத்

தட்டப் போதுமானதாயிருக்கவில்லை. அந்த கந்திராக்ட்டு குறித்தபடி நிறைவே றுவதை டி-என்பவனுக்கு நிக்கிரகிக்கவேண்டியது.

(g) ஒரு ஸ்திதிக்குச் சொந்தக்காரனாகிய எ - என்பவன் பி-என்பவனுக்கு அதை விற்பதாக கந்திராக்ட்டுசெய்து, தான் அதினுடைய எல்லையைகுறிக்க வேண்டிய பொறுப்பில்லையென்று உடன்படிக்கை செய்கிறான். அந்த ஸ்திதி யில் சேர்ந்திருப்பதாக இருவருக்குந் தெரியாத ஒரு விலையுயர்ந்த பொருள் அதில் உண்மையாய் அடங்கியிருக்கிறது. அறியாத பொருளுக்கு பி-என்பவன் தன்னுடைய தாவாவை விட்டுவிட்டாலொழிய, அந்த கந்திராக்ட்டை குறித்த படி நிறைவேற்றுவது அவனுக்கு நிக்கிரகிக்கப்படவேண்டியது.

(h) ஒரு நிலத்தை பி - என்பவனுக்கு விற்பதாகவும், ஒரு ரெயில்வே ஸ்ட்டேஷனிலிருந்து அதற்கு ரோட்டுப்போட்டு கொடுப்பதாகவும் அவனோடு எ - என்பவன் கந்திராக்ட்டு செய்கிறான். பின்பு எ-என்பவன் வழக்குக்கு உள் ளாகாமல் ரோட்டுபோடக் கூடாமையா யிருக்கிறதென்று கண்டுகொள்ளப்ப டுகிறது. ரோட்டு நஷ்டத்திற்காக பிரதிபலன் சகிதமாய் மற்றதை குறித்தபடி நிறைவேற்றுவித்துக்கொள்ள பி - என்பவன் அர்ஹனாயிருக்கிறானென்று ஏற் பாடாவதா யிருந்தபோதிலும், அந்த கந்திராக்ட்டில் ரோட்டைக்குறித்தபாகம் குறித்தபடி நிறைவேறுவதை பி-என்பவனுக்கு நிக்கிரகிக்கவேண்டியது.

(i) கனிகுத்தகைதாரனாகிற எ- என்பவன் அவனுக்கு குத்தகைவிடுகிறவ னாகிய பி-என்பவனோடு கந்திராக்ட்டு செயகிறதாவது,— குத்தகைநடந்துகொ ண்டிருக்கையி லெப்போதாகிலும் பி - என்பவன் கனியிலாவது அதைச் சுற்று முற்றிலுமாவது உபயோகிக்கப்பட்ட எந்திரங்களையும் எந்திர வேலையைச்சேர் ந்த ஆயுதங்களையும் எடுத்துக்கொள்ள தனக் கிஷ்டமிருந்தால் அதைக்குறித்து நோட்டீசுகொடுக்கலாமென்பதும், அவனுடைய நோட்டீசில் கண்டிருக்கிற சா மான்களை குத்தகை முடிவில் மதிப்புப்படி அவன் ஒப்பித்துக்கொள்ள வேணு மென்பதும்தான். அப்படிப்பட்ட கந்திராக்ட்டு குத்தகைதாரனுடைய வேலை க்கு மிகவும் கெடுதியாயிருக்கத் தக்கதாகையால், அது குறித்தபடி நிறைவேறு வதை பி-என்பவனுக்கு நிக்கிரகிக்கவேண்டியது.

(j. எ-என்பவன் பி-என்பவனிடத்திலிருந்து ஒருநிலத்தை வாங்கிக்கொ ள்ளுவதாக கந்திராக்ட்டு செய்கிறான். அந்த நிலத்துக்குப் போவதைக்குறித்து கந்திராக்ட்டில் ஒன்றுஞ்சொல்லவில்லை. அதற்கு வழிநடைபாத்தியதை யிருப் பதாகக் காட்டக்கூடியதாயுமில்லை. அந்த கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற் றுவது பி-என்பவனுக்கு நிக்கிரகிக்கப்படவேண்டியது.

(k) எ - என்பவன் தன்னுடைய வியாபாரத்தில் உபயோகிக்கப்பட்ட ஓரினமான சரக்கு முழுமையையும் பி-என்பவனுடைய தொழிற்சாலையிலிருந்து வாங்கிக்கொள்ளுவதாகவும் வேறோரிடத்தில் வாங்குவதில்லையென்றும் பி- என் பவனோடு எ - என்பவன் கந்திராக்ட்டுசெய்கிறான். சரக்கு சர்ப்பராபண்ணும் படி பி-என்பவனை கோர்ட்டார் நிர்ப்பந்திக்கக்கூடாது, ஆனால் அவன் அதை சர்ப்பராசெய்யாவிட்டால், வேறோரிடத்தில் எ-என்பவனை அதை வாங்கிக்கொ ள்ளவொட்டாதபட்சத்தில் அவன் கெட்டுப்போகலாம். அந்த கந்திராக்ட்டு குறி த்தபடி நிறைவேறுவதை பி-என்பவனுக்கு நிக்கிரகிக்கவேண்டியது.

அடியில்வருவது - குறித்தபிரகாரம் நிறைவேற்றும்படி டிக்கிரி செய்வதில் கோர்ட்டார் யுக்தாயுக்தம் யோசித்துச்செய்யும்படியான விஷயமாயிருக்கிறது.

௫ - வது.—வாதியானவன் குறித்தபடி நிறைவேற்றத்தக்க கந் திராக்ட்டினாலே நிலையான காரியங்களைச் செய்தாவது நஷ்டமடைந் தாவதிருப்பது.

திருஷ்டாந்தம்.

...னுடைய அனுகூலத்திற்காக சிலவேலைகளை முடித்துக் ...ம் செய்கிற ரெயில்வே கம்பேனியாருக்கு நிலம்விற்கி ...ர் நிலத்தையெடுத்துக்கொண்டு தங்கள் ரெயில்வேய்க் ...க்கொள்ளுகிறார்கள். அந்தவேலைகளை முடித்துக்கொ ...க்ட்டை குறித்தபிரகாரம் நிறைவேற்றும்படி எ-என் ...செய்யவேண்டியது.

...ாக கந்திராக்ட்டுகளை குறித்தபடி நிறைவேற்றுவித்தல்.

...றைவே ...டையலா

...க அத்தியாயத்தில் வேறேவிதமாய்ச் சொல்லியிருக் கிறபடிக்குத் தவிர, குறித்தபடி கந்திராக்ட்டு நிறைவேறலை அடியில் கண்டிருக்கிற நபர்கள் அடையலாம் :—

...தில் சம்பந்தப்பட்ட யாதொரு நபரும்;

...தைச்சேர்ந்த யாதொரு நபரின் சம்பந்தத்தில் பிரதிநிதியா யிருப்பவர் அல்லது முதலாளியும்; ஆனால் அப்படிப்பட்ட நபரினுடைய கல்வி-திறம்-கடனிறுக்கும் திராணி அல்லது அந்த நபரைப்பற்றினதாயிருக்கிற யாதொரு தன்மையானது அந்த கந்திராக்ட்டிலே முக்கியமானதுணைப்பொருளாயிருந் தாலும், அந்த நபரினுடைய பாத்தியதையை வேறொருவரு க்குச் சாட்டக்கூடாதென்று அந்த கந்திராக்ட்டில் சொல்லியி ருந்தாலும், அதில் அவருடைய பாகமானது முன்னதாய் நிறைவேற்றப்பட்டிருந்தா லொழிய, சம்பந்தத்தில் அவரு டைய பிரதிநிதியாயிருப்பவர் அல்லது அவருடைய முதலாளி க்கு அந்த கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றிக்கொள்ள பாத்தியதை யுண்டாகமாட்டாது;

(c) அந்த கந்திராக்ட்டானது விவாகத்தைச்சேர்ந்த பொருத்த உடன்படிக்கையாயிருந்தாலும் ஒரேகுடும்பத்தைச்சேர்ந்தவர் களுக்குள் சந்தேகமான சுதந்தரங்களைக்குறித்த ராஜினாமா வாயிருந்தாலும் அதைக்கொண்டு பிரயோசனகரமாய்ச் சுதந் தரமடைந்திருக்கிற யாதொரு நபரும்;

(d) ஆயிசுவரையில் வாடகைதாரனாயிருப்பவனால் யாதொரு அதி காரத்தைக் கிரமமாய்ச் செலுத்துவதில் கந்திராக்ட்டு செய்ய ப்பட்டிருந்தால், அனந்தரவாரிசுதாரனும்;

(e) உடன்படிக்கையானது - ஸ்வாதீனத்தில் ரிவர்ஷனராயிருப்ப வனுக்கு ஹக்கில் முந்தினவனோடு செய்துகொள்ளப்பட்ட கருராயிருந்து, அப்படிப்பட்ட கருரின் பிரயோசனத்துக்கு ரிவர்ஷனர் அர்ஹனாயிருக்கிறபட்சத்தில் அந்த ரிவர்ஷனரும்;

(f) உடன்படிக்கையானது அப்படிப்பட்ட கருராயும், ஒன்றுக்குப் பின்பு அனுபவிக்கத்தக்கதாயிருக்கிற ஆஸ்தியில் ரிவர்ஷனரா

யிருப்பவன் அந்தக்கருரின் பிரயோசன
ருந்து, அது தவறிப்போவதினலே அ
டுதி அடைபவனுயிருக்கிறபட்சத்தில் அ

(g) ஒரு பயிரங்கமான கம்பேனியானது ஒரு
திருந்து பின்னிட்டு வேறொரு பயி
யோடு சேர்ந்து போய்விடுமாகில், அந்
துண்டாகிற புது கம்பேனியும்;

(h) யாதொரு பயிரங்கமான கம்பேனியின் அம்
அந்தகம்பேனி ஏற்படுவதற்கு முன்னமே
ட்டு கந்திராக்ட்டு செய்திருந்து, அப்படிப்பட
டானது அந்தகம்பேனி ஏற்பாட்டின் ஷரத்து
செய்யப்படுகிறபட்சத்தில் அந்தகம்பேனியும்;

(e) இன்னருக்காக கந்திராக்ட்டுகளை குறித்தபடி நிறைவேற்
டாமை.

இன்னர் பரிகாரம்பெருவதற்குத் தடை.

உச. யாதொரு கந்திராக்ட்டை
தபடி :—

(a) அது தவறிப்போவதற்காகப் பிரதிபலன் பெறக்கூடாதவன் பட்சத்திலும்;

(b) அந்த கந்திராக்ட்டில் தன்பாகத்திற்கு நிறைவேறவேண்டிய தாயிருக்கிற யாதொரு முக்கியமான ஷரத்தை நிறைவேற்றக்கூடாதவனு யிருக்கிறவன் அல்லது நிறைவேற்றத் தவறிப்போகிறவன் பட்சத்திலும்;

(c) கந்திராக்ட்டு தவறிப்போனதாகச் செல்லப்பட்டதற்கு தன்னுடைய பரிகாரத்தை முன்னதாய் நிச்சயித்து அதற்குச் சரி சொல்லப்பட்டிருக்கிறவன் பட்சத்திலும்;

(d) கந்திராக்ட்டிலுள்ள விஷயமானது யாதொரு பெறுமான ஐவேஜின்பேரில் ஆதாரப்பட்டிராமற் போனபோதிலும் அது பைசலாகி அப்போது செலாமணியி லிருந்ததென்று கந்திராக்ட்டுக்குமுன்னமே அறிவிக்கப்பட்டிருந்தவன் பட்சத்திலும், நிறைவேற்றுவிக்கக்கூடாது.

திருஷ்டாந்தம்.

(a) உட்பிரிவுக்கு.—பி-என்பவனுக்காக ஏஜெண்டு ஹோதாவிலே எ-என்பவன் சி-என்பவனிடைய வீட்டைக் கொள்வதாக சி-என்பவனோடு உடன்படிக்கை செய்துகொள்ளுகிருன். எ-என்பவன் பி-என்பவனுக்கு ஏஜெண்டாகவல்லாமல், தன் சொந்த நிமித்தமாகவே உள்ளபடி பிரவர்த்திக்கிருன். எ-என்பவன் இந்த கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவித்துக்கொள்ளக் கூடாது.

(b) உட்பிரிவுக்கு.—ஒரு [வீட்டை பி-என்பவனுக்கு விற்பதாகவும், விற்பனை தேதிமுதல் பதினன்கு வருஷத்திற்கு நிஷ்கரிஷையான வருஷவாரி வாட

கைக்கு அதில் தான் குடிக்கூலிக்காரனவதாகவும் எ-என்பவன் கந்திராக்ட்டுசெய்கிருன். எ-என்பவன் கடனிறுக்கச் சக்தியற்றவனுகிருன். அவனுவது அவனுடைய அஸைனியாவது அந்த கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவிக்கக்கூடாது.

வாசஞ்செய்வதற்குத் தகுந்த சிறந்தபொருளாக மதிக்கத்தக்க அலங்கார விருக்ஷங்களுள்ள ஒருதோட்டத்தையும் வீட்டையும் பி - என்பவனுக்கு விற்பதாக எ-என்பவன் கந்திராக்ட்டு செய்கிருன். பி-என்பவனுடைய சம்மதமில்லாமல் எ-என்பவன் அந்த மரங்களைத் தறிக்கிருன். எ-என்பவன் அந்த கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவித்துக் கொள்ளக்கூடாது.

குத்தகைக்காக பி-என்பவனிடத்திலே கந்திராக்ட்டு செய்துகொண்டு நிலத்தைக் கையாளுகிற எ-என்பவன் அதைப்பாழாவது வியவசாயக்காரன் செய்யத்தகாத விதமாவது செய்கிருன். எ-என்பவன் அந்த கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவித்துக் கொள்ளக்கூடாது.

வேலைமுடியாத ஒரு வீட்டை வாடகைக்கு விடுகிறதாக எ - என்பவனும், வாடகைக்கு வாங்கிக்கொள்ளுவதாக பி - என்பவனும் கந்திராக்ட்டு செய்கிருர்கள். பி-என்பவன் செய்கிற கந்திராக்ட்டிலே தான் அந்த வீட்டை முடிப்பதாகவும் எ-என்பவன் அதை மராமத்துசெய்து வருவதாக வாடகைச் சீட்டில் உடன்படிக்கை கண்டெழுதுவதாகவும் சொல்லுகிருன். பி-என்பவன் அந்த வீட்டை அரைகுறையாய் முடிக்கிருன். கந்திராச்ட்டு தவறுவதற்காக எ - என்பவனும் பி - என்பவனும் பிரதி பலனுக்கு ஒருவர்பேரிலொருவர் வியாச்சியம் தொடரலாமென்ருலும், பி-என்பவன் அந்த கந்திராக்டை குறித்தபடி நிறைவேற்றுவித்துக் கொள்ளக்கூடாது.

(c) உட்பிரிவுக்கு.—ஓர் குறித்தகாலவரையில் குறித்தவாடகைக்கு ஒருவீட்டை வாடகைக்கு விடுவதாக எ - என்பவனும், வாடகைக்கு வாங்கிக்கொள்ளுவதாக பி-என்பவனும் கந்திராக்ட்டு செய்துகொள்ளுகிருர்கள். பி-என்பவன் அந்த கந்திராக்ட்டை நிறைவேற்றமாட்டேனென்கிருன். அதற்குமேல் எ - என்பவன் வியாச்சியந் தொடர்ந்து அந்தத் தவறுதலுக்காகப் பிரதிபலன் பெற்றுக்கொள்ளுகிருன். எ - என்பவன் அந்த கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவித்துக் கொள்ளக்கூடாது.

பாத்தியதை யில்லாத வனுவது வலியப்பொருத்தனஞ் செய்கிறவனுவது சொத்தை விற்பதாகச் செய்கிற கந்திராக்ட்டு.

௨௫. அசையும்பொருளானுலும் அசையாப்பொருளானுலும் அதைவிற்பதாகவாவது வாடகைக்குவிடுகிறதாகவாவது செய்கிற கந்திராக்ட்டை விற்பவன் அல்லது வாடகைக்கு விடுகிறவன்பட்சத்தில் குறித்தபடி நிறைவேற்றுவிக்கக்கூடாது, அவன் எப்படிப்பட்டவனென்ருல்;—

(a) அந்தசொத்தில் தனக்கு யாதொரு பாத்தியதையும் இல்லையென்று அறிந்திருந்து, அதை விற்கவாவது வாடகைக்கு விடவாவது கந்திராக்ட்டு செய்திருப்பவன் ;

(b) அந்தசொத்தில் தனக்குச்சரியான பாத்தியதையிருக்கிறதென்று நம்பி கந்திராக்ட்டு செய்திருந்தபோதிலும், விற்பனை அல்லது வாடகைக்கு விடுதலை பூர்த்திசெய்வதற்காக அந்த கந்திராக்ட்டில் சம்பந்தபட்டவர்களாலாவது கோர்ட்டாராலாவது நிர்னயிக்கப்பட்டகாலத்தில், நியாயமான சந்தேகநிவர்த்தியான ஹக்கைக் கிரையக்காரனுக்காவது வாடகைதாரனுக்காவது கொடுக்கமாட்டாதவன் ;

(c) கந்திராக்ட்டுசெய்வதற்குமுந்தி, (யாதொரு பெறுமான ஐவேஜின்பேரில் ஆதாரப்பட்டிராவிட்டாலும்) அந்த கந்திராக்ட்டு விஷயத்தைப் பொருத்தஞ் செய்திருப்பவன்.

திருஷ்டாந்தம்.

(a) சி - என்பவனுதென்று தான் அறிந்திருக்கிற ஒரு ஆஸ்தியை அவனுடைய அதிகாரமில்லாமல் எ - என்பவன் பி - என்பவனுக்கு விற்பதாக கந்திராக்ட்டுசெய்கிறுன். அதை ஊர்ஜிதப்படுத்த சி - என்பவனுக்கு இஷ்டமிருந்த போதிலும், அந்த கந்திராக்ட்டை எ - என்பவன் குறித்தபடி நிறைவேற்றுவித்துக் கொள்ளக்கூடாது.

(b) திரஸ்ட்டிகள் எழுத்துமூலமாய் பி - என்பவனுடைய அநுமதி பெற்றுக்கொண்டு விற்கலாமென்று கண்டு அவர்களுக்கு எ - என்பவன் தன்னுடைய நிலத்தை உயில்மூலமாய் விடுகிறுன். திரஸ்ட்டிகள் எந்த விற்பனையாவது செய்யலாமென்று பி - என்பவன் எழுத்துமூலமாய் பின்விற்பனைக்குச் சம்பந்தப்படும்படி சாதாரணமான அநுமதியைக் கொடுக்கிறுன். பின்பு திரஸ்ட்டிகள் அந்தநிலத்தை சி - என்பவனுக்கு விற்பதாக அவனேடு கந்திராக்ட்டுசெய்கிறுர்கள். சி - என்பவன் அந்தகந்திராக்ட்டை நிறைவேற்றமாட்டேனென்கிறுன். சி-என்பவனுக்கு இன்னதை விற்கிறதென்கிற பி - என்பவனுடைய அநுமதி இல்லாதிருக்கச்சே, திரஸ்ட்டிகள் சி - என்பவனுக்குக் கொடுக்கக்கூடிய ஹக்கானது, சட்டத்திலுள்ளபடி, நியாயமான சந்தேகநிவர்த்தியானதா யிராதபடியால் இந்தகந்திராக்ட்டை அந்த திரஸ்ட்டிகள் குறித்தபடி நிறைவேற்றுவித்துக்கொள்ளக்கூடாது.

(c) ஏதோ ஒரு நிலத்தை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிற எ - என்பவன் அதை இஜெட் - என்பவனுக்கு விற்பதாக கந்திராக்ட்டுசெய்கிறுன். அனேகவருஷங்களுக்கு முன்னமே தேசத்தைவிட்டுபோய், இறந்துபோனதாக சாதாரணமாய் நம்பப்பட்டும், ஆனுல் இறந்துபோனதற்குப் போதுமான ருஜுவில்லாமலுமிருக்கிற பி - என்பவனுடைய வாரிசாக எ - என்பவன் அந்தநிலத்தை தாவாசெய்கிறுனென்று விசாரணையில் தெரியவருகிறது. அந்த கந்திராக்ட்டை குறித்தபிரகாரம் நிறைவேற்றும்படி இஜெட் - என்பவனை எ - என்பவன் நிர்ப்பந்திக்கக்கூடாது.

(d) இயற்கையான அன்பினுலும் ஆசையினுலும் எ - என்பவன் ஏதோ ஒருசொத்தை தன் சகோதரர்களுக்கும் அவர்களுடைய சந்ததியாருக்கும் பொருத்தஞ் செய்கிறுன், பின்பு அதை ஒரு அந்நியனுக்கு விற்பதாக கந்திராக்ட்டு செய்கிறுன். அந்தப் பொருத்தத்தை மீறி, எ - என்பவன் அதின்படி தாவா செய்கிறவர்களுடைய சுதந்திரத்திற்கு பாதகமாக இந்தகந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவித்துக் கொள்ளக்கூடாது.

(f) வித்தியாசப்படுவதை ஏற்றுக்கொண்டேயல்லாமல் இன்னுருக்காக கந்திராக்டுகளை குறித்தபடி நிறைவேற்றுவிக்கக்கூடாமை.

வித்தியாசப்படுவதை ஏற்றுக்கொண்டே யல்லாமல் நிறைவேற்றுவிக்கக்கூடாது.

உசு. பிரதிவாதி வித்தியாசஞ் சொல்லுகிற எழுத்துமூலமான கந்திராக்ட்டை வாதி குறித்தபடி நிறைவேற்றிக்கொள்ளக் கோருவானுகில், அடியில் கண்டிருக்கிற விஷயங்களிலே அப்படி சொல்லப்பட்ட வித்தியாசத்தை ஏற்றுக்கொண்டேயல்லாமல், வாதி அப்படி நிறைவேற்றிக்கொள்ளக்கூடாது. (அவையாவென) :—

(a) நிறைவேற்றிக்கொள்ளக் கொறப்பட்ட கந்திராக்ட்டானது, மோசத்தினுலாகிலும் சங்கதி பிசகினுலாகிலும், பிரதிவாதி அந்த கந்திராக்ட்டை செய்தபோது இருப்பதாக அவன் நினைத்தி

ருந்த ஷரத்துகளுக்கு வித்தியாசமான ஷரத்துகளுள்ளதா யிருந்தால் ;

(b) மோசத்தினுலாவது சங்கதிபிசகினுலாவது பிரமையினுலாவது பிரதிவாதியானவன் தனக்கும் வாதிக்கும் இடையில் கந்திராக்ட்டு இன்னவிதமாய் முடியுமென்பதைக் குறித்து நியாயமான தப்பெண்ணங்கொண்டிருந்து பிரதிவாதி அந்த கந்திராக்ட்டு செய்திருந்தால்;

(c) பிரதிவாதியானவன் கந்திராக்ட்டின் ஷரத்துகளை அறிந்தும் அதினு லின்னதுண்டாகுமென்று தெரிந்துகொண்டுமிருந்து, கந்திராக்ட்டுக்குச் சேர்க்கையாக வாதி மாறுபாடாய்ச் சொன்னதெதையோ அல்லது வாதிசெய்த உடன்படிக்கை எதையோ நம்பி அந்த கந்திராக்ட்டுசெய்து, பின்பு வாதி தான் சொன்னபடி நிறைவேற்ற நிராகரித்தால்;

(d) எழுதப்பட்டபடி கந்திராக்ட்டானது எதைக்கொடுப்பதாக ஏற்பட்டிருக்கைவில்லையோ அப்படிப்பட்ட ஏதோ சட்டசம்மதமான முடிவைக் கொடுப்பதாக அந்த கந்திராக்ட்டைச் சேர்ந்தவர்களுடைய நோக்கமிருந்தால்;

(e) கந்திராக்ட்டை எழுதிமுடித்ததற்குப் பின்னிட்டு, அதில் சம்மந்தப்பட்டவர்கள் அதை வேறுபடுத்துவதாகக் கந்திராக்ட்டு செய்திருந்தால் ;

திருஷ்டாந்தம்.

(a) எ - பி - சி - என்பவர்கள் ஒவ்வொருவனும் ஆயிரம் ரூபாய்க்கு - டி - என்பவனுக்கு பத்திர மெழுதிக்கொடுப்பதாகக் கந்திராக்ட்டு செய்கிறதாய்ப் பொருள்படுகிற ஒருசீட்டில் கையெழுத்து பண்ணுகிறார்கள். எ - பி - சி - என்பவர்கள் ஒவ்வொருவனையும் தனித்தனி ஆயிரம் ரூபாய்வரையில் செலுத்தும்படி செய்வதற்கு டி - என்பவன் தொடர்ந்த வியாச்சியத்திலே, "ஒவ்வொருவனும்" என்கிறவார்த்தை பிசகாய் எழுதப்பட்டதென்றும், அவர்கள் 'ஆயிரம் ரூபாய்க்குக் கூட்டாய் பத்திரமெழுதிக் கொடுக்கவேணு மென்பதுதான் உத்தேசமென்றும் அவர்கள் ருஜூப்படுத்துகிறார்கள். இப்படி சொல்லப்பட்ட வித்தியாசத்தை ஏற்றுக்கொண்டுதான் டி - என்பவன் தான் கோரின நிறைவேறலை யடையக்கூடும்.

(b) ஒரு குடியிருப்புவீட்டை வாங்கிக்கொள்ளும்படி எழுத்துமூலமாய் ஏற்பட்ட கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்ற நிர்ப்பந்திப்பதற்கு எ - என்பவன் பி - என்பவன்பேரில் வியாச்சியந்தொடருகிறான். அதை அடுத்த ஒரு முற்றம் அந்த கந்திராக்ட்டில் சேர்ந்ததென்று தான் கருத்துகொண்டிருந்ததாக பி - என்பவன் ருஜூப்படுத்துகிறான், அந்த கந்திராக்ட்டு எழுதியிருப்பதைப் பார்த்தால் அந்தமுற்றம் அப்படி சேர்ந்ததோ சேராததோவென்று சந்தேகத்துக்கிடமாயிருக்கிறது. பி - என்பவன் சொல்லுகிற வித்தியாசத்தை ஏற்றுக்கொண்டேயல்லாமல், அந்த கந்திராக்ட்டை நிறைவேற்றக் கோர்ட்டார் நிராகரிப்பார்கள்.

(c) ஒரு பூமிபடத்தில் வரைந்திருக்கிற எ-என்பவனுடைய ஒருதுண்டு நிலசகிதமாய் ஒரு செய்கரையை பி-என்பவனுக்கு வாடகைக்கு விடுவதாக எ-என்பவன் எழுத்துமூலமாய் கந்திராக்ட்டு செய்கிறான். அந்த கந்திராக்ட்டில் கையெழுத்து செய்வதற்கு முன்னமே, பி-என்பவன் அந்தகந்திராக்ட்டில் கண்டிருக்கிற துண்டு நிலத்திற்குவதிலாய் அதே அளவுக்கு எ - என்பவனுடைய நிலத்தில் வேறொருதுண்டை தனக்கிஷ்டமிருந்தால் எடுத்துக்கொள்வதாக வாய்மொழியாய்ச்

சொல்லியிருக்கிறுன், இதற்கு எ - என்பவனும் வெளிப்படையாய் சம்மதித்தான். பின்பு பி-என்பவன் அந்த எழுத்துமூலமான கந்திராக்ட்டிலே கையெழுத்துசெய்தான். பி - என்பவன் சொன்ன வித்தியாசத்தை ஏற்றுக்கொண்டேயல்லாமல், அந்த எழுத்துமூலமான கந்திராக்ட்டை எ - என்பவன் குறித்தபடி நிறைவேற்றிக்கொள்ளக்கூடாது.

(d) பி - என்பவனுடைய ஆயுசுவரையிலே அவனுக்கும், அவனனுபவித்த பின்பு அவனுடைய சந்ததியாருக்கும் பூமிசித்திக்கும்படி செய்யும்பொருட்டு எ-என்பவனும் பி-என்பவனும் ஏற்பாடுசெய்துகொள்ளுகிருர்கள். அவர்கள் எழுதிக்கொண்ட கந்திராக்ட்டிலே பி - என்பவனுக்கே அறுதியான சொந்தமாக்குவதாக ஷரத்துகள் காணப்படுகிறது. அப்படி எழுதப்பட்ட கந்திராக்ட்டானது குறித்தபடி நிறைவேற்றுவிக்கப்படமாட்டாது.

(e) முதலிலே குடியிருக்கத்தகுந்த மராமத்துசெய்து, மாசம்-௧-இ நூறு ரூபாய் வாடகைக்கு ஓர் காலவரையிலே பி-என்பவனுக்கு ஒருவீட்டை வாடகைக்கு விடுவதாக எ - என்பவன் எழுத்துமூலமாய் கந்திராக்ட்டுசெய்கிருன். அந்த வீடு மராமத்துக்கு யோக்கியமுள்ளதாகாமற்போகிறது, ஆகையால் பி - என்பவனுடைய சம்மதியின்பேரில் எ - என்பவன் அதை இடித்துத்தள்ளி ஒரு புதுவீடு கட்டுகிருன்: புதுவீடு கட்டிவிட்டால் மாசமொன்றுக்கு - ௧௨௦ - ரூபாய் வாடகைகொடுப்பதாக பி-என்பவன் வாய்மொழியாய் கந்திராக்ட்டு செய்திருக்கிருன். பின்பு பி-என்பவன் எழுத்துமூலமாயிருக்கிற கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவித்துக்கொள்ள வியாச்சியந்தொடருகிருன். பின்னிட்ட வாய்மொழி கந்திராக்ட்டினுலே சொல்லப்பட்ட வித்தியாசத்தை ஏற்றுக்கொண்டேயல்லாமல் அந்த அவன் நிறைவேற்றுவித்துக்கொள்ளக்கூடாது.

(g) குறித்த பிரகாரம் கந்திராக்ட்டுகளை நிறைவேற்றும்படி இன்னூர்பேரில் அமுல் நடத்தலாமென்பது.

கந்திராக்ட்டு செய்துகொண்ட நபர்கள் பேரிலும் பின்னிட்ட பாத்தியதையினுலே அவர்களை முன்னிட்டுக் கொண்டு தாவா செய்கிறவர்கள் பேரிலும் பரிகாரம் தேடிக்கொள்வது.

௨௭. இந்த அத்தியாயத்தில் வேறேவிதமாய்ச் சொல்லியிருக்கிறபடிக்குத் தவிர, யாதொரு கந்திராக்ட்டை அடியில்கண்டிருக்கிறவர்கள்பேரில் குறித்தபடி நிறைவேற்றுவிக்கலாம்.—

(a) கந்திராக்ட்டில் சம்பந்தமுள்ள உபயத்திராளில் எவர்பேரிலாவது;

(b) நல்ல எண்ணத்தோடும் ஆதிகந்திராக்ட்டை அறியாமலும் பணம்செலுத்தி கிரயத்துக்காக திரான்சுபர் பெற்றிருப்பவன் தவிர கந்திராக்ட்டுக்குப்பின்னிட்டு உண்டாகிற பாத்தியதையினுலே மேற்படி உபயத்திராளில் யாரை முன்னிட்டுக்கொண்டாவது தாவாசெய்கிற வேறே யாதொருநபரின்பேரில்;

(c) கந்திராக்ட்டுக்குமுன்னிட்டதும் வாதிக்கு தெரிந்ததுமாயிருந்ததுமாயிருந்தபோதிலும், பிரதிவாதியினுல் விலக்கிவைக்கப்பட்டிருக்கிற ஹக்கைக்கொண்டு தாவாசெய்கிற யாதொரு நபரின்பேரில்;

(d) யாதொரு பயிரங்கமான கம[illegible]யார் கந்திராக்ட்டுசெய்திருந்து, பின்னிட்டு வேறொரு பயிரங்கமான [கம்பேனியாரோடு

சேர்ந்துவிடுவார்களாகில், அப்படி சேர்வதினுலுண்டாகிற புது கம்பேனியார்பேரில்;

(e) யாதொரு, ப்பிரங்சமான கம்பேனியை விருத்திபண்ணுகிறவர்கள், அந்த கம்பேனி ஏற்படுவதற்கு முன்னமே, கந்திராக்ட்டு செய்திருந்தால், அந்த கம்பேனியார்பேரில்; ஆனால் அந்த கம்பேனியார் அந்த கந்திராக்ட்டை ஊர்ஜிதப்படுத்தி அனுசரித்தும், அந்த கந்திராக்ட்டுக்கு அந்தகம்பேனி ஏற்பாட்டின் ஷரத்துகளால் பொறுப்புண்டாக்கியு மிருக்கவேணும்.

திருஷ்டாந்தம்.

(b) உட்பிரிவுக்கு.—ஓர் குறித்த தினத்துக்குள் பி - என்பவனுக்கு ஏதோ ஒரு நிலத்தை விற்பனைசெய்கிறதாக எ-என்பவன் கந்திராக்ட்டு பண்ணுகிறுன். அந்த நிலத்தை விற்பனைசெய்யாமலே அந்த தினத்திற்கு முன்னிட்டு எ - என்பவன் உயிலெழுதிவைக்காமலிறந்துபோகிறுன. எ - என்பவனுடைய வாரிசையாவது சம்பந்தத்தில் அவனுக்குப் பிரதிநிதியாயிருக்கிற வேறே எவனையாவது குறித்த பிரகாரம் அந்த கந்திராக்ட்டை நிறைவேற்றும்படி பி-என்பவன் நிர்ப்பந்திக்கலாம்.

௫000 ரூபாய்க்கு ஏதோ ஒருநிலத்தை பி-என்பவனுக்கு விற்பதாக எ-என்பவன் கந்திராக்ட்டு செய்கிறுன். பின்பு எ - என்பவன் ௬000 ரூபாயக்கு அந்த நிலத்தை சி-என்பவனுக்கு விற்கிறுன், ஆதிகந்திராக்ட்டு இவனுக்குத் தெரிந்திருக்கிறது. சி-என்பவனுக்கு விரோதமாக பி-என்பவன் அந்த கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவித்துக்கொள்ளலாம்.

௫000 ரூபாய்க்கு நிலத்தை பி-என்பவனுக்கு விற்பதாக எ-என்பவன் கந்திராக்ட்டு செய்கிறுன். அந்தநிலத்தை பி-என்பவன ஸ்வாதீனப்படுத்திக்கொள்ளுகிறுன். பின்பு எ-என்பவன் ௬000 ரூபாய்க்கு அந்த சி-என்பவனுக்குவிற்கிறுன். அந்தநிலத்தில் பி-என்பவனுக்குள்ள பாத்தியதையைக்குறித்து அவனை சி - என்பவன் விசாரிக்கவில்லை. பி-என்பவனுடைய ஸ்வாதீனமே அவனுக்குள்ள பாத்தியதையைத் தெரியப்படுத்தி சி - என்பவனை பாதிக்கப்போதுமானதாயிருக்கிறது. அவன் சி-என்பவனுக்கு விரோதமாய் அந்தகந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவித்துக்கொள்ளலாம்.

௧000 ரூபாய் ஐவேஜுக்காக எ-என்பவன் தன்னுடைய நிலங்களில் சிலவற்றை பி-என்பவனுக்கு உயில்மூலமாய் ஏற்படுத்துவதாக கந்திராக்ட்டுசெய்கிறுன். சந்திராக்ட்டு செய்யப்பட்டஉடனே எ-என்பவன் உயிலெழுதிவைக்காமல் இறந்துபோகிறுன். அவனுடைய ஆஸ்திக்கு சி-என்பவன் அட்மினிஸ்திரேஷன் பெற்றுக்கொள்ளுகிறுன். பி-என்பவன் சி-என்பவனுக்கு விரோதமாய் அந்த கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவித்துக்கொள்ளலாம்.

எ-என்பவன் பி-என்பவனுக்கு ஏதோ ஒருநிலத்தை விற்பதாக கந்திராக்ட்டு செய்கிறுன். அந்த கந்திராக்ட்டு பூர்த்தியாவதற்கு முன்னமே எ- என்பவன்பைத்தியக்காரனுகிறுன். அவனுடைய கமிட்டியாக சி - என்பவன் நேமிக்கப்படுகிறுன். பி-என்பவன் சி-என்பவனுக்கு விரோதமாய் அந்த கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவித்துக்கொள்ளலாம்.

(c) உட்பிரிவுக்கு.—ஒரு பூஸ்திதியை ஆயுசுவரையிலே எ-என்பவன் அனுபவிப்பதாகவும் அவனுக்குபபின்பு பி-என்பவன் அனுபவிப்பதாகவும் ஏற்பாடாகி எ - என்பவன் எதைக்கொண்டு ஆயுசுவரையில் அனுபவிக்கிறவனுயிருக்கிறுனே அந்த பொருத்த ஆதாரவினுல் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைக் கிரமமாய்ச் செலுத்துவதில், அவன் அந்த பொருத்தத்தை அறிந்திருக்கிற சி - என்பவனுக்கு அந்த பூஸ்திதியை விற்பதாக கந்திராக்ட்டு செய்கிறுன். அந்தவிற்பனை பூர்த்தியாவத

ற்கு முன்னமே எ - என்பவன் இறந்துபோகிறுன். சி- என்பவன் பி - என்பவனுக்கு விரோதமாய் அந்த கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவித்துக் கொள்ளலாம்.

எ-என்பவனும் பி-என்பவனும் நிலத்தை கூட்டாய் அனுபவிக்கிறவர்களாயிருக்கிறுர்கள். அவர்களில் எவனுவது அதில் பிரிவினையில்லாத தன்னுடைய பாதியை தன்னுடைய அயுசுகாலத்தில் பராதீனஞ்செய்யலாம். ஆனுல் அது அந்த சுதந்தரத்திற்குட்பட்டு, பிந்தி ஜீவித்திருப்பவனுக்கு சங்கிரமிக்கிறது. எ - என்பவன் தன்னுடையபாதியை சி-என்பவனுக்கு விற்பதாக கந்திராட்டுசெய்து பின்பு இறந்துபோகிறுன். சி-என்பவன் பி-என்பவனுக்கு விரோதமாய் அந்த கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவித்துக்கொள்ளலாம்.

(h) குறித்தபிரகாரம் கந்திராக்ட்டுகளை நிறைவேற்றும்படி இன்னுர்பேரில் அமுல் நடத்தக்கூடாமை.

கந்திராக்ட்டில் சம்பந்தப்பட்ட இன்னுரை நிறைவேற்றச்சொல்லி நிர்ப்பந்திக்கக்கூடாது.

௨௮. யாதொரு கந்திராக்ட்டில் சம்பந்தப்பட்ட யாதொரு நபர்பேரில் அடியில் கண்டிருக்கிற விஷயங்களி லெதிலாவது அந்த கந்திராக்ட்டைகுறித்தபடி நிறைவேற்றுவித்துக் கொள்ளக்கூடாது;—

(a) அவன் பெற்றுக்கொள்ளும்படியான ஐவேஜானது-அந்த கந்திராக்ட்டு தேதியிலிருக்கிற காரியங்களின் நிலைமையை யோசித்துப்பார்க்குமிடத்து, அதுவே தனித்தாகிலும் மற்ற சங்கதிகளோடு கலந்தாகிலும் வாதிசெய்த மோசத்திற்காவது கருதிய அக்கிரமமான பிரயோசனத்துக்காவது சாட்சியமாகும்படியான அவ்வளவு வித்தியாசமான குறைவாயிருந்தால்;

(b) அந்த கந்திராக்ட்டின்படி யாருக்கு நிறைவேற்றவேண்டியதாயிருக்கிறதோ அந்தநபர் (மனஸாரஅறிந்தோ அறியாமலோ) மாறுபாடுசொல்லியாகிலும், மறைப்புக்காட்டியாகிலும் புறட்டுசெய்தாகிலும் அக்கிரமமான செய்கைகள் நடத்தியாகிலும், அப்படிப்பட்ட நபர் உள்ளபடி நிறைவேற்றியிராத ஆசைகாட்டியாகிலும் அவனுடைய சம்மதியைப் பெற்றிருந்தால்;

(c) சங்கதி பிசகுக்காவது கருத்து மோசத்துக்காவது பிரமிப்புக்காவது உட்பட்டு அவனுடைய சம்மதி கொடுக்கப்பட்டிருந்தால், ஆனுல் பிசகுவிஷயத்தில் பிரதிபலன் கொடுப்பதாக அந்த கந்திராக்ட்டில் நிபந்தனை ஏற்பட்டிருக்கிற பட்சத்தில், அந்த நிபந்தனையின் தாற்பரியப்படி பிசகுக்காக பிரதிபலன் கொடுக்கலாம், மற்றவிஷயங்களிலே அந்த கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவிப்பது யுக்தமாயிருந்தால் அப்படியே நிறைவேற்றுவிக்கலாம்.

திருஷ்டாந்தம்.

(c) உட்பிரிவுக்கு.—இரண்டு எக்ஜிக்கியூட்டர்களில் ஒருவனுகிய எ-என்பவன் தன்னேடொத்த எக்ஜிக்கியூட்டருடைய அதிகாரத்தை தான் அடைந்திருக்கிறுனென்கிற பிசகான நம்பிக்கையினுலே தன் மூலபுருஷனுகிய உயிலெழுதிவைத்தவனுடைய சொத்தை பி-என்பவனுக்கு விற்பதாக உடன்படிக்கை பண்ணுகிறுன், விற்பனையை பூர்த்திசெய்யும்படி பி - என்பவன் பிடிவாதஞ் செய்யக்கூடாது.

ஒருநிலத்தை விற்றுப்போடும்படி ஒரு ஏலக்காரனுக்கு எ-என்பவன் உத்தரவுசெய்கிறான். பின்பு எ-என்பவன் அந்தநிலத்தில் ௨௦ - பீகாக்களைக்குறித்து அந்த ஏலக்காரனுக்குள்ள அதிகாரத்தை ரத்துசெய்கிறான், ஆனால் அந்த ஏலக்காரன் யோசனையில்லாமல் முழுமையையும் அப்படிப்பட்ட ரத்தை அறியாத பி-என்பவனுக்கு விற்றுப்போடுகிறான். பி - என்பவன் அந்த உடன்படிக்கையை குறித்தபடி நிறைவேற்றுவித்துக்கொள்ளக்கூடாது.

(i) குறித்தபடி நிறைவேற்றுவிப்பதைப்பற்றிய வியாச்சியத்தைத் தள்ளிப்போடுவதின் பலன்.

தள்ளிப் போடப்பட்ட பின்புதவறிப் போனதற்காகவியாச்சியந் தொடர தடை.

௨௯. யாதொருகந்திராக்ட்டையாவது அதில் யாதொரு பாகத்தையாவது குறித்தபடி நிறைவேற்றுவதற்காகத் தொடரப்பட்ட வியாச்சியம் தள்ளுண்டு போவதினாலே அப்படிப்பட்டகந்திராக்ட்டோ அல்லது பாகமோ அது தவறிப்போனதற்காக பிரதிபலனுக்கு வியாச்சியந் தொடர வாதியினுடைய சுதந்தரம் தடைபட்டுப்போகும்.

(j) பொருத்த ஆதரவுகளை எழுதி முடித்துக் கொடுக்கும்படி தீர்மானமும் உத்திரவுகளும்.

பொருத்த ஆதரவுகளை எழுதிக் கொடுக்கும்படி தீர்மானங்களுக்கும் உயில் மூலமான உத்தரவுகளுக்கும் முந்திய பிரிவுகளைச் சம்மந்தப் படுத்துவது.

௩௦. கந்திராக்ட்டுக்களைகுறித்து இந்த அத்தியாயத்திலுள்ள நிபந்தனைகள் அவசியமான மாறுதலுடனே, பலான பொருத்த ஆதரவை எழுதிமுடித்துக் கொடுக்கவேணுமென்று செய்யப்பட்ட தீர்மானங்களுக்கும் உயிலிலாவது கொடிசிலிலாவது கண்டிருக்கிற உத்தரவுகளுக்கும் சம்பந்தப்படவேண்டியது.

---

௩ - ம். அத்தியாயம்.—ஆதரவுகளைத் திருத்துவதைக்குறித்து.

இன்னபடிக்கானால் ஆதரவைத் திருத்தலாம்.

௩௧. உபயத்திராளுடைய பரஸ்பர பிசகினாலாவது மோசத்தினாலாவது, எழுத்துமூலமான யாதொரு கந்திராக்ட்டு அல்லது வேறே ஆதரவில் அவர்களுடைய கருத்து உண்மையாய் வெளிப்படாவிட்டால்,உபயத்திராளில் எவனாகிலும் சம்பந்தத்தில் அவனுடைய பிரதிநிதியாகிலும் அந்த ஆதரவைத் திருத்துவித்துக்கொள்ளுவதற்கு வியாச்சியந்தொடரலாம்; அந்த ஆதரவை எழுதுவதில் மோசமாவது பிசகாவது இருந்ததென்று பரிஷ்காரமாய் ருஜுவானதாகக் கோர்ட்டார் கண்டுகொண்டு, அதை எழுதிக்கொடுப்பதில் உபயத்திராளுடைய உண்மையான கருத்து இன்னதென்று நிச்சயிப்பார்களாகில், நல்ல எண்ணத்தோடும் கிரயத்துக்கும் மூன்றாம் நபர்களால் அடையப்பட்ட சுதந்தரங்களுக்கு பாதகமில்லாமல் செய்யக்கூடியவரையிலே, அந்தக் கருத்தைத் தெரிவிக்கும்படியான விதமாய்க் கோர்ட்டார் அந்த ஆதரவை தங்களுக்கு யுக்தமாகத் தோன்றுகிறபடி திருத்தலாம்.

திருஷ்டாந்தம்.

(a) எ - என்பவன் தன்னுடைய வீட்டையும் அதை அடுத்த மூன்று கிடங்குகளில் ஒன்றையும் பி - என்பவனுக்கு விற்க எத்தனித்து, பி - என்பவனு[ல்] தயார்செய்யப்பட்ட விக்கிரயபத்திரத்தில் கையெழுத்துப் போட்டுக்கொடுக்கிறான், அதில் பி - என்பவனுடைய மோசத்தினாலே மூன்றுகிடங்குகளும் சே[ர்]த்தெழுதியிருக்கிறது. மோசடியாய்ச் சேர்க்கப்பட்ட இரண்டு கிடங்குகளி[ல்] ஒன்றை பி - என்பவன் சி - என்பவனுக்குக் கொடுக்கிறான், மற்றொன்றை டி என்பவனுக்கு வாடகைக்கு விடுகிறான், அந்த மோசசங்கதி எவ்வளவேனு[ம்] சி - என்பவனுக்குந் தெரியாது; டி - என்பவனுக்குந் தெரியாது. சி - என்ப[வ]னுக்குக் கொடுக்கப்பட்ட கிடங்கை அந்த விக்கிரயபத்திரத்திலிருந்து நிவர்[த்]திக்கும்படியாக அந்த விக்கிரயபத்திரத்தை பி - சி - என்பவர்களுக்கு விரோ[த]மாய்த் திருத்தலாம்; ஆனால் டி - என்பவனுடைய வாடகையை பாதிக்கும்ப[டி] அதைத் திருத்தக்கூடாது.

(b) உத்தேசமான மனைவியாகிய பி - என்பவளுடைய தகப்பன் எ - என்[ப]வன் விவாகப்பொருத்தத்தினாலே, தான் ஜீவித்திருக்கிறவரையில் உத்தேசமா[ன] கணவனாகிய சி - என்பவனுக்கும் அவனுடைய எக்ஜிக்கியூட்டர்களுக்கும் அ[ட்]மினிஸ்திரேட்டர்களுக்கும் அசைன்களுக்கும் ௫000 - ரூபாய் வருஷவாரி ச[க]ஜீவனம் கொடுப்பதாக சி - என்பவனோடு உடன்படிக்கை செய்கிறான். [சி] என்பவன் இன்சால்வெண்டாக இறந்துபோகிறான், ஆபீஷியல் அசைனியா[ன]வர் எ - என்பவனிடத்திலிருந்து அந்தவருஷவாரி சுகஜீவனம் கிடைக்கவேணு[ம்]மென்று தாவாசெய்கிறார். இந்த வருஷவாரி சுகஜீவனம் பி - என்பவளுக்கும் அவளுடைய மக்களுக்கும் ஏற்பாடாக செலுத்தப்படவேணுமென்று எப்போதும் அந்த உபயத்திராளுடைய கருத்து இருந்ததாகப் பரிஷ்காரமாய் ருஜுவாகிறதாகக் கோர்ட்டார் தெரிந்துகொள்வதின்பேரில், அந்த பொருத்த ஆதரவைத் திருத்தி அந்தவருஷவாரி சுகஜீவனத்தில் எவ்வளவுக்காவது அந்த அசைனிக்கு பாத்தியதையில்லையென்று டிக்கிரிசெய்யலாம்.

கந்திராக்ட்டில் சம்பந்தப்பட்டவர்களுடைய எண்ணத்தைக்குறித்துநிச்சயம்.

௩௨. எழுத்துமூலமான யாதொரு கந்திராக்ட்டைத் திருத்தும்பொருட்டு, அதைச்சேர்ந்த சகலநபர்[க]ளும் அந்தக்கரண சாட்சியாய் நியாயமா[க] உடன்படிக்கைசெய்ய எத்தனித்தார்களென்று கோர்ட்டாருக்குத் திருப்தியுண்டாக வேண்டும்.

திருத்துவதற் குண்டான முகாந்தரங்கள்.

௩௩. எழுத்துமூலமான யாதொரு ஆதரவைத் திருத்துவதில், அந்த ஆதரவிலுள்ள வசனப்போக்கு இன்னபடி இருக்க உத்தேசிக்கப்பட்டதென்று விசாரணை செய்வதுமாத்திரமேயல்ல, அந்த ஆதரவு என்ன கருத்துகொள்ள உத்தேசிக்கப்பட்டதென்றும் கோர்ட்டார் விசாரணை செய்யலாம்.

திருத்தப்பட்ட கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவிப்பது.

௩௪. எழுத்துமூலமான யாதொரு கந்திராக்ட்டை முதலிலே திருத்திப் பின்பு, வாதியானவன் குறித்தபிரகாரம் அதை நிறைவேற்றுவிக்கும்படி அவனுடைய பிளெயிண்டில் கேட்டுக்கொண்டுமிருந்து கோர்ட்டாருக்கு யுக்தமாகவும் தோற்றினால், அப்படியே நிறைவேற்றுவிக்கலாம்.

திருஷ்டாந்தம்.

எ - என்பவன் கோர்ட்டுச்செலவுக்கு வதிலாய் ஒரு நிஷ்கரிஷையான தொ[கை]யை தன்னுடைய அட்டரணியாகிய பி - என்பவனுக்குச் செலுத்துவதாக

எழுத்துமூலமாய் கந்திராக்ட்டுசெய்கிறான். அந்த கந்திராக்ட்டிலே அந்த வழக்காளியினுடைய பேரையும் சுதந்தரத்தையுங்குறித்து பிசகுகளிருக்கிறது. அதுகளுக்கு கண்டிதமாய் அர்த்தஞ்செய்தால் அந்த கந்திராக்ட்டின்படி பி - என்பவனுக்கு சகல சுதந்தரமும் அற்றுப்போகிறது. கோர்ட்டாருக்கு யுக்தமாகத்தோற்றினால், அது எழுதிக்கொடுக்கப்பட்ட காலத்திலே அதில் உபயத்திராளுடைய கருத்தையும் கண்டிருந்தாற்போல, அதைத் திருத்துவித்துக்கொண்டு அந்தத் தொகையை வரப்பற்றுவதற்கு உத்தரவுபெற்றுக்கொள்ள பி - என்பவன் அர்ஹனாகிறான்.

௪-ம் அத்தியாயம்—கந்திராக்ட்டுகளைத் தள்ளிப்போடுவதைக்குறித்து.

இன்னபடிக் கானால் தள்ளிப்போடும்படி உத்தரவுசெய்யலாம்.

௩௫. எழுத்துமூலமான யாதொரு கந்திராக்ட்டில் சம்பந்தப்பட்டவனெவனாவது அதைத் தள்ளிப்போடும்படி வியாச்சியந்தொடரலாம், அடியில்கண்டிருக்கிறவிஷயங்களி லெதிலாவது கோர்ட்டார் அப்படி தள்ளிப்போட தீர்மானஞ் செய்யலாம், அவையாவன :—

(a) கந்திராக்ட்டானது வாதியினாலே ஒழியத்தக்கதாக வாகிலும் அற்றுப்போகத் தக்கதாகவாகிலுமிருந்தால்;

(b) கந்திராக்ட்டானது அதில் விளங்காத காரணங்களைப்பற்றி சட்டத்துக்கு விரோதமானதாகவும்; வாதியைப்பார்க்கிலும் பிரதிவாதி அதிகமாய் பழிக்கு ஆளாவதாகவு மிருந்தால்;

(c) விற்பனை கந்திராக்ட்டை அல்லது குத்தகை செய்துகொள்ளுவதற்கான கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்ற டிக்கிரி செய்யப்பட்டிருந்து, கிரயக்காரனாவது குத்தகைதாரனாவது தான் செலுத்தும்படி கோர்ட்டாரால் உத்தரவுசெய்யப்பட்ட கிரயப்பணம் அல்லது வேறே தொகையைச் செலுத்தத் தவறிப்போனால்.

கிரயக்காரனாவது குத்தகைதாரனாவது விவாதப்பொருளை ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருந்து, அப்படிப்பட்ட ஸ்வாதீனம் அக்கிரமமானதென்று கோர்ட்டார் கண்டறிகிறபட்சத்தில், அப்படி வைத்துக்கொண்டிருப்பவனாக அவன் ஏதாவது வாடகை முதலியவரும்படி பெற்றுக்கொண்டிருந்தால் அதுகளை அவன் விற்றவனுக்காவது குத்தகைக்கு விட்டவனுக்காவது செலுத்தவேணுமென்றும் கோர்ட்டார் உத்தரவுசெய்யலாம்.

அதேவிஷயத்தில், டிக்கிரிசெய்யப்பட்டு அந்தப்படி நடவாதிருக்கிற வியாச்சியத்திலே கோர்ட்டார் நியாத்திற்கேற்றாற்போல அந்த கந்திராக்ட்டைத் தவறிப்போன கட்சிக்காரனுக்குச் சம்பந்தப்படுகிறமட்டிலாவது முழுமையுமாவது உத்தரவுமூலமாய்த் தள்ளிப்போடலா

திருஷ்டாந்தம்,

பவன்

(a) உட்பிரிவுக்கு.—எ - என்பவன் பி - என்பவனுக்கு ஒரு புல டி-எவி

கிறான். அந்த புலத்தின்பேரில் வழிநடைபாத்தியதை யுண்டாயிருக்

எ - என்பவன் நேராய் அறிந்திருந்தும் பி - என்பவனுக்கு மறைக்கிறான். அந்த கந்திராக்ட்டை தள்ளிப்போடும்படி செய்வித்துக்கொள்ள பி - என்பவனுக்கு பாத்தியதையுண்டு.

(b) உட்பிரிவுக்கு.—அட்டரணியாகிய எ - என்பவன் தன் வழக்காளியாகிய ஒரு ஹிந்துவிதந்து பி - என்பவளுடைய கடன்காரர்களை மோசஞ்செய்யும் பொருட்டு சொத்தைத் தனக்குத் திரான்ஸ்பர்பண்ணும்படி அவளை உடன்படுத்துகிறான். இதினாலே உபயத்திராளும் தப்பிதத்தில் சமமாயிருக்கவில்லை. திரான்ஸ்பர் ஆதரவைத் தள்ளிப்போடும்படி செய்வித்துக்கொள்ள பி - என்பவளுக்கு பாத்தியதையுண்டு.

பிசகைப்பற்றி தள்ளிப்போடுவது.

௩௬. எழுத்துமூலமான யாதொரு கந்திராக்ட்டை பிசகைப் பற்றிமாத்திரம் தள்ளிப்போடும்படி எவனுக்கு விரோதமாய்த் தீர்மானஞ் செய்யப்படுகிறதோ அந்த கட்சிக்காரனுக்கு அந்த கந்திராக்ட்டு செய்யப்படாதிருந்தால் அவனுடைய நிலைமை என்னமாயிருக்குமோ அதேநிலைமையில் உண்மையாய் பங்கமுண்டாகா திருந்தாலொழிய, அப்படி தீர்மானஞ் செய்யக்கூடாது.

குறித்தபடி நிறைவேற்றச்சொல்லி தொடருகிற வியாச்சியத்திலே தள்ளிப்போடும்படிக்கும் கேட்டுக்கொள்வது.

௩௭. எழுத்துமூலமான யாதொரு கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றச்சொல்லி வியாச்சியந் தொடருகிற வாதியானவன், அந்த கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவிக்கக் கூடாமையானால், அதைத் தள்ளிப்போட்டு ரத்துசெய்யும்படி ஒப்பித்துவிடலாமென்றும் கேட்டுக்கொள்ளலாம்; கோர்ட்டார் கந்திராக்ட்டை குறித்தபடி நிறைவேற்றுவிக்க நிராகரித்தால், அவர்கள் அதைத் தள்ளிப்போட்டு அப்பிரகாரமே ஒப்பித்துவிடும்படி உத்தரவுசெய்யலாம்.

தள்ளிப் போடும்படியான பரிகாரம் பெறுகிற கட்சிக்காரனை கோர்ட்டார் நியாயம் நடப்பிக்கச்சொல்லலாம்.

௩௮. யாதொரு கந்திராக்ட்டைத் தள்ளிப்போடும்படி தீர்மானஞ் செய்வதின்பேரில், அப்படிப்பட்ட பரிகாரம் யாருக்குக் கொடுக்கப்படுகிறதோ அந்த கட்சிக்காரனை மறு கட்சிக்காரனுக்கு நியாயப்படிக்குண்டான பிரதிபலனைக் கொடுக்கச்சொல்லி கோர்ட்டார் உத்தரவுபண்ணலாம்.

௫ - ம் அத்தியாயம்.—ஆதரவுகளை ரத்துசெய்வதைக்குறித்து.

இன்னபடிக்கானால் ரத்...ண்ண உத்தரவுசெய்...மென்பது.

௩௯. எழுத்துமூலமான யாதொரு ஆதரவு எவன்பேரில் செல்லாததாகவாவது செல்லத் தகாததாகவாவதிருக்கிறதோ அவன் அப்படிப்பட்ட ஆதரவை வெளியில்விட்டுவைத்தால் அதினாலே தனக்கு பெருங்கெடுதி யுண்டாகலாமென்று நியாய...ப்படுகிறபட்சத்தில், அப்படிப்பட்டவன் அதை செல்லாத...து செல்லத்தகாததாகவாவது தீர்மானஞ் செய்வித்துக்கொ...சியந்தொடரலாம், கோர்ட்டாரும் தங்களுக்கு யுக்தமாகத்

தோற்றினால் அப்படியே தீர்மானஞ்செய்து, அதை ஒப்பித்து ரத்து பண்ணும்படி உத்தரவுசெய்யலாம்.

இந்தியன் ரிஜிஸ்திரேஷன் ஆக்ட்டின்படி அந்த ஆதரவு ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருந்தால், யாருடைய ஆபீசில் அந்த ஆதரவு அப்படி ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறதோ அந்த உத்தியோகஸ்தருக்கு கோர்ட்டார் தங்கள் டிக்கிரிக்கு நகலை அனுப்பவும் வேண்டியது, அதற்கு மேல் அப்படிப்பட்ட உத்தியோகஸ்தரானவர் அந்த ஆதரவு ரத்தான சங்கதியை தன்புஸ்தகங்களில் அதற்கு எழுதியிருக்கிற நகலின்பேரில் குறித்துக்கொள்ளவேண்டியது.

திருஷ்டாந்தம்.

(a) ஒருகப்பலின் சொந்தக்காரனாகிய எ - என்பவன் அந்தக்கப்பல் கடல் பயணத்திற்குத் தகுந்ததென்று மோசடியாய்த் தெரிவித்து, இன்ஷியூர்பண்ணுகிறவனாகிய பி - என்பவனை அதை இன்ஷியூர் பண்ணிக்கொள்ளச்சொல்லி உட்படுத்துகிறான். பி - என்பவன் அந்தப்பாலிசியை ரத்துசெய்வித்துக்கொள்ளலாம்.

(b) எ-என்பவன் பி - என்பவனுக்கு நிலத்தைவிற்கிறான், பி - என்பவன் அதை சி - என்பவனுக்கு உயிலெழுதிவைத்துவிட்டு இறந்துபோகிறான். அதற்குமேல் டி - என்பவன் அந்த நிலத்தை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு, தனக்காக நம்பிக்கையின்பேரில் பி-என்பவனுக்கு அந்த விக்கிரயஞ் செய்யப்பட்டதென்று கண்டெழுதியிருக்கிற ஒரு சிருஷ்டனை தஸ்தாவேஜைக் காட்டுகிறான். சி-என்பவன் அந்த சிருஷ்டனை தஸ்தாவேஜை ரத்துசெய்வித்துக்கொள்ளலாம்.

(c) எ-என்பவன் தன்னுடைய நிலத்திலிருக்கிற வாடகைதாரர்களெல்லோரும் இஷ்டமுள்ளவர்களாகவேயிருக்கிறார்களென்று தெரிவித்து, அதை பி-என்பவனுக்குவிற்று, ௧௮௭௭௵ ஜனவரி௴ ௧௰யில் அவனுக்கு விக்கிரயபத்திரம் எழுதிக்கொடுக்கிறான். அந்த தினத்திற்குப்பின்பு உடனே அந்த நிலத்தில் ஓர்பாகத்திற்கு ௧௮௭௬௵ அக்டோபர்௴ ௧௰ போட்டு ஒரு வாடகச்சீட்டை சி-என்பவனுக்கு எ-என்பவன் மோசடியாய்க்கொடுத்து, அந்த வாடகச்சீட்டை இந்தியன் ரிஜிஸ்திரேஷன் ஆக்டின்படி ரிஜிஸ்தர்செய்வித்துக்கொள்ளுகிறான். பி-என்பவன் இந்த வாடகச்சீட்டை ரத்துசெய்வித்துக்கொள்ளலாம்.

(d) எ - என்பவன் பி-என்பவனுக்கு ஒரு கப்பலை விற்பனைசெய்து ஒப்பிக்கிறதாகவும், எ-என்பவன் பி-என்பவன்பேரில் முப்பதினாயிரம் ரூபாய்க்கு எழுதுகிற நாலு உண்டிகளை பி - என்பவன் அங்கீகரிப்பதினாலே பணம் செல்லாக்கிக்கொள்ளுகிறதாகவும் உடன்படிக்கை பண்ணுகிறான், உண்டிகள் எழுதி அங்கீகரிக்கப்பட்டது, ஆனால் உடன்படிக்கைப்படி கப்பல் ஒப்பிக்கப்படவில்லை அந்த உண்டிகளில் ஒன்றைக்குறித்து எ-என்பவன் பி-என்பவன்பேரில் வியாச்சியம் தொடருகிறான். பி - என்பவன் அந்த உண்டிகளையெல்லாம் ரத்துசெய்வித்துக்கொள்ளலாம்.

இன்ன ஆதரவுகளை கொஞ்சமட்டில் ரத்துபண்ணலாமென்பது.

௪௦. யாதொரு ஆதரவானது வெவ்வேறு சுதந்தரங்களுக்காகிலும் வெவ்வேறு உடன்பாடுகளுக் காகிலும் சாட்சியமாயிருக்குமாகில், கோர்ட்டார் கிரமமான விஷயத்திலே, ஓர் பாகத்தின் மட்டில் அதை ரத்துசெய்து மிகுதிக்கு அதை இருக்கவொட்டலாம்.

திருஷ்டாந்தம்.

எ-என்பவன் பி-என்பவன்பேரில் ஒரு உண்டி எழுதுகிறான். பி-என்பவன் அ[illegible]த சி-என்பவனுக்கு இண்டாரிசுபண்ணுகிறான் [illegible]து சி-என்பவனால் டி-எவி

பவனுக்கு இண்டாரிசு பண்ணப்பட்டதாகத்தோன்றுகிறது. டி-என்பவன் அதை இ-என்பவனுக்கு இண்டாரிசுபண்ணுகிறான். சி-என்பவனுடைய இண்டாரிசுமெண்டு சிருஷ்டனையாயிருக்கிறது. சி-என்பவன் அப்படிப்பட்ட இண்டாரிசுமெண்டை ரத்துசெய்வித்துக்கொள்ள அர்ஹனாகிறான், மற்றவிஷயங்களில் அந்த உண்டி அப்படியே இருக்கலாம்.

யார்பட்சத்தில் ஆதரவு ரத்து செய்யப்படுகிறதோ அந்த கட்சிக் காரனை பிரதிபலன கொடுக்கச்சொல்லி உத்தரவுபண்ண அதிகாரம்.

௪௧. யாதொரு ஆதரவை ரத்துபண்ணும்படி தீர்மானஞ் செய்வதின்பேரில், அப்படிப்பட்ட பரிகாரம் யாருக்குக் கொடுக்கப்படுகிறதோ அந்த கட்சிக்காரனை மறுகட்சிக்காரனுக்கு நியாயப்படிக்குண்டான பிரதிபலனைக் கொடுக்கச்சொல்லி கோர்ட்டார் உத்தரவு பண்ணலாம்.

௬-ம் அத்தியாயம்.—தன்மை அல்லது சுதந்தரம் உண்டென்று மாத்திரம் ஸ்தாபிக்கிற டிக்ளெரேட்டொரி டிக்கிரிகளைக்குறித்து.

தன்மை அல்லது சுதந்தரம் உண்டென்று மாத்திரம் ஸ்தாபிப்பதை கோர்ட்டார் யுக்தாயுக்தம் யோசித்துச்செய்வது.

௪௨. சட்டசம்மதமான யாதொரு தன்மைக்காவது, யாதொரு சொத்தைக்குறித்து யாதொரு சுதந்தரத்திற்காவது அர்ஹனாயிருக்கிற யாதொரு நபர்-அப்படிப்பட்ட தன்மைக்காவது சுதந்தரத்திற்காவது தன்னுடையபாத்தியதையை மறுக்கிற அல்லது மறுக்க சம்பந்தமுள்ளவனாயிருக்கிற யாதொரு நபரின்பேரில் வியாச்சியந் தொடரலாம், கோர்ட்டார் தங்களுக்கு யுத்தமாகத் தோற்றினால் அவனுக்கு அப்படி பாத்தியதையிருக்கிறதென்றும், அப்படிப்பட்ட வியாச்சியத்தில் வேறே யாதொரு பரிகாரத்தை வாதி கேட்கவேண்டியதில்லையென்றும் ஸ்தாபிதஞ் செய்யலாம்:

அப்படி ஸ்தாபிப்பதற்குத்தடை.

ஆனால், பாத்தியதையை ஸ்தாபித்துக்கொள்ளுவது மாத்திரமேயல்லாமல் வேறேபரிகாரமும் தேடிக்கொள்ள வாதி சக்தியுள்ளவனாயிருந்து, அப்படிச் செய்யாதிருப்பானாகில், கோர்ட்டார் அப்படிப்பட்ட யாதொரு ஸ்தாபனையும் செய்யக்கூடாது.

விவரணம்.—சொத்தின் திரஸ்ட்டியானவன் - எவன் ஜீவதெசையாயிராமலும், ஜீவதெசையா யிருந்தால் எவனுக்காகத் தான் திரஸ்ட்டியாயிருக்க வேண்டியகாயு மிருக்கிறானோ அப்படிப்பட்டவனுடைய பாத்தியதைக்கு மாறானபாத்தியதையை மறுக்கச் சம்பந்தமுள்ள நபராயிருக்கிறான்.

திருஷ்டாந்தம்.

(a) எ-என்பவன் ஒரு நிலத்தை சட்டப்படி தன் ஸ்வாதீனத்தில் வைத்துக் கொண்டிருக்கிறான், அண்டைகிராமத்துக் குடிகள் அந்தநிலத்தில் குறுக்கேவழி நடைபாத்தியதைக்கு தாவாசெய்கிறார்கள். அப்படி தாவாசெய்யப்பட்ட பாத்தியதைக்கு அவர்கள் அர்ஹா[illegible]லவென்று ஸ்தாபனைசெய்யும்படி எ-என்பவன் வியாச்சியந் தொடரலாம்.

(b) "நான் இறந்துபோகும் காலத்தில் ஜீவித்திருந்தால் பிரதி நபருமாகிய எல்லோரும் சமமாய் பாகித்துக்கொள்ளவேண்டியது, பின்பு அவர்களுடையமக்களுள் ஜீவித்திருப்பவர்கள் பங்கிட்டுக்கொள்ளவேண்டியது" என்று பி-சி-டி-என்பவர்களுக்கு எ-என்பவன் தன்னுடைய சொத்தை உயிலெழுதி வைக்கிருன். அப்படிப்பட்ட மக்களிருக்கவில்லை. எ-என்பவனுடைய எக்ஜிக்கியூட்டர் பேரில் தொடரப்பட்ட வியாச்சியத்திலே, அந்தசொத்தை பி-சி-டி-என்பவர்கள் அறுதியாய் எடுத்துகொண்டார்களோ அல்லது அவர்களுடைய ஆயுசுவரையில்மாத்திரம் எடுத்துக்கொண்டார்களோவென்று கோர்ட்டார் நிச்சயிக்கலாம், மேலும் மக்களுக்கு பாத்தியதை யுண்டாவதற்குமுன்னமே அவர்களுடைய சுதந்தரங்களையும் ஸ்தாபனைசெய்யலாம்.

(c) எ-என்பவன் எப்போதாவது ஒருலட்சம் ரூபாய்க்கு அதிகப்பட்ட சொத்துக்கு தனக்கு பாத்தியதை யுண்டாகுமாகில், அதை சில திரஸ்டுகளின் பேரில் தான் பொருத்துவதாக உடன்படிக்கைபண்ணுகிருன். அப்படிப்பட்ட யாதொரு சொத்து சேருவதற்குமுன்னேயாவது, திரஸ்ட்டின்படி பாத்தியதையுள்ளவர்கள் நிச்சயிக்கப்படுவதற்கு முன்னேயாவது, அநிச்சயத்தைப்பற்றி அந்தஉடன்படிக்கை செல்லாதென்று ஸ்தாபனை பெறுவதற்கு அவன் வியாச்சியந் தொடருகிருன். கோர்ட்டார் அந்தஸ்தாபனை செய்யலாம்.

(d) எ-என்பவன் ஆயுவரையில் மாத்திரம் தனக்கு பாத்தியதையுள்ள சொத்தை பி-என்பவனுக்கு ஆதீனஞ்செய்கிருன். திரும்ப தனக்கு அந்த சொத்து சித்திக்கும்படியான பர்த்தியதையுள்ள சி-என்பவனுக்கு விரோதமாயிருக்கிறபடியால் அந்த பராதீனஞ் செல்லாது. எ-பி-என்பவர்கள்பேரில் சி-என்பவனுல் தொடரப்பட்ட வியாச்சியத்திலே கோர்ட்டார் சி-என்பவனுக்கு அப்படிப்பட்ட பாத்தியதையை யுண்டென்று ஸ்தாபனைசெய்யலாம்.

(e) ஆண்சந்ததியில்லாத ஒரு ஹிந்துவிதந்துவானவள் அப்படிப்பட்டவளாக தன்னுடைய ஸ்வாதீனத்திலிருக்கிற சொத்தில் ஓர்பாகத்தை பராதீனஞ் செய்கிருள். அவளுக்குப்பின் ஜீவித்திருந்தால் அந்த சொத்தை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளுவதற்கு தாயாதித்தனமாய் சுதந்தரமுடையவன் பராதீனம்பெற்றவன்பேரில் தொடருகிற வியாச்சியத்திலே, அந்த பராதீனம் சட்டசம்மதமான அவசியமில்லாமல் செய்யப்பட்டதென்றும், ஆகையினுலே அந்த விதந்துவின் ஜீவிதகாலத்திற்குப் பின்பு அது செல்லாதென்றும் ஸ்தாபனைத் தீர்மானம்பெறலாம்.

(f) சொத்துடையவளாயிருக்கிற ஒரு ஹிந்துவிதந்துவானவள் தன்னுடைய இறந்துபோன கணவனுக்காக ஒரு புத்திரனை ஸ்வீகாரஞ் செய்துகொள்ளுகிருள். புத்திரனில்லாமல் அவள் இறந்துபோவதின்பேரில் சொத்தை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ள தாயாதித்தனமாய் சுதந்தரமுடையவன் ஸ்வீகாரபுத்திரன்பேரில் தொடரப்பட்ட வியாச்சியத்திலே அந்த ஸ்வீகாரம் செல்லாதென்கிற ஸ்தாபனைத் தீர்மானம்பெறலாம்.

(g) எ-என்பவன் ஒரு சொத்தை தன் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிருன். பி-என்பவன் அந்த சொத்துக்குத் தான் சொந்தக்காரனென்று சொல்லி அதைத் தனக்கு ஒப்பிக்கும்படி எ-என்பவனைக் கேட்கிருன். எ-என்பவன் அந்தசொத்தைத் தான் வைத்துக்கொள்ளும்படியான பாத்தியதையைக் குறித்து ஸ்தாபனைத் தீர்மானம்பெறலாம்.

(h) எ-என்பவன் பி-என்பவனுக்கு அவனுடைய ஆயுசுவரையிலும், பின்பு பி-என்பவனுடைய மனைவிக்கும் பி-என்பவனுக்கு அவளிடமாய் மக்கள் பிறந்திருந்தால் அந்த மக்களுக்கும், மனைவியாவது மக்களாவதில்லாமல் பி-என்பவன் இறந்துபோனுல், சி-என்பவனுக்கும் சொத்து சித்திக்கும்படி உயிலெழுதி வைக்கிருன. பி-என்பவனுக்கு பெண்சாதி என்று வழங்கிவந்திருக்கிற டி-என்பவளும் மக்களுமிருக்கிருர்கள், ஆனுல் பி-என்பவனும் டி-என்பவளும் சட்டப்படி விவாகஞ் செய்துகொண்டவர்களல்லவென்று சி-என்பவன் சொல்லுகிருன், டி-என்பவளும் அவளுடைய மக்களும் பி-என்பவனுடைய ஜீவிதகாலத்திலே சி-என்பவன்பேரில் வியாச்சியந் தொடர்ந்து,

அதில் அவர்கள் எதார்த்தமாய் பி - என்பவனுடைய மனைவியும் மக்களுமென்று ஸ்தாபனைத் தீர்மானம்பெறலாம்.

ஸ்தாபனைத் தீர்மானத்தின் பலன்.

௪௩, இந்த அத்தியாயத்தின்படி செய்யப்பட்ட ஸ்தாபனைத் தீர்மானமானது வியாச்சியத்தைச் சேர்ந்த கட்சிக்காரர்களையும், முறையே அவர்களை முன்னிட்டுக்கொண்டு தாவாசெய்கிறவர்களையும், அந்த கட்சிக்காரர்களில் எவராவது திரஸ்ட்டிகளாயிருந்தால், ஸ்தாபனைத் தீர்மானத்தின் தேதியில் ஜீவித்திருக்கிற எவர்களுக்கு அப்படிப்பட்ட கட்சிக்காரர்கள் திரஸ்ட்டிகளா யிருப்பார்களோ அந்த நபர்களையுமாத்திரம் உடன்படுத்துகிறதாயிருக்கிறது.

திருஷ்டாந்தம்.

ஒரு ஹிந்துவாகிய எ - என்பவன், அவனுடைய மனைவி என்று சொல்லப்பட்ட பி - என்பவளும் அவளுடைய தாயும் பிரதிவாதிகளாயிருக்கிற வியாச்சியத்திலே, அவனுடைய விவாகம் கிரமமாய் சடங்குடன் நிறைவேற்றப்பட்டதென்கிற ஸ்தாபனைத் தீர்மானமும் அவனுடைய விவாகசம்பந்தமான சுதந்தரங்கள் மறுபடியும் சித்திக்கும்படி உத்தரவும் பெறவேணுமென்று கோருகிறான். கோர்ட்டார் அந்தத் தீர்மானமும் உத்தரவும் செய்கிறார்கள். சி- என்பவன் பி - என்பவளைத் தன்னுடைய மனைவியென்று தாவாசெய்து பின்பு பி - என்பவளை வரப்பற்றுவதற்காக எ - என்பவன்பேரில் வியாச்சியந் தொடருகிறான். முன்னைய வியாச்சியத்தில் செய்யப்பட்ட ஸ்தாபனைத் தீர்மானம் சி - என்பவனை உடன்படுத்தமாட்டாது.

௭-ம் அத்தியாயம்.—ரஸீவர்களை நேமிப்பதைக்குறித்து.

ரஸீவர்களை நேமிப்பதை யுக்தாயுக்தம் யோசித்துச் செய்தல்.

௪௪. வியாச்சியம் நடந்துகொண்டிருக்கையில் ரஸீவரை நேமிப்பது கோர்ட்டாருக்குத் தோன்றுகிற யுக்தாயுக்தத்தை அனுசரித்த விஷயமாயிருக்கிறது.

சீவில் புரொசீடர்கோடுக்குச் சம்பந்தப்படுவது.

அவரை நேமிக்கிற விதத்தையும் அதின் சித்தியையும் அவருடைய சுதந்தரங்களையும் அதிகாரங்களையும் கடமைகளையும் பொறுப்புகளையும் சீவில்புரோசீடர்கோடைக்கொண்டு நடப்பிக்கவேண்டியது.

௮-ம். அத்தியாயம்—சர்க்கார் அலுவல்களை நிறைவேற்றுவிப்பதைக் குறித்து.

சிலகுறித்த செய்கைகளைச் செய்யும்படி சாக்கார் உத்தியோகஸ்தர்கள் முதலானவர்களுக்கு உத்தரவுபண்ண அதிகாரம்.

௪௫. போர்ட்டு உல்லியத்திலும் சென்னபட்டணத்திலும் பொம்பாயிலுமுள்ள ஹைகோர்ட்டுகளில் எந்தக் கோர்ட்டாராவது, சீவில் விவகாரத்திலே தங்களுடைய சாதாரண அசல்விசாரணை அதிகாரப்பிரதேச எல்லைக்குள் யாதொரு குறித்தகாரியத்தை, [illegible]ாயமானதாயிருந்தாலும் அங்காமியானதாயிருந்தாலும் அப்படிப்பட்ட தொ

ருசர்க்கார் உத்தியோகத்திலிருக்கிற யாதொரு நபராவது யாதொரு கூட்டத்தாராவது யாதொரு தாழ்ந்த கோர்ட்டாராவது செய்யும்படிக்காகிலும் செய்யாமலிருக்கும்படிக்காகிலும் உத்தரவு பண்ணலாம்: ஆனால்—

(a) மேற்படி குறித்தகாரியத்தை செய்யாமலிருப்பதினாலேயோ செய்வதினாலேயோ எவனுடைய சொத்துக்கு துரைத்தனமானியத்துக்கு அல்லது உரிய சுதந்தரத்துக்கு கெடுதியுண்டாயிருக்குமோ அவன் அப்படிப்பட்ட உத்தரவுக்காக மனுவுசெய்துகொண்டிருக்கவேணும்;

(b) அப்படிச்செய்வுதாவது செய்யாமலிருப்பதாவது அந்தந்தகாலத்தில் வழங்கிவருகிற யாதொரு சட்டப்படி, அப்படிப்பட்ட நபர் அல்லது கோர்ட்டாருடைய துரைத்தன சம்மந்தமான லட்சணத்திலேஅப்படிப்பட்ட நபர் அல்லது கோர்ட்டார்பேரிலாவது கூட்டத்தாருடைய ஸமூஹலட்சணத்திலே அப்படிப்பட்ட கூட்டத்தார்பேரிலாவது பரிஷ்காரமாய் விழுந்த பொறுப்பாயிருந்திருக்கவேணும்;

(c) அப்படிச்செய்வதாவது செய்யாமலிருப்பதாவது ஹைகோர்ட்டாருடைய அபிப்பிராயத்திலே கிரமத்திற்கும் நியாயத்திற்கும் ஒற்றுமையா யிருந்திருக்கவேணும்;

(d) மனுவுதாரனுக்கு சட்டப்படி போதுமான வேறே குறித்த பரிகாரம் இல்லாதிருக்கவேணும்; மேலும்,

(e) மனுவின்பேரில் செய்யப்பட்ட உத்தரவினாலே கொடுக்கப்பட்ட பரிகாரம் பூர்த்தியானதாயிருக்கவேணும்.

அப்படிப்பட்ட அதிகாரத்தில் நின்றும் நிவாரணை.

இந்தப் பிரிவிலுள்ள எந்த நிபந்தனையினாலும் யாதொரு ஹைகோர்ட்டாருக்கு:—

(f) இந்தியாவுக்காக ஆலோசனை சபையிலுள்ள ஸ்டேட்டு செக்ரிட்டேரியவர்களையாவது, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜனரலவர்களையாவது, ஆலோசனை சபையிலுள்ள சென்னபட்டணம் கவர்னரவர்களையாவது, ஆலோசனை சபையிலுள்ள பொம்பாய் கவர்னரவர்களையாவது, பங்காளத்து லெப்ட்டினன்டு கவர்னரவர்களையாவது, உடன்படுத்தும்படியான யாதொரு உத்தரவுசெய்வதற்காகிலும்:

(g) அரசின்பேரில் செய்யப்பட்ட தாவாவிற்குச் சரிச்சொல்லும்படி செய்வதற்காக மாத்திரம் அரசைச்சேர்ந்த வேறே யாதொரு உத்தியோகஸ்தராக அந்த உத்தியோகஸ்தர்பேரில் யாதொரு உத்தரவுசெய்வதற்காகிலும்;

(h) அந்தந்தகாலத்தில் வழங்கிவருகிற யாதொரு சட்டப்பிரகாரம் மற்றப்படி பரிஷ்காரமாய் நிவாரணை செய்யப்பட்டிருக்கிற யாதொரு உத்தரவு செய்வதற்காகிலும், அதிகாரமுண்டாவதாக எண்ணக்கூடாது.

மனுவு செய்துகொள்ளுகிற விதம்.

௪௬. நாற்பத்தைந்தாவது பிரிவின்படிக்குள்ளடான பிரதி விண்ணப்பமும் - அநியாயமடைந்தவனுக்கு விவாத விஷயத்திலுண்டாயிருக்கிற சுதந்தரத்தையும் அவனுக்கு இன்ன நியாயங் கிடைக்கவேணுமென்று கேட்டு அது மறுக்கப்பட்டதையும் கண்டெழுதியிருக்கிற அவனுடைய பிரமாண பத்திரிகையின்பேரில் ஆதாரப்பட்டிருக்கவேணடியது; ஹைகோர்ட்டார் தங்களுக்கு யுக்ததமாகத்தோற்றினல், மனுவில் கேட்டுக்கொள்ளப்பட்ட உத்தரவை பிரதமத்திலே தானே அறுதியாகச்செய்யலாம், அல்லது அதைநிராகரிக்கலாம், அல்லது மனுவில் கேட்டுக்கொள்ளப்பட்ட உத்தரவைச் செய்யக்கூடாமைக்குக் காரணத்தைத் தெரிவிக்கும்படியான விதியைக் கொடுக்கலாம்.

அதின்பேரில் நடவடிக்கை.

அப்படிக் கில்லாவிட்டால் வேறேவகை உத்தரவு.

கடைசி விஷயத்திலே, யார்பேரில் முறையிட்டுக் கொள்ளப்பட்டதோ அந்த நபராவது கோர்ட்டாராவது கூட்டத்தாராவது போதுமானகாரணங் தெரிவிக்காவிட்டால், ஹைகோர்ட்டார்-உத்தரவில் காணப்படுகிற காரியத்தை செய்யும்படிக்காவது செய்யாமலிருக்கும்படிக்காவது, இது விஷயத்தில் ஹைகோர்ட்டாரால் நிர்னயிக்கப்படுகிற தினத்திலே அப்படிக்கல்லவென்பதற்கு முகாந்தரம் தெரிவித்து அதற்கு ஜவாபு சொல்லும்படிக்காவது, வேறு உத்தரவை முதலில்செய்யலாம்.

கண்டிப்பான உத்தரவு.

௪௭. யாருக்கு அப்படிப்பட்ட உத்தவு செய்யப்படுகிறதோ அந்த நபராவது கோர்ட்டாராவது கூட்டத்தாராவது ஜவாபு சொல்லாவிட்டாலும், சொல்லுகிற ஜவாபு போமையாகவாவது பொய்யாகவாவதிருந்தாலும், அப்போது ஹைகோர்ட்டார் அந்தக்காரியத்தை அறுதியாய்ச் செய்யும்படிக்காவது செய்யாமலிருக்கும்படிக்காவது கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கலாம்.

உத்தரவுகளைநிறைவேற்றுவதும் அதுகளின்பேரில் அப்பீலும்.

௪௮. இந்த அத்தியாயத்தின்படிக்குண்டான பிரதி உத்தரவையும், சீவில் விவகாரத்திலே ஹைகோர்ட்டார் சாதாரண அசல்விசாரணை அதிகாரஞ் செலுத்துவதில் செய்யப்பட்ட டிக்கிரியைப்போல நிறைவேற்றவேண்டியது, அந்தப்படியே அதின்பேரில் அப்பீலும் செய்யலாம்.

செலவுகள்.

௪௯. இந்த அத்தியாயத்தின்படிக்குண்டான சகல மனுக்களுக்கும் உத்தரவுகளுக்கும் செலவுகள் ஹைகோர்ட்டாருக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி இருக்கவேண்டியது.

மாண்டமஸ் என்னும் கட்டளை பிறப்பிக்கக் கூடாதென்பது.

௫௦. ஹைகோர்ட்டாராவது அந்தக்கோர்ட்டு ஜட்ஜிகளில் எவராவது இனிமேல் யாதொருகாரியத்தைச்செய்யும்படி உத்தரவுசெய்கிற மாண்டமஸ் என்னும் யாதொரு கட்டளை பிறப்பிக்கக்கூடாது.

௫௧. மேற்படி ஹைகோர்ட்டுகளில் பிரதி கோர்ட்டாரும் இந்த அத்தியாயத்தின்படி நடவடிக்கை நடத்துவதற்குக் கூடுமான சீக்கிரத்தில் விதிகள் செய்ய வேண்டியது; அப்படிப்பட்ட விதிகள் செய்யப்படுகிறவரையில், மாண்டமஸ் என்னும் கட்டளை கொடுக்கும்படி செய்துகொள்ளுகிற மனுக்களைக்குறித்தும் அந்தக்கட்டளை கொடுப்பதைக்குறித்தும் அப்படிப்பட்ட கோர்ட்டில் நடந்துவருகிற ஆசாரமானது இந்த அத்தியாயத்தின்படிக் குண்டான மனுக்களுக்கும் உத்தரவுகளுக்கும் கூடியமட்டில் சம்மந்தப்படவேண்டியது.

விதிகள் செய்ய அதிகாரம்.

௩-ம் பாகம்.—செய்யக்கூடாதென்று தடுக்கும் பரிகாரம்.

௯-ம் அத்தியாயம்.—சாதாரணமாய் இன்ஜங்கிஷன் என்னுங் கட்டளையைக்குறித்து.

---

௫௨. செய்யக்கூடாதென்று தடுக்கும் பரிகாரமானது கொஞ்சகாலத்திற்கான அல்லது நிரந்தரமான இன் ஜங்கிஷன் என்னுங் கட்டளை மூலமாய் கோர்ட்டாருடைய யுக்தப்படி கொடுக்கப்படுகிறது.

செய்யக்கூடாதென்று தடுக்கும் பரிகாரங்கொடுக்கப்படுகிறவிதம்.

௫௩. கொஞ்சகாலத்திற்கான இன்ஜங்கிஷன் என்னும் கட்டளைகள் குறித்த காலவரையிலாவது கோர்ட்டாருடைய மறு உத்தரவுவரையிலாவது செல்லும்படியானவைகள். வியாச்சியம் நடந்துகொண்டிருக்கிற எந்தக்காலத்திலாவது அதுகளைக் கொடுக்கலாம், மேலும் அதுகளை சீவில்புரோசிடர்கோடின்படி நடப்பிக்கலாகும்.

கொஞ்ச காலத்திற்கான இன்ஜங்கிஷன் என்னுங்கட்டளை.

நிரந்தரமான இன்ஜங்கிஷன் என்னுங்கட்டளையை வியாச்சிய விசாரணையிலே அந்த வியாச்சியத்தின் சாராம்சங்களின்பேரில் செய்யப்பட்ட டிக்கிரி மூலமாய்மாத்திரம் கொடுக்கக்கூடும்: அதினாலே பிரதிவாதியானவன் வாதியினுடைய சுதந்தரங்களுக்கு விரோதமாயிருக்கும்படியான யாதொரு சுதந்தரத்தை உறுதிச்சொல்லிக் கொள்ளாமலாகிலும் யாதொரு காரியத்தைச் செய்யாமலாகிலு மிருக்கும்படி நிரந்தரமாய் கட்டளையிடப்படுகிறான்.

நிரந்தரமான இன்ஜங்கிஷன் என்னும் கட்டளை.

௧௦-ம் அத்தியாயம்.—நிரந்தரமான இன்ஜங்கிஷன் என்னுங் கட்டளையைக்குறித்து.

---

௫௪. மனுவுதாரன் பட்சத்தில் வெளிப்படையாகவாவது குறிப்பாகவாவதிருக்கிற யாதொரு உடன்பாடு தவறுவதைத் தடுப்பதற்கு, இந்த அத்தியாயத்திலிருக்கிற அல்லது இந்த அத்தியாயத்தினாலே

இன்னபடிக்கானால் நிரந்தரமான இன்ஜங்கிஷ

ன் என்னுங்கட்டளைகொடுப்பது. குறிக்கப்பட்ட வேறே நிபந்தனைகளுக் குட்பட்டு நிரந்தரமான இன்ஜங்கிஷன் என்னுங் கட்டளைகொடுக்கலாம்.

அப்படிப்பட்ட உடன்பாடு கந்திராக்ட்டினுலே உண்டாயிருந்தால், இந்த ஆக்ட்டு உ-ம் அத்தியாயத்தில் சொல்லியிருக்கிற விதிகளையும் நிபந்தனைகளையும் அனுசரித்து கோர்ட்டார் நடத்தவேண்டியது.

சொத்தில் வாதிக்குண்டான சுதந்தரத்தை யாவது அனுபோகத்தையாவது பிரதிவாதி தடுத்தாலும் தடுக்கிறதாக மிரட்டினுலும், அடியில்கண்டிருக்கிற விஷயங்களிலே கோர்ட்டார்நிரந்தரமான இன்ஜஙகிஷன் என்னுங் கட்டளை கொடுக்கலாம (அவையாவன);—

(a) பிரதிவாதியானவன் வாதிக்காக சொத்தின் திரஸ்ட்டியாயிருந்தால்;

(b) தடுப்பதினுலே உண்டுபண்ணியாவது உண்டுபண்ணுவதுபோலாவதிருக்கிற வாஸ்தவமான நஷ்டத்தை நிச்சயிப்பதற்கு பிரமானமொன்று மில்லாவிட்டால்;

(c) தடுத்ததற்கு திரவியப்பிரதிபலன் கொடுப்பது தகுந்த பரிகாரமாகாததா யிருந்தால்;

(d) தடுத்ததற்கு திரவியப் பிரதிபலன் பெறக்கூடாததுபோ லிருந்தால்;

(e) நியாயஸ்தல நடவடிக்கைகள் அதிகப்படுவதைத் தடுப்பதற்கு இன்ஜங்கிஷன் என்னுங்கட்டளை அவசியமாயிருந்தால்.

விவரணம்.—இந்தப்பிரிவின்பொருட்டு வர்த்தக அடையாளமானது சொத்தாகும்.

திருஷ்டாந்தம்.

(a) எரு நிலத்தை எ-என்பவன் பி-என்பவனுக்கு வாடகைக்கு விடுகிறுன், அதிலிருந்து மணலையாவது பருக்கையையாவது வெட்டியெடுக்கிறதில்லையென்று பி-என்பவன் கந்திராக்ட்டுசெய்கிறுன். அவனுடைய கந்திராக்ட்டை மீறி வெட்டியெடுப்பதிலிருந்தும் பி-என்பவனைத் தடுப்பதற்கு இன்ஜங்கிஷன் என்னும் கட்டளைபெற எ-என்பவன் வியாச்சியந் தொடரலாம.

(b) ஒரு திரஸ்ட்டியானவன் திரஸ்ட்டை மீறுவதாக மிரட்டுகிறுன். அவனேடு உடன் திரஸ்ட்டிகள் யாராவதிருந்தால் அவர்கள் அந்த மீறுதலைத் தடுப்பதற்கு இன்ஜங்கிஷன் என்னும் கட்டளைபெற வியாச்சியந் தொடரவேண்டியது, பிரயோஜன மடையத்தக்க சொந்தக்காரர்கள் அந்தக் கட்டளைபெற வியாச்சியந் தொடரலாம்.

(c) ஒரு பயிரங்கமான கம்பேனியின் டைரெக்ட்டர்கள் முதற்பணத்திலிருந்தாவது கடன்வாங்கின பணத்திலிருந்தாவது டிவிடெண்டு செலுத்த எத்தனமா யிருக்கிறுர்கள். அவர்களைத் தடுப்பதற்கு இன்ஜங்கிஷன் என்னும் கட்டளைபெற பங்குக்கார்களில் யாராவது வியாச்சியந் தொடரலாம்.

(d) அக்கினிச் சேதத்திற்கும் பிராண்ச்சேதத்திற்கும் இன்ஷியூரான்ஸ் பண்ணுகிற கம்பேனியாருடைய டைரெக்ட்டர்கள் கடல்சம்பந்தமான இன்ஷியூரான்ஸ் பண்ண எத்தனப்படுகிறுர்கள். அவர்களைத் தடுக்க இன்ஜங்கிஷன் என்னுங் கட்டளை பெறுவதற்கு பங்குக்காரர்களில் யாராவது வியாச்சியந்தொடரலாம்.

க்ஜிக்கியூட்டராகிய எ-என்பவன் துர்நடத்தையினலாவது கடனி சக்தியில்லாமையினலாவது இறந்துபோனவனுடைய சொத்துக்கு ண்டுபண்ணுகிருன். அந்தசொத்தை அடையவொட்டாமல் அவனைத் ற்குக் கோர்ட்டார் இன்ஜங்கிஷன் என்னும் கட்டளை கொடுக்கலாம்.

பி-என்பவனுக்குத் திரஸ்ட்டியாகிய எ-என்பவன் திரஸ்ட்டு சொத் பாகத்தை அவிவேகமாய் விற்க எத்தனப்படுகிருன். ரொக்கப் பிரதி -என்பவனுக்கு தகுந்த பரிகாரம் யிருந்தபோதிலும், அவன் அந்த யைத் தடுக்க இன்ஜங்கிஷன் என்னும் கட்டளை பெறுவதற்கு வியாச் தாடரலாம்.

பி-என்பவனுக்கும் அவனுடைய மக்களுக்கும் ஒரு ஆஸ்தியை எ- ன் (விவாகத்தின்பேரிலாவது வேறே பெறுமான ஐவேஜின்பேரிலாவது படாத) பொருத்தஞ்செய்கிருன். பின்பு எ-என்பவன் அந்த ஆஸ்தி -என்பவனுக்கு விற்பதாக கந்திராக்ட்டு செய்கிருன். அந்த விற்பனை டுக்க இனஜங்கிஷன் என்னும் கட்டளை பெறுவதற்கு பி-என்பவனு வனுடைய மக்களில் எவராவது வியாச்சியந் தொடரலாம்.

எ-என்பவன் வக்கிலாக பிரவர்த்தித்துக்கொண் டிருக்கையில் அவ கட்சிக்காரனுகிய பி-என்பவனுடைய சில தஸ்தாவேஜுகள் அந்த ன் ஸ்வாதீனத்தில் வருகிறது. இந்த தஸ்தாவேஜுகளை பயிரங்கப்படுத் கவாவது அதுகளின் மத்தளிப்பை ஒரு அந்நியனுக்குத் தெரிவிக்கிற வது எ-என்பவன் மிரட்டுகிருன். அப்படிச் செய்யவொட்டாமல் எ- னைத் தடுக்க இன்ஜங்கிஷன் என்னுங் கட்டளை பெறுவதற்கு பி-என்ப ாச்சியந் தொடரலாம்.

எ-என்பவன் பி-என்பவனுக்கு வைத்தியஞ் செய்கிறவன். அவன் பவனைப் பணங் கேட்கிருன், பி-என்பவன் கொடுக்கிறதில்லையென் அதனாலே எ-என்பவன் தன்னிடத்திலே நோயாளியாக பி-என்ப தரிவித்துக்கொண்ட சங்கதிகளை வெளிப்படுத்துவதாக மிரட்டுகிருன். -என்பவனுடைய தொழிலுக்கு விரோதமாயிருக்கிறது, ஆகையால் ச் செய்யவொட்டாமல் அவனைத் தடுக்க இன்ஜங்கிஷன் என்னுங் கட் பறுவதற்கு பி என்பவன வியாச்சியந் தொடரலாம்.

அடுத்திருக்கிற இரண்டு வீடுகளின் சொந்தக்காரனுகிய எ-என்ப ன்றை பி-என்பவனுக்கு வாடகைக்கு விடுகிருன், பின்பு மற்றொன்றை ன்பவனுக்கு வாடகைக்கு விடுகிருன். சி-என்பவனுக்கு விடப்பட்ட லை பி-என்பவனுக்கு விடப்பட்ட வீட்டை சவுக்கியமாய் அனுபவிப்ப தடை யுண்டுபண்ணும்படியான மாறுதல்களை எ-என்பவனும் சி-என் ம் செய்யத் தொடங்குகிருர்கள். அப்படிச் செய்யவொட்டாமல் அவர் தடுக்க இன்ஜங்கிஷன் என்னுங் கட்டளை பெறுவதற்கு பி-என்பவன் சியந் தொடரலாம்.

) சாகுபடிசெய்கிற விதத்தைக்குறித்து வெளிப்படையான கந்திராக் றுமில்லாமல், சிலசெய்கால் நிலங்களை வியவசாயத்திற்காக எ-என் பி-என்பவனுக்கு வாடகைக்குவிடுகிருன். அந்த டிஸ்திரிக்ட்டில் வழக் சாகுபடிசெய்கிற விதத்திற்கு விரோதமாய் பி-என்பவன் அந்த நிலங் அதுகளுக்குக் கெடுதியாகவும் வேருடு களைவதற்கு அநேகவருஷம் றதாகவுமிருக்கிற விரையை விரைப்பதாக மிரட்டுகிருன். அந்த நிலங் வியவசாயரீதியாய் உபயோகிப்பதற்கு பி-என்பவனுடைய குறிப்பான ாக்ட்டுக்கு விரோதமாய் அதுகளில் விரைக்கவொட்டாமல் அவனைத் தடு ன்ஜங்கிஷன் என்னுங் கட்டளை பெறுவதற்கு எ-என்பவன் வியாச்சியந் ரலாம்.

) இஷ்டமானபோது கூட்டுப்பங்கு முடிவாகும்படி எ-பி-சி-என்ப பங்குக்காரர்களாய்ச் சேர்ந்தார்கள். கூட்டுப்பங்கு சொத்து நாசமாவ ஏதுவான ஒரு காரியத்தைச்செய்வதாக எ-என்பவன் மிரட்டுகிருன். -என்பவர்கள் கூட்டுப்பங்கு பிரிவினை கோராமல், அந்தக்காரியத்தைச்

செய்யவொட்டாதபடி எ-என்பவனைத் தடுக்க இன்ஜங்கிஷன் என டளை பெறுவதற்கு வியாச்சியந் தொடரலாம்.

(m) இறந்துபோன தன்புருஷனுடைய சொத்து ஸ்வாதீனமா ஒரு ஹிந்துவிதந்துவாகிய எ-என்பவள் தான்செய்வது நியாயமென்பத தொரு தகுந்த முகாந்தரமில்லாமல் அந்தசொத்தைப் பாழ்செய்கிறாள், இனி பாத்தியஸ்தனுகப் போகிறவன் அவளைத் தடுக்க இன்ஜங்கிஷன் எ கட்டளை பெறுவதற்கு வியாச்சியந் தொடரலாம்.

(n) எ-பி-சி-என்பவர்கள் ஒரு அவிபக்த ஹிந்துகுடும்பத்தைச் தவர்கள். எ-என்பவன் குடும்பசொத்தில் வளருகிற மரத்தை ரான், குடும்பவீட்டில் ஓர் பாகத்தை அழிப்பதாகவும் குடும்ப தட்டு மு மான்களில் சிலதை விற்பதாகவும் மிரட்டுகிறான், அவனைத் தடுக்க கிஷன் என்னும் கட்டளை பெறுவதற்கு பி-சி-என்பவர்கள் விய தொடரலாம்.

(o) கல்கத்தாவில் சிலவீடுகளுக்குச் சொந்தக்காரனாகிய எ-எ கடனிறுக்கச் சக்தியற்றவனாகிறான். அதுகளை பி-என்பவன் ஆபீஷியல் யினிடத்திலிருந்து விலைக்குவாங்கி ஸ்வாதீனஞ் செய்துகொள்ளுகிறான் என்பவன் அக்கிரமமாய்ப் பிரவேசித்து அந்த வீடுகளைப் பிடிவாதமாய் ப்படுத்துகிறான், அதினாலே பி-என்பவன் அதிகசெலவுசெய்து அந்த தீனத்தைக் காப்பாற்றிக்கொள்ள மனிதர்களை வைக்கவேண்டியவ பின்னும் அக்கிரமமாய் பிரவேசிக்கும்படியான காரியங்களைச் செய்ய டாமல் தடுக்க இன்ஜங்கிஷன் என்னுங் கட்டளைப்பெறுவதற்கு பி-எ வியாச்கியந் தொடரலாம்.

(p) ஒரு கிராமக்குடிகள் எ-என்பவனுடைய நிலத்தின்மேல் வ பாத்தியதைக்கு தாவாசெய்கிறார்கள். அவர்களில் அநேகர்பேரில் பட்ட வியாச்சியத்திலே, எ-என்பவனுடைய நிலம் அப்படிப்பட்ட யதைக்குள்ளான தல்லவென்று அவன் ஸ்தாபனை டிக்கிரி பெற்றுக்கொ ரான். பின்பு மற்ற கிராமத்தாரில் ஒவ்வொருவனும் அந்த நிலத்தின் அவனவனுக் குண்டாயிருப்பதாகச் சொல்லப்பட்ட வழிநடைபாத்தியன தடைசெய்ததற்காக எ-என்பவன்பேரில் வியாச்சியந்தொடருகிறான். களைத்தடுக்க இன்ஜங்கிஷன் என்னும் கட்டளை பெறுவதற்கு எ-எ வியாச்சியந்தொடரலாம.

(q) கடன்கொடுத்தவனாகிய பி-என்பவன் ஒரு கட்சிக்காரனாயிரா மினித்ரேஷன் வியாச்சியத்திலே எ-என்பவன் சி-என்பவனுடைய தை பரிபாலனஞ் செய்வதற்காக டிக்கிரி பெறுகிறான். பி-என்பவன் னுக்காக சி-என்பவனுடைய ஆஸ்தியின்பேரில் தொடருகிறான், பி- வனைத் தடுக்க இன்ஜங்கிஷன் என்னுங் கட்டளை பெறுவதற்கு எ-என் வியாச்சியந் தொடரலாம்.

(r) எ-பி-என்பவர்கள் ஒன்றுக்கொன்று அடுத்திருக்கிற நிலங் அவற்றின் கீழிருக்கிற கனிகளும் ஸ்வாதீனமுள்ளவர்களா யிருக்கிற எ-என்பவன் தன்கனியை பி-என்பவனுடைய கனிக்குள் பிரவேசிக் டியாக வெட்டி, பி-என்பவனுடைய கனிக்கு ஆதரவாயிருக்கிற சில டங்களை யெடுத்துப்போடுவதாய் மிரட்டுகிறான். அப்படிச் செய்யவொட்ட அவனைத்தடுக்க இன்ஜங்கிஷன் என்னும் கட்டளை பெறுவதற்கு பி-என் வியாச்சியந் தொடரலாம்.

(s) குடியிருப்பவனாகிய பி-என்பவனுடைய தேகசவுக்கியத்திற்கு கியமாயும் நியாயமில்லாமலும் பாதகமுண்டாகும்படியாக அந்த வீட் அவ்வளவுசமீபத்திலே எ-என்பவன் மணியடிக்கிறான். அல்லது வேறே தொரு அனுவசியமான சந்தடிசெய்கிறான். சந்தடிசெய்யவொட்டாமல் ன்பவனைத்தடுக்க இன்ஜங்கிஷன் என்னும் கட்டளை பெறுவதற்கு பி- வன் வியாச்சியந் தொடரலாம்.

(t) அடுத்தவீட்டில் வியாபாரம் நடத்திக்கொண்டிருக்கிற பி-சி-என்பவர்களுடைய சரீரசவுக்கியத்திற்கு முக்கியமாய் பாதகமுண்டாகும்படி எ-என்பவன் புகையினாலே ஆகாயத்தைக் கெடுக்கிறான். அப்படி கெடுப்பதைத்தடுக்க இன்ஜங்கிஷன் என்னும் கட்டளை பெறுவதற்கு பி-சி-என்பவர்கள் வியாச்சியந் தொடரலாம்.

(u) எ-என்பவன் பி-என்பவனுடைய பேடெண்டு என்னும் உரிமை சுதந்தரத்திற்கு விகாதஞ்செய்கிறான். அந்த உரிமைசுதந்தரம் செலாமணியானதென்றும் அதற்கு விகாதஞ்செய்யப்பட்டதென்றும் கோர்ட்டாருக்கு திருப்திகரமுண்டானால் அந்த விகாதத்தைத் தடுப்பதற்கு பி-என்பவன் இன்ஜங்கிஷன் என்னும் கட்டளைபெறலாம்.

(v) எ-என்பவன் பி-என்பவனுடைய காபிரைட்டு என்னும் சுதந்தரத்தை அபகரிக்கிறான், எதற்கு காபிரைட்டு என்னுஞ் சுதந்தரம் தாவாசெய்யப்படுகிறதோ அந்த கிரந்தமானது அவதூறானதாகவாவது காமாதுரமானதாகவாவ திருந்தாலொழிய, அந்த அபகரித்தலைத் தடுப்பதற்கு பி-என்பவன் இன்ஜங்கிஷன் என்னுங் கட்டளைபெறலாம்.

(w) எ-என்பவன் பி-என்பவனுடைய வர்த்தக அடையாளத்தை அக்கிரமமாய் உபயோகிக்கிறான். அந்த வர்த்தக அடையாளத்தை பி-என்பவன் உபயோகிப்பது யோக்கியமாயிருக்குமாகில், அக்கிரமமாய் உபயோகிக்கிரவனைத் தடுப்பதற்கு பி-என்பவன் இன்ஜங்கிஷன் என்னும் கட்டளைபெறலாம்.

(x) ஒரு வர்த்தகனாகிய எ-என்பவன் பி-என்பவனுடைய இஷ்[...]
துக்கு விரோதமாயும் அவனுடைய உத்தரவுபெருமலும் அவனை தன் பங்[...]
காரனென்று எடுத்துச் சொல்லுகிறான். அப்படிச் சொல்லவொட்டாமல்[...]
என்பவனைத் தடுக்க இன்ஜங்கிஷன் என்னுங் கட்டளை பெறுவதற்கு பி-[...]
வன் வியாச்சியந் தொடரலாம்.

(y) மிகவும் சிறப்புற்றவனாகிய எ-என்பவன் இல்வாழ்க்கை விஷ[...]
ளைக்குறித்து பி-என்பவனுக்குக் கடிதங்கள் எழுதுகிறான். எ-பி-என்பவ[...]
இறந்தபின்பு, பி-என்பவனுடைய மரணசாஸனமூலமாய் மிகுதிசொத்து [...]
கிற சி-என்பவன் எ-என்பவனுடைய கடிதங்களைப் பிரசுரஞ்செய்து பணம்[...]
பாதிக்கப் பிரேரேபனை செய்கிறான். எ-என்பவனுடைய எக்ஜிக்கியூட்டரா[...]
டி-என்பவனுக்கு அந்தக்கடிதங்களில் சொத்துவமிருக்கிறது, அவன் அதுக[...]
பிரசுரஞ் செய்யவொட்டாமல் சி-என்பவனைத் தடுக்க இனஜங்கிஷன் என்[...]
கட்டளை பெறுவதற்கு வியாச்சியந்தொடரலாம்.

(z) எ-என்பவன் ஒரு தொழிற்சாலை வைத்துக்கொண்டிருக்கிறான், பி[...]
பவன் அவனுடையசகாயி. அவனுடைய தொழில் மார்க்கத்[...]ல் எ-என்ப[...]
பி-என்பவனுக்கு ரகசியமாயிருக்கிற பெறமான ஒரு செய்முறையைக் கற்று[...]
கொடுக்கிறான். பின்பு பி-என்பவன் நீ பணங்கொடுக்கமாட்டேனெனால், தொ[...]
ழிற்சாலை வைத்துக்கொண்டிருக்கிற போட்டிக்காரனாகிய சி-என்பவனு[...]
அந்த செய்முறையைச் சொல்லிவிடுவேனென்று மிரட்டி எ-என்பவனைப் ப[...]
கேட்கிறான். அந்த செய்முறையை வெளிப்படுத்தவொட்டாமல் பி-என்பவ[...]
தடுக்க இன்ஜங்கிஷன் என்னும் கட்டளைபெறுவதற்கு எ-என்பவன் வியாச்[...]
தொடரலாம்.

௫௫. யாதொரு உடன்பாட்டை மீறுவதைத் தடுப்பதற்க[...]
கோர்ட்டார் நிறைவேற்[...]க்கக்கூடுமான [...]
காரியங்களை நிறை[...]படி நிர்ப்பந்தி[...]
வேண்டி யிருக்[...]கோர்ட்டார் த[...]
ளுக்கு யுக்தமா[...]னால், முறையிட[...]
ளை நிறைவேற்ற[...]

உடன்படுத்துகிற கட்டளை.

பட்ட மீறுதலைத்தடுக்கவும், அவசி[...]
படி நிர்ப்பந்திக்கவ[...]ன்ஜ[...]ளைகொடுக்கலா[...]

௧௮௭௭ஆம் வருஷத்து ௧-வது ஆக்ட்டு.

திருஷ்டாந்தம்.

(a) இந்தியன் லிமிட்டேஷன் ஆக்ட்டு ௬-ம் பாகத்தின்படி அனுகி உபயோகிப்பதற்கு பி-என்பவன் சுதந்தரமடைந்திருக்கிற வெளிச்சத்தை எ-என்பவன் புது கட்டடங்களினாலே தடுக்கிறான். கட்டடவேலையை நடத்தவொட்டாமல் எ-என்பவனை தடுப்பதற்குமாத்திரமல்லாமலும், அதுகளில் எவ்வளவு பி-என்பவனுடைய வெளிச்சத்திற்குத் தடையாகிறதோ அவ்வளவை இடித்துப்போடும்படிக்கும், பி-என்பவன் இன்ஜங்கிஷன் என்னும் கட்டளைபெறலாம்.

(b) பி-என்பவனுடைய நிலத்துக்குமேலாக இறப்புகள் பிதுங்கியிருக்கும்படி எ-என்பவன் ஒருவீடு கட்டுகிறான், இந்த இறப்புகளில் அப்படி பிதுங்கியிருப்பவைகளை இடித்துப்போடும்படி இன்ஜங்கிஷன் என்னுங்கட்டளை பெறுவதற்கு பி-என்பவன் வியாச்சியந்தொடரலாம்.

(c) ௫௪-வது பிரிவுக்கு (i) குறிப்பு திருஷ்டாந்தமாகச் சொல்லப்பட்ட விஷயத்தில், வைத்தியம் செய்கிறவனாகிய எ-என்பவனிடத்திலே நோயாளியாக பி-என்பவன் தெரிவித்துக்கொண்ட எழுத்துமூலமான சகலசங்கதிகளையும் அழித்துப்போடும்படி கோர்ட்டார் உத்தரவுஞ்செய்யலாம்.

(d) ௫௪-வது பிரிவுக்கு (y) குறிப்பு திருஷ்டாந்தமாகச் சொல்லப்பட்ட விஷயத்தில், எ-என்பவனுடைய கடிதங்களை அழித்துப்போடும்படி கோர்ட்டார் உத்தரவுஞ்செய்யலாம்.

(e) இந்தியன் பினல்கோட் ௨௧-ம் அத்தியாயத்தின்படி தெண்டிக்கப்படத்தக்கதாயிருக்கிற பி-என்பவனுக்குச் சம்பந்தமான சங்கதிகளைப் பிரசுரஞ்செய்வதாய் எ-என்பவன் மிரட்டுகிறான், அதினாலே பி-என்பவனுடைய சொத்துக்குக் கெடுதியில்லையென்று ருஜூப்படுத்துவதாயிருந்தபோதிலும் அந்தப்பிரசுரத்தைத் தடுப்பதற்கு கோர்ட்டார் இன்ஜங்கிஷன் என்னும் கட்டளைகொடுக்கலாம்.

(f) பி-என்பவன் தான் கூடாவொழுக்கத்தில் பிரவர்த்தித்தானென்று அவனுடைய வைத்தியனாகிய எ-என்பவனுக்கு எழுதியிருக்கிற கடிதங்களை பிரசுரஞ்செய்வதாய் எ-என்பவன் மிரட்டுகிறான். அந்தப் பிரசுரத்தைத் தடுப்பதற்கு பி-என்பவன் இன்ஜங்கிஷன் என்னும் கட்டளைபெறலாம்.

(g) ௫௪-வது பிரிவுக்கு (v) (w) குறிப்பு திருஷ்டாந்தங்களாகவும் இந்தப் பிரிவுக்கு (e) (f) திருஷ்டாந்தங்களாகவும் சொல்லப்பட்ட விஷயங்களிலே, பிரதிவாதியே அதிலதில் கண்டிருப்பதாகிய சுதந்தரத்தை அபகரித்து உண்டுபண்ணப்பட்ட பிரதிகளையும், வர்த்தக அடையாளத்தையும், சங்கதிகளையும், கடிதங்களையும் கொடுத்துவிடும்படிக்காவது அழித்துப்போடும்படிக்காவது கோர்ட்டார் உத்தரவுஞ்செய்யலாம்.

என்ன படிக்கானால் இன்ஜங்கிஷன் என்னும் கட்டளை கொடுக்க மறுப்பது. ௫௬. இன்ஜங்கிஷன் என்னுங் கட்டளை யானது.—

(a) விவகார கிரந்தங்களைப் பெருகவொட்டாமல் தடுப்பதற்கு அப்படிப்பட்ட நிர்ப்பந்தம் அவசியமாயிருந்தாலொழிய, இன்ஜங்கிஷன் என்னும் கட்டளை கேட்டுக்கொள்ளுகிற வியாச்சியந் தொடருவதற்கு [illegible]ந்துகொண்டிருக்கிற நீதிவிவகார நடவடிக்கையை நி[illegible]வது;

(b) எந்தக்கோர்[illegible]ங்கிஷன் என்னும் கட்டளை கேட்டுக் கொள்ளப்[illegible]ழ்ப்[illegible]க யாதொரு கோர்